மஞ்சரி

நந்தன - ஐப்பசி

அக்டோபர், 1952

அமெரிக்கத் தேர்தல்
ஈரான் சூத்திரதாரி
இந்திய ஜனத்தொகை
ரேடியோ ஒலிப்பதிவு
அம்மன் அருள் (கதை)

-6-
அணா

என்ன யோசனை?

இதோ என் கண் முன்னே சாவும் பந்தமும் உறுத்திக்கொண்டு நிற்கும்போது, வானத்து நட்சத்திர ரகஸ்யங்களைப்பற்றி நான் எப்படிச் சிந்திப்பேன்?

—பைதாகரஸுக்கு அனெக்ஸிமெனீஸ் எழுதியது.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
சீதா தேவி
கௌரி அம்மாள்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, சங்கர், மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதாரர்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 5] நந்தன - ஐப்பசி :: அக்டோபர் 1952 [இதழ் 11

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

‘கரை போட்ட வேஷ்டி, சேலைகளைக் கை நெசவுக்காரர்களே தயாரிக்க வேண்டும். மில்கள் அவற்றைத் தயாரிக்கக் கூடாதென்று தடை விதிக்க வேண்டும்’ என்று ராஜாஜி சொன்னார். ராஜாஜி சொல்வது சரியல்ல என்று சொன்னார் மத்திய சர்க்கார் மந்திரி டி. டி. கிருஷ்ணமாசாரியார். இதைக் கொண்டு, ராஜாஜி பிற்போக்கானவர் என்றோ, டி. டி. கே. முற்போக்கானவர் என்றோ எவரும் நினைக்க வேண்டியதில்லை. இன்று எண்ணற்ற கைத்தறியாளர்கள் வருவாயற்றுத் தவிக்கிறார்கள். அவர்களுடைய ஜீவனத்துக்கு வழி வேண்டும். கரை போட்ட சேலைகளையும் வேஷ்டிகளையும் விட்டு வேறு எத்தனையோ ரக ஜவுளிகளைத் தயாரித்துக் கொண்டே மில்கள் செழித்திருக்க முடியும். ஆகவே, இன்றைய நிலைமைக்குப் பரிகாரமாக ராஜாஜி சொல்லும் யோசனையை மத்திய சர்க்கார் ஏற்பதே நியாயம். ஏற்கும் என்று எதிர்பார்ப்போம்.

* * *

‘சார்லி,’ ‘சார்லி’ என்று உலகெங்கும் கொண்டாடும் உன்னத நடிகர் சார்லி சாப்ளின். பிறப்பால் அவர் பிரிட்டிஷ்காரர். ஆனால், எத்தனையோ வருஷங்களாக அமெரிக்காவில் இருந்துகொண்டு, உயர்ந்த ஸினிமாப் படங்கள் பலவற்றைப் பிடித்தவர். என்றாலும், அமெரிக்கப் பிரஜையாகத் தம்மை அவர் பதிந்துகொள்ளவில்லை. இதனாலும் அவருடைய சொந்த வாழ்க்கை பற்றிய சில விஷயங்களாலும் அவரிடம் பல அமெரிக்கருக்குக் கோபம். கம்யூனிஸ்ட் என்று சொல்லி, அவரை நாட்டை விட்டுக் கிளப்ப உத்தரவுகூடச் சர்க்கார் விதித்துவிட்டார்கள். இப்போது அவர் இங்கிலாந்துக்கு வந்திருக்கிறார். திரும்பவும் அமெரிக்காவுக்குச் செல்லத்தான் எண்ணியிருக்கிறார். அவருக்கு விதித்த பிரஷ்ட உத்தரவு செல்லுபடியாகுமா, இல்லையா என்பது விசாரணையில் இருக்கிறது. அதன் முடிவு எப்படியானாலும் சரி, சார்லியைப் போல் சிறந்த கலைஞர் ஒருவரை இழப்பது அமெரிக்காவுக்குத்தான் நஷ்டம்.

* * *

எகிப்து நாடு பல வருஷகாலம் பிரிட்டனின் ஆதிக்கத்தில் இருந்

தது. இந்தியாவைப் போல்தான் அங்கேயும் பலத்த விடுதலைப் போராட்டம் நடந்தது. அது 1923 - இல் விடுதலை பெற்றது. விடுதலைக்குப் போராடிய தேச பக்தர் வப்து கட்சியார். அவர்களுடைய சிறந்த தலைவர் நஹாஸ் பாஷா. இப்போது அரசாங்கத்தை ராணுவத் தலைவர் நஜீப் கைப்பற்றிப் பிரதம மந்திரியாகியிருக்கிறார். அரசரை நாட்டை விட்டு வெளியேற்றிவிட்டார். அரசியல் கட்சிகளிலெல்லாம் ஊழல் மலிந்திருப்பதைக் களைய நடவடிக்கை எடுத்தார். வப்து கட்சியையும் சீர்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தினர். ஆனால், அந்தக் கட்சிக்கு நஹாஸ் தலைவராக இருக்கக் கூடாது என்கிறார். இதுதான் வியப்பைத் தருகிறது. காந்தி வேறு, காங்கிரஸ் வேறு என்று யாராவது சொல்லியிருந்தால் எப்படியிருக்கும்? அப்படித்தான் இருக்கிறது இது. வப்து கட்சியின் ஜீவனைப் போன்றவர் நஹாஸ். உடலிலிருந்து ஜீவனைப் பிரிக்க முடியுமா? எகிப்தின் இன்றைய நிலை என்னவோ தெளிவில்லாமல் இருக்கிறது. நஜீப் ஒரு சர்வாதிகாரியாக முயல்கிறாரா? அல்லது நாட்டைக் காப்பாற்ற வந்த வீரரா? அவருடைய செயல்கள், சத்திர சிகிச்சை செய்யும் ரணவைத்தியத்தைப் போல் நலம் புரியுமா? அல்லது தீமைதான் விளைக்குமோ? காலப்போக்கில் தான் பலன் தெரியும்.

* * *

பிஹாரில் மொகாமே என்ற இடத்தில் கங்கைக்கு ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று ஸ்ரீ எம். விசுவேசுவரையா சிபார்சு செய்தார். இந்தியப் போக்குவரத்து போர்டார் இதை இப்போது ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ரெயில் வண்டியும், சாதாரண வண்டிகளும் போகக் கூடியபடி மிகப் பெரியதாக இருக்குமாம் அந்தப் பாலம். கங்கைக்குப் பாலம் கட்டுவதென்றால், சாமானியமான காரியமா? பத்துக் கோடி ரூபாய் செலவில் அதைக் கட்டத் திட்டம் போட்டிருக்கிறார்கள். இந்தப் பாலத்தை எத்தனையோ நாளைக்கு முன் கட்டியிருக்க வேண்டும். இப்போதாவது கட்டத் தீர்மானித்தார்களே, அதுவரைக்கும் சந்தோஷப்பட வேண்டியதுதான்.

தேசத்தின் மதிப்பு !

“போப் ஆண்டவரின் தலைநகருக்கு ஒரு ஸ்தானிகரை அனுப்புங்கள்” என்று யாரோ ருஷியத் தலைவர் ஸ்டாலினுக்கு யோசனை சொன்னாராம்.

“போப் ஆண்டவரா? அவரிடம் எத்தனை டிவிஷன் ராணுவம் இருக்கிறது?” என்று ஸ்டாலின் கேட்டாராம்.

படைப் பலத்தைக் கொண்டே இன்று தேசங்களை மதிப்பிடுகிறார்கள். என்ன வேடிக்கை!

[இந்த விவரம் இந்தியப் பத்திராசிரியர் மகாநாட்டில் டாக்டர் ராதாகிருஷ்ணன் சொன்னதாகத் ‘தினமணி’ச் செய்தி ஒன்று கூறுகிறது.]

யானை பிடிக்கும் குழி

★

இந்த 1952 பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் மட்டும் திருவாங்கூரில் 9 யானைகளைப் பிடித்துவிட்டார்கள். அங்கே எப்படி யானை பிடிக்கிறார்கள் என்ற விஷயத்தை விளக்குகிறது இந்த விவரம்.



இந்தியாவிலுள்ள பல்வேறு ராஜ்யங்களில் காடுகளிலிருந்து யானைகளைப் பிடிக்கப் பற்பல முறைகளைக் கையாளுகிறார்கள். மைசூரில் காட்டுயானைகளைப் பிடிக்கக் 'கெதா' என்ற ஒருவிதக் கூண்டை உபயோகிக்கிறார்கள். அங்கே யானைகளைத் துரத்தி இந்தக் கூண்டுகளுக்குள் ஏறச்செய்து அவற்றைப் பிடிக்கிறார்கள். ஆனால் திருவாங்கூர் ஸம்ஸ்தானத்திலுள்ள காடுகளின் இயற்கையமைப்பு இந்த முறையைக் கையாள அநுகூலமானதல்ல. இங்கே யானைகளைப் பிடிக்கும் விதம் வேறு. யானைகளின் வாசஸ்தலங்களுக்கு அருகில் பெரிய குழிகளை வெட்டி அவைகள் வெளியே தெரியாதிருக்கும்படி மறைத்து விடுகிறார்கள். கவனக் குறைவாக அங்குமிங்கும் அலைந்து திரியும் யானைகள் இந்தக் குழிகளில் தற்செயலாக விழுந்து விடுகின்றன. பின்பு பழகிய நாட்டு யானைகளின் உதவியால் அவைகளைக் குழிகளிலிருந்து கரையேற்றுகிறார்கள்.

முன்னே ஸம்ஸ்தானத்தில் பல இடங்களிலிருந்து யானைகளைப் பிடித்தார்கள். ஆனால் இப்போது பல காரணங்களால் யானைக் கூட்டங்கள் மலைகளிலுள்ள அடர்ந்த காடுகளுக்குச் சென்றுவிட்டன: முன்காலத்தில் யானைகள் பிடிபட்டு வந்த அநேக இடங்களில் தற்போது அவைகள் அகப்படுவதில்லை. கோனி, மலையாற்றூர் என்ற இரண்டு இடங்களில் மட்டுமே இப்போது யானைகளைப் பிடிக்கிறார்கள்.

சென்ற இரண்டு வருஷங்களாகக் கோனி டிவிஷனிலிருந்துதான் யானைகளைப் பிடித்து வருகிறார்கள். அச்சன்கோவில் ஆற்றின் கரைகளிலும், அதன் உபநதிகளின் கரைகளிலுமுள்ள கோனி, அச்சன்கோவில் ரிசர்வ் காடுகள் யானை பிடிப்பதற்கு மிகவும் பொருத்தமான இடங்கள். இந்தக் காடுகளில் யானைகள் கூட்டங் கூட்டமாகத் தீனி தேடிச் சஞ்சரிக்கின்றன. இரவு வேளைகளில் அவைகள் இப்படி

மூலம்: திருவிதாங்கூர்-கொச்சிச் செய்தி (தமிழ்; 1-8-'52) திருவனந்தபுரம்.

அலையும்; பகலில் இளைப்பாறும். குறிப்பிட்ட சில பாதைகள் வழியாகத்தான் அவைகள் சஞ்சரிக்கின்றன. தீனி தேடிப் போகும்போது பாதைகளை விட்டு விலகுவதில்லை. கோடைக் காலத்தில் நடுக்காடுகளிலுள்ள சிறிய நீரோடைகளும் குழிகளும் தண்ணீரற்று வறண்டு போகும்போது யானைகள் கூட்டங் கூட்டமாகத் தாகம் தீர்த்துக்கொள்ளவும் குளிக்கவும் ஆறுகளைத் தேடிப்போகும். அவை வழக்கமாகச் சஞ்சரிக்கும் பாதைகளில் ஒரு முக்கோணத்தின் மூன்று முனைகள்போல் மும்மூன்று குழிகளை வெட்டுவார்கள். பன்னிரண்டு அடி ஆழமுள்ள இந்தக் குழிகளின் மேல்பாகம் 12 அடியும், கீழ்ப்பாகம் 9 அடியும் விட்டமுள்ளவையாக இருக்கும். குழிகளின் பக்கங்கள் மேலேயிருந்து கீழே சரிவாக இருக்கும். யானைகள் உள்ளே விழும்போது அவைகளுக்கு அபாயம் நேரிடாமல் இருக்கும்படி குழிகளின் கீழ்ப்பாகம் புல்லையும் இலை கொடிகளையும் பரப்பியிருப்பார்கள். பாதைகளின் குறுக்கே குழி இருக்குமோ என்று யானைகளுக்குச் சந்தேகம் தோன்றாமலிருப்பதற்காகக் குழிகளிலிருந்து தோண்டி எடுக்கும் மண்ணை அருகில் போடாமல் அப்புறப்படுத்தி விடுகிறார்கள்; அல்லது மண்ணைப் பரப்பி அந்த இடங்களில் புல்லோ இலை தழைகளோ போட்டு மண் வெளியே தெரியாதபடி மறைத்து விடுகிறார்கள். பின்னர் மூங்கில் பிளாச்சுகளைக் குழிகளின் மேல் பாகத்தில் அடுக்கிவைப்பார்கள். அவைகளை வெளியே தெரியாதபடி இலைகளால் மூடுவார்கள். அபாயம் இருப்பதாகச் சந்தேகம் தோன்றாமலிருக்கவே இப்படிச் செய்கிறார்கள். குழிகளுக்குச் சமீபமாக யானைக் கூட்டங்கள் வரும்போது அவைகளைப் பயமுறுத்தித் துரத்துவார்கள். ஓடுகிற யானைகளில் ஒன்றிரண்டு, குழிகளில் விழுவது திண்ணம். யானை குழியில் விழுந்திருப்பதாகத் தெரிந்தவுடன், யானை பிடிப்பவர்கள் பழகிய யானைகளுடன் குழிகள் உள்ள இடங்களுக்கு விரைந்து போவார்கள். அவர்களிடம் ஒருவித மரத்தின் வலுவான நாரினால் திரித்த வடங்கள் இருக்கும். அவை 25 அடி முதல் 35 அடி நீளமுள்ளவையாக இருக்கும். எவ்வளவு பலமாக இழுத்தாலும் அவை அறுந்து போவதில்லை. குழியில் விழுந்த யானை கொம்புகளால் குத்தியும், கால்களால் மிதித்தும், குழியின் பக்கங்களை இடித்துத் தள்ளிவிட்டு வெளியேற மிகவும் கடுமையாக முயலும். பெண் யானையோ ஆண் யானையோ எதுவானாலும் ஆறு முதல் எட்டுமணி நேரம் வரை குழியில் விட்டிருந்தால் தப்பி ஓடிவிட முடியும். அதனால் பழகிய யானைகளைக் கொண்டுவந்து உடனேயே, முதலாவதாக அருகில் நிற்கும் பெரிய மரங்களை வெட்டி வீழ்த்துவார்கள். குழிக்குக் குறுக்கே போட்டு யானை தப்பி ஓடிவிட முடியாதவிதத்தில் கட்டிப்போடுவார்கள். யானைக்குக் குழியில் தீனி போடுவார்கள். தீனி தின்னும் சமயம் குழியை இடித்து மட்டப்படுத்த எடுத்துக்கொண்ட முயற்சிகளிலிருந்து அதற்குச் சொற்பநேரம் விடுதலையும் இளைப்பாறுதலும் கிடைக்கின்றன.

அடுத்தபடியாக யானையை வடத்தால் கட்டுவார்கள். இதற்கு உதவியாக முதலில் யானை

யின் உயரத்தை அளப்பார்கள். யானையின் கழுத்தில் சரியாகப் பொருந்தத்தக்க ஒரு கண்ணியை வடத்தில் முடிவார்கள். கட்டுக் கொஞ்சம் பெரியதாகப் போய் விடுமானால் யானை தப்பி ஓடிவிடும். கட்டின் அளவு சிறியதாகி விடுமானால் சுவாசம் தடைப்பட்டு யானை உயிரிழக்கவும் நேரிடலாம். யானையின் காலை இரண்டுமுறை சுற்றிக்கொள்ளத் தேவையான அளவு வடத்தால் கழுத்தை ஒரு முறை சுற்றலாம். இது யானையின் உயரத்தில் முக்காலேயரைக் கால் பாகமாகும். சுருக்கிட்ட வடம் தயாரான பின்பு, குழிக்குள்ளே கொஞ்சங் கொஞ்சமாகத் தண்ணீர் விடுவார்கள். அப்போது யானை தன் துதிக்கையை உயர்த்திக்கொண்டே நிற்கும். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, சுருக்கிட்ட வடத்தைத் துதிக்கையின் வழியாகக் கழுத்தில் மாட்டிவிடுவார்கள். அதற்குப் பின் காலைக் கட்டுவதற்காகச் சுருக்கிட்ட மற்றொரு வடத்தைக் குழியில் இறக்குவார்கள். அந்தச் சுருக்கினுள் யானை தன் பின்னங் காலை மிதிக்கும்போது வடத்தை இழுத்துவிடுவார்கள். அப்போது கட்டு இறுகும். கழுத்தில் போடும் கட்டின் இரண்டு பக்கங்களிலும் நீளமான இரண்டு வடங்கள் இணைத்திருப்பார்கள். காலில் கட்டிய வடத்தின் ஒரு முனையைச் சமீபத்தில் நிற்கும் ஒரு மரத்தில் கட்டுவார்கள். பின்பு குழியில் கொஞ்சங் கொஞ்சமாக மண் போட்டு அதை நிரப்புவார்கள். குறுக்கே வைத்திருந்த தடிகளை அகற்றுவார்கள். உள்ளே போடும் மண், யானை வெளியேறுவதற்கு வசதியான உயரத்துக்கு வரும்போது, யானை அதிகக் கஷ்டமில்லாமல் வெளியேறிவிடும். இந்தச் சமயத்தில் பழகிய யானைகளும், யானை பிடிப்போரும் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். யானை வெளியேறிச் சுற்றிலும் நிற்கும் யானைகளையும் ஆட்களையும் காணும்போது மருண்டுவிடும். "காட்டில் சுதந்தரமாகச் சுற்றித் திரிய இனி முடியாதே; அடிமையாக வாழ வேண்டியிருக்குமே" என்ற எண்ணங்கள் மனத்தில் தோன்றி, துக்கமேலீட்டால் அது சத்தமிடுகிறது. இந்தச் சத்தம் அநேக மைல் தூரம் கேட்கும். தப்பி ஓடவழி ஒன்றும் தோன்றாமல் நிற்கையில், திடீரென்று அது தன் பலம் முழுவதையும் உபயோகித்து முன்னால் ஓடப் பிரயாசைப்படும். ஆனால் தன் முயற்சிகள் வீண் என்று அது உடனேயே புரிந்து கொள்ளும். ஏனென்றால், பழகிய இரண்டு யானைகள், காட்டு யானையினுடைய கழுத்தின் இரு புறமுமுள்ள வடங்களை மிகப் பலமாக இழுத்துப் பிடித்துக்கொள்கின்றன. காலில் கட்டியிருக்கும் வடத்தை மற்றொரு யானை மிகப் பலமாகப் பிடித்து வைத்துக்கொள்கிறது. அங்குமிங்கும் அசைய முடியாமல் கட்டுண்ட காட்டு யானை, நாட்டு யானைகளுடன், மெதுவாக ஆற்றை நோக்கிப் போகிறது. அதற்குப்பின் அதைக் கூட்டில் அடைத்துப் போட்டு, பிற நாட்டு யானைகளைப் போலப் பழக்குகிறார்கள். குழியில் விழுகிற யானை, மிகப் பெரியதாகவோ, அதிக வயதானதாகவோ, அதிக மூர்க்க குணம் உள்ளதாகவோ இருக்குமானால் அதை வெளியேற்றி விடுவித்து விடுவார்கள்.

ராமனின் பிரதிக்ஞை ★



இந்திரஜித்து இறந்த செய்தியைக் கேட்டதும் ராவணன் தன் நினைவு இழந்தான். அது தெளிந்து எழுந்ததும், "மகனே, நீ பாணத்தால் எமனைக் கூட வென்றுவிடுவாயே! உனக்கு லட்சுமணன் ஒரு துரும்புமாதிரி. அவன் உன்னைக் கொன்றானென்றால், நானும் எமனிடம் மதிப்பு வைக்க வேண்டியதுதான். இனித் தேவர்கள்பாடு கொண்டாட்டமாகத்தான் இருக்கும். அவர்கள் பயமற்றுத் தூங்குவார்கள். நீ போனதால் இந்த மூன்று உலகமும் எனக்குப் பாலைவனம்போல் ஆகிவிட்டன. நீதானே எனக்கு ஈமச் சடங்கு செய்ய வேண்டும்? இப்போது நான் உனக்குச் செய்யும்படி ஆகிவிட்டதே!" என்று புலம்பினான்.

மகனை இழந்த வருத்தம் கோபமாக மாறியது. சீதையினால்தானே இது ஏற்பட்டது என்று அவளைக் கொல்ல அசோகவனத்துக்குப் புறப்பட்டான். பல மந்திரிகள் அவன் பின்னால் சென்று அவனைத் தடுத்தார்கள். அவர்களை உதறித் தள்ளிவிட்டு அவன் சீதையை நோக்கி விரைந்தான். இதைக் கண்ட சீதை, "இதோ ராவணன் என்னைக் கொல்லவே இங்கே வருகிறான். என் அற்பபுத்தியால் முன்னே ஹநுமான் சொன்னபடி அவன் முதுகில் ஏறிப் போயிருந்தேனானால் இன்று என் கணவரின் மடியில் சுகமாக இருந்திருப்பேனே! ஒரு வேளை ராமலட்சுமணர்களை இவன் கொன்றிருப்பானோ? ஐயோ, தன் ஒரே மகன் போரில்

உலகில் சிறந்த ஆதி இலக்கியம் வால்மீகி ராமாயணம். அதன் சாரம் ஒவ்வொரு பகுதியாக 'மஞ்சரி'யில் வெளிவருகிறது.

இறந்த செய்தியைக் கேட்டால் கௌசல்யையின் நெஞ்சு வெடித்து விடுமே! ராமபிரான் பிறப்பதற்காக அவள் என்ன என்ன தர்மகாரியமெல்லாம் செய்திருப்பாள்! அவைகளை எண்ணிப் பார்ப்பாள்; பிறகு அவருக்கு ஈமச் சடங்குகளைச் செய்துவிட்டுத் தீயிலோ நீரிலோ குதித்து உயிரைவிடுவாள். கெட்ட எண்ணமுள்ள அந்தக் கூனியால் தானே இவ்வளவும் நேர்ந்தது'' என்று எண்ணமிடலானாள்.

அப்போது சுபார்சுவன் என்ற மந்திரி எப்படியோ சமாளித்து ராவணனைத் தடுத்து, ''அரசே, தாங்கள் எவ்வளவோ படித்தும் ஒரு பெண்ணைக் கொல்ல வருவது தகுதியா? இவள் எவ்வளவு அழகாய் இருக்கிறாள், பாருங்கள்! ராமனைக் கொன்றுவிட்டு இவளோடு நீங்கள் மகிழ்ச்சியோடு இருக்கலாமே'' என்றான்.

ராவணனும் மனம் மாறி அரண்மனைக்குத் திரும்பினான். ராட்சசர்களை அழைத்துப் படை திரட்டிப் போர்க்களம் போகும்படி உத்தரவிட்டான். அவர்கள் மறுபடியும் ராமனோடு போராடத்தொடங்கினார்கள். ராமன் ஸம்மோகனாஸ்திரத்தைத் தொடுக்கவே, அவர்கள் அதற்கு இரையானார்கள். அவர்களுடைய மனைவிமார் அழுது புலம்புவதைக் கேட்டு ராவணன் கோபமுற்று விருபாக்ஷன், மகோதரன், மகாபார்சுவன் முதலியவர்களோடு படைகள் சூழப் போர்க்களத்துக்குப் புறப்பட்டான். கடும்போர் நடந்தது. ஒவ்வொருவராக அவனோடு வந்த அந்த மூன்று பெரிய ராட்சச வீரர்களும் இறந்தார்கள்.



ராவணன் கோபம் இதனல் பின்னும் அதிகரித்தது. அவன் பல பாணங்களை ராமன்மேல் தொடுத்தான். ராமனும் அப்படியே ராவணன்மேல் பல பாணங்களைத் தொடுத்தான். இதற்கிடையில் லட்சுமணன் ஏழு பாணங்களைத் தொடுத்து ராவணனுடைய தேர், கொடி இவற்றைச் சிதற அடித்துத் தேர்ப்பாகனின் தலையையும் அறுத்தான். ராவணனிடம் இருண்ட மேகம்போல் விளங்கிய ஏழு குதிரைகளையும் விபீஷணன் கொன்முன். எரியும் இடிபோன்ற சக்திஆயுதத்தை உடனேவிபீஷணனின்மேல் ராவணன் எறிந்தான். அதை லட்சுமணன் தன் பாணங்களால் மூன்ருகத் துண்டித்து விட்டான். மீண்டும் பெரிய தோர் ஆயுதத்தை விபீஷணனின் மேல் ராவணன் தொடுக்கப் போனுன்; லட்சுமணன் மறுபடியும் அதைத் தடுக்கப் பாணங்களை ராவணனின்மேல் பொழிந்தான். உடனே ராவணன், "நீ விபீஷணனை விடுவித்தாய் அல்லவா? இதோ இந்தச் சக்தி உன்மேலேயே விழப்போகிறது பார்" என்று சொல்லி அதை லட்சுமணன்மேல் எறிந்தான். ராமன் லட்சுமணனுக்கு எந்த விதமான தீங்கும் நேரக்கூடாது என்று உள்ளுக்குள்ளே வேண்டிக்கொண்டான். பாம்புபோல் சீறிக்கொண்டு அந்தச் சக்தி லட்சுமணனின்மேல் விழுந்தது. உடனே லட்சுமணன் இருதயம் பிளவுண்டு கீழே சாய்ந்தான். ராமன் மனங்கலங்கிச் சற்றுநேரம் கண்களில் நீர் ததும்ப நின்முன். பிறகு ஊழித் தீயைப்போல் கொதித்தெழுந்தான். "இது வருத்தப்படும் சமயமல்ல" என்று ராவணனைத் தாக்கலானுன்.

லட்சுமணனின்மேல் பட்ட சக்தியை வானரவீரர்கள் எடுக்க முயன்ருர்கள். ஆனல் முடியவில்லை. ராமன் அதை இழுத்தெடுத்து முறித்தான். ராவணன் அப்போது ராமன்மேல் பல பாணங்களைப் பொழிந்தான். ராமன் அவைகளைப் பொருட்படுத்தவேயில்லை. லட்சுமணனைத் தழுவியபடி ஹநுமானையும் சுக்கிரீவனையும் நோக்கி, "இவனைச் சுற்றி நின்று காத்துக்கொண்டிருங்கள். நான் எதிர்பார்த்த சந்தர்ப்பம் வந்துவிட்டது. என் வீரத்துக்கு ஏற்ற சமயம் இது. இன்று உலகம், ஒன்று ராவணன் இல்லாமலோ ராமன் இல்லாமலோ இருக்கப்போகிறது. அதை நீங்கள் பார்க்கப்போகிறீர்கள். நாட்டைவிட்டுக் காட்டுக்கு வந்ததுமுதல் இதுவரை நான் அடைந்த துக்கம் கொஞ்ச நஞ்சமல்ல. இதோ ராவணனைக் கொன்று அவற்றையெல்லாம் மறக்கப் போகிறேன். இனி அவனை விடேன். நீங்கள் என் வீரத்தை மலைச் சிகரத்தின்மேல் ஏறி நின்றுகொண்டு பாருங்கள்" என்று சொல்லி ராவணனின்மேல் பாணத்தைப் பொழிந்தான். ராவணனும் தன்னிடம் இருந்த பாணங்களை ராமன்மேல் ஏவினுன். இருந்தாலும் ராமபாணத்தை அவனல் தடுக்க முடியவில்லை. ஆகவே, காற்றில் அலைபடும் மேகம்போல் அவன் பயந்து ஓடலானுன்.

ராமன் பாணங்களைத் தொடுத்துக்கொண்டே, ரத்தம் தோய்ந்து தரையில் கிடக்கும் லட்சுமணனைப் பார்த்து, "இதோ ராவணனின் சக்தியால் அடிபட்டுப் பாம்புபோல் புரளுகிருன் என் தம்பி இந்தக் காட்சியைப் பார்க்கப்

பார்க்க என் உடல் துவண்டு போகிறது. லட்சுமணன் போன பிறகு நான் எதற்காக உயிர்வாழ வேண்டும்? சீதைதான் எதற்கு? மனைவிமார் கிடைப்பார்கள்; இப்படி ஒரு தம்பி கிடைப்பானு?'' என்று வருத்தமிகுதியால் புலம்பினுன்.

அப்போது சுஷேணன் என்ற வானரவீரன், ''ராமா, லட்சுமணன் சாகவில்லை. அவன் முகம் தெளிவாகவே இருக்கிறது. கைகள் தாமரைபோல் சிவந்து கிடக்கின்றன. இன்னும் இருதயத்தில் மூச்சு இருப்பது தெரிகிறது. வருந்தவேண்டாம்'' என்று ஆறுதல் சொன்னுன். பிறகு அவன் ஹநுமானை நோக்கி, ''ஓஷதி பர்வதத்தின் தெற்குப்பக்க உச்சியில் விசல்யகரணி, ஸவர்ணகரணி, ஸஞ்சீவினி, ஸந்தானகரணி என்ற மூலிகைகள் உண்டு. அவைகளைக் கொண்டு வா. லட்சுமணனுக்குப் பிழைப்பூட்டலாம்'' என்ருன்.

ஹநுமானும் உடனே அந்த மலையை அடைந்து அதன் தெற்குப் பக்க உச்சியில் தேடிப் பார்த்தான். அங்கே இருப்பவை இன்ன மூலிகைகள் என்று அவனுல் கண்டு கொள்ள முடியவில்லை. ஆகவே, மலைச்சிகரத்தையே எட்டிப் பிடுங்கி எடுத்துக்கொண்டு விரைவில் சுஷேணன் முன் கொண்டு வைத்தான். உடனே சுஷேணன் அந்த மூலிகைகளை மட்டும் பறித்து எடுத்துக் கசக்கி லட்சுமணனின் மூக்கருகில் பிடித்தான். உடனே லட்சுமணன் பிணியெல்லாம் நீங்கி எழுந்துவிட்டான். குரங்குகள் எல்லாம் ஹநுமானையும் சுஷேணனையும் கொண்டாடின. ராமன் தன் தம்பியை இறுகத் தழுவிக்கொண்டு ''தெய்வவசத்தால் நீ பிழைத்தாய். நீ போயிருந்தால் எனக்கு வாழ்வு தான் எதற்கு? சீதைதான் எதற்கு?'' என்ருன். லட்சுமணன், ''எனக்காக நீங்கள் இப்படி உலகத்தை வெறுக்கக்கூடாது. ராவணனைக் கொல்வதாகச் செய்து கொண்ட பிரதிக்கினையை நிறைவேற்றுங்கள்'' என்று சொல்லவே, ராமன் மறுபடியும் போருக்குத் தயாரானுன்.

எண்பது வயது வாழும் ரகஸ்யம்

பழைய நடிகர் ஒருவருக்கு எண்பதாவது பிறந்த நாள் கொண்டாட்டம் நடந்தது. இத்தனை வயதாகியும் நாடக மேடையை அவர் விடவில்லை. அவருடைய நண்பர் ஒருவர், ''ஆமாம், இந்த வயதிலும் நீங்கள் ஓடியாடி வேலை செய்கிறீர்களே; அதன் ரகஸ்யம் என்ன?'' என்று அவரைக் கேட்டார்.

''அதுவா? அது ரொம்பச் சாதாரண விஷயம். காலையில் ஏழுமணிக்கு எழுந்து காலைக் கடனை முடித்துக்கொள்வேன். உடனே ஒரு கப் டீ, நியூஸ்பேப்பர் இரண்டும் கொண்டுவந்து தருவார்கள். பேப்பரில் மரணச் செய்திகள் வரும் பத்தியைப் பார்ப்பேன். அதில் என் பெயர் இல்லையென்ருல், சட்டென்று எழுந்து வேலைக்குப் போய்விடுவேன்'' என்ருர் கிழ நடிகர்.

—'ஸெகீல் லா வை', பாரிஸ்.



அமெரிக்கத் தேர்தல்

★

நவம்பர் மாதம் நடக்கப்போகும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்குப் போட்டியிடும் இந்த இருவரில் யார் ஜயிப்பார்கள் என்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. இருவருக்குமே ஏறக்குறையச் சரிசமமான செல்வாக்கு அந்த நாட்டில் இருக்கிறது.

ஜனநாயகக் கட்சியின் சார்பில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு நிற்கும் அட்லாய் ஸ்டீவன்ஸன் கலிபோர்னியாவில் பிறந்தவர். இப்போது அவருக்கு வயது 52. தம் வாழ்நாளில் இளம் பருவத்தை இல்லினாய்ஸ் மாகாணத்திலேயே அவர் கழித்தார். 26 வருஷம் வக்கீல் தொழில் புரிந்தார். சர்க்காரின் கடற்படை, ராஜாங்கக் காரியதரிசிகளுக்கு உதவி உத்தியோகஸ்தராகவும் சில வருஷம் பதவி வகித்தார். ஐக்கிய நாடுகள் சபையின் அமெரிக்கப் பிரதிநிதிகள் கோஷ்டிக்குக் காரியதரிசியாக இருந்திருக்கிறார். 1948 முதல் இல்லினாய்ஸ் மாகாணத்துக்குக் கவர்னராக இருக்கிறார். அலபாமா மாகாணத்தைச் சேர்ந்த செனேட்டர் ஜான் ஸ்பார்க்மான் என்பவர் அவருக்குத் துணையாக உப-ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுகிறார்.

குடியரசுக் கட்சியின் பிரதிநிதியாக ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுபவர் ஜெனரல் ஐஸன்ஹோவர். அவர் டெக்ஸாஸ் மாகாணத்தில் பிறந்தவர்; வயது 61. கான்ஸாஸ் நகரத்தில் கல்வி கற்றார். 40 வருஷம் ராணுவத்தில் சேவை செய்தார். இரண்டாவது உலக

ஸ்டீவன்ஸன்

யுத்தத்தில் பல போர் முனைகளில் படைத்தலைமை வகித்துப் புகழ் பெற்றார். வட அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளின் ராணுவக் கூட்டுறவை ஏற்படுத்தினார். இப்போது கொலம்பியா சர்வகலா சாலையின் தலைவராக இருக்கிறார். அவருக்கு உதவியாகக் கலிபோர்னியாவைச் சேர்ந்த செனேட்டர் ரிச்சார்டு எம். நிக்ஸன் என்பவர் உப-ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுகிறார்.

அயல் நாட்டு விவகாரத்தில் ஐஸன்ஹோவருக்கும் ஸ்டீவன்ஸனுக்கும் அதிக வேற்றுமை இல்லை. அட்லாண்டிக், பசிபிக், ஐரோப்பிய நாடுகள் கூட்டுறவும் நட்பும் கொள்ளவேண்டும் என்பதில் இருவருக்கும் ஆர்வம் உண்டு. உள் நாட்டு விவகாரங்கள் சம்பந்தப்பட்டமட்டில் ஜனசமூகங்கள், மாகாண சர்க்கார்கள் இரண்டின் கடமைகளையும் உரிமைகளையும் இருவரும் வற்புறுத்துகிறார்கள். ஆனால் சமூக, பொருளாதாரச் சிக்கல்களை மாகாண ரீதியிலேயே கவனித்து உரிய பரிகாரங்களைச் செய்ய வேண்டும் என்பது ஸ்டீவன்ஸனின் கருத்து. ஆனால் மத்திய சர்க்காரின் உதவி முக்கியம் என்பதும், மாகாணங்கள் தங்கள் பொறுப்புக்களை ஏற்று நிர்வகிக்கும்படி செய்வதில் உள்ள சிரமமும் ஸ்டீவன்ஸனுக்குத்தான் நன்றாகத் தெரியும். மாகாணங்களுக்கு மத்திய சர்க்கார் செய்ய வேண்டிய உதவியை ஐஸன்ஹோவரைவிட அதிகமாக ஸ்டீவன்ஸன் வற்புறுத்துவார்.

இந்த இரண்டு பேருக்கும் உள்ள உண்மையான வித்தியாசம் அவருடைய குணாதிசயமும் கீர்த்தியுந்தான். பொதுவாகச் சொன்னால்

ஐஸன்ஹோவர்

ஐஸன்ஹோவர் எடுத்த காரியத்தைத் திறம்படச் செய்யும் காரியவாதி. ஒவ்வொரு விஷயத்திலும் நன்மை, தீமை இவற்றைப் பகுத்தறியும் இயல்பு உள்ளவர் ஸ்டீவன்ஸன். ஒருவரிடம் இல்லாத இயல்பு மற்றவரிடம் அமைந்திருக்கிறது.

ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடும்படி ஸ்டீவன்ஸனை ட்ரூமனே கேட்டுக்கொண்டார். மகாத்மா காந்திஜீயிடம் ஸ்டீவன்ஸனுக்கு மிகவும் மதிப்பு உண்டு. அமெரிக்காவுக்கு நம் பிரதம மந்திரி நேரு சென்றிருந்தபோது சிக்காகோ நகரத்தின் கவர்னராக இருந்தவர் ஸ்டீவன்ஸன். உலக நாடுகளுக்கு இந்தியா தலைமை வகித்து வழி காட்டவேண்டும் என்று அப்போது ஸ்டீவன்ஸன் குறிப்பிட்டார்.

பணக் குண்டு

லேப்டினெண்ட் ஜே. கவ்கிளான்

★★

விஷயம் தமாஷாகத்தான் இருக்கிறது. ஆனால், முற்றும் சம்பா விதமே. இந்தக் குண்டு மழையைச் சொரிந்து யுத்தங்களிலே வென்றுவிடுவது சாத்தியமே. பட்டாணிக்கடலையைச் சொரிந்து, குரங்குப்பட்டாளத்தை வென்ற பழங்கதை, நடக்க முடியாத கட்டுக்கதையாக இருக்கலாம். இது அப்படி அல்ல.

★★

1940-ஆம் வருஷத்துக் கோடைக் காலத்தில், கொடிய வெடிக் குண்டுகளைப் பிரிட்டன்மீது வீசினர் ஹிட்லர். அவைகளுக்குப் பதிலாகக் கள்ளக் கரன்ஸி நோட்டுகளை அவர் வீசியிருந்தால், ஆயிரம் வருஷ காலம் வாழ்ந்திருக்கக்கூடிய அவருடைய ஆசைக் கனவான சாம்ராஜ்யத்தை அநேகமாக ஸ்தாபித்திருக்கலாம்.

ஜெர்மன் சர்க்காரிடம் முதல் தரப் பொக்கிஷமும், பாங்கி நிபுணர்களும் இருந்தார்கள்; மனசு வைத்திருந்தால் இங்கிலாந்து பாங்கியின் பவுன் நோட்டுகளைப்போலவே துளியும் வித்தியாசமின்றி அவர்கள் தயாரித்திருக்க முடியும்.

ஏராளமான கள்ள நோட்டுகளை இங்கிலாந்துமீது அவர்கள் சொரிந்திருக்க முடியும். உதாரணமாக, ஐந்து பவுன் நோட்டு ஒன்றின் நிறை ஓர் அவுன்ஸில் பத்தில் ஒரு பங்கு என்று வைத்துக்கொள்ளலாம். 400 டன் நிறை அந்த மாதிரி நோட்டுகளைத் தயாரித்தால், அவை 64 கோடி பவுன் மதிப்புள்ளவையாயிருக்கும். 1940-இல் இதைவிடச் சிறிது குறைவாக இங்கிலாந்து பாங்கியின் நோட்டுகள் பிரிட்டனில் புழங்கிக்கொண்டிருந்தன.

ஒரே நாள் ராத்திரியில் ஜெர்மன் விமானங்கள் லண்டனுக்கு மேல் பறந்து கவன்ட்ரி என்ற இடத்தில் 400 டன் கள்ள நோட்டுகளைச் சொரிந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? பிரிட்டனில் நாணயப் புழக்கம் இரண்டு மடங்கு ஆகியிருக்கும்.

யாரும் கள்ள நாணயங்களைப் பொறுக்கக் கூடாது என்று சொன்னால், தேச பக்தி மிக்க மக்கள் அதற்குக் கட்டுப்பட்டு நடக்க மாட்டார்களா என்று கேட்கலாம். 1940-இல் உண்மையிலேயே பிரிட்டிஷ் மக்கள் மகா தேச பக்தர்களாகத்தான் இருந்தார்கள். ஆயினும், எதிரியின் குண்டு விழுந்து குழப்பம் நேர்ந்தபோதெல்லாம், இதுதான் தருணம் என்று திருடர்கள் கொள்ளையடிக்காமலில்லை. ஒரு மனிதனின் பண்டங்களைத் திருடி அவனுக்குத் துன்பம் விளைக்கத்

மூலம்: கனடியன் ஆர்மி ஜர்னல் (ஆங்கிலம்). கானடா.

தயங்காதவன், கள்ள நாணயங்களைப் பொறுக்கிக்கொண்டு தேசத்துக்கே கஷ்டம் விளைக்க மட்டும் தயங்குவானா?

திருடர்கள் போகட்டும். தெருக் கூட்டும் தோட்டிகள் என்ன செய்வார்கள்? அவர்கள் சம்பளமே வாரம் ஒன்றுக்கு ஐந்து பவுனுக்கு மேல் இல்லை. தெருவெல்லாம் ஆயிரக்கணக்கான ஐந்து பவுன் நோட்டுகள் கிடந்தால், பெருக்கிப் பெருக்கித் தள்ளுவார்களா என்ன? பொறுக்கிப் பொறுக்கி ஜேபியில்தான் போட்டுக்கொள்வார்கள்.

குண்டோதர மானேஜருக்கு முன்னே அற்பச் சம்பள உயர்வுக்குக் கெஞ்சிக்கொண்டிருந்த குமாஸ்தா இனி அப்படிச் செய்ய மாட்டார். கையை வீசிக்கொண்டு ஜாம் ஜாம் என்று தெருவிலே போய்த் தமக்கு வேண்டிய மட்டும் ஐந்து பவுன் நோட்டுகளை வாரிக்கொண்டு வீடு போய்ச் சேர்வார். வீட்டை அடைமானம் வைத்த பாதிரியார்கூட, "ஆண்டவனே, இதை மீட்கப் பணம் அருளும்" என்று பிரார்த்தனை புரிய மாட்டார். "இதுவே ஆண்டவன் கருணை கூர்ந்து சொரிந்த பண மழை" என்று சொல்லி, தமக்குத் தேவையான நோட்டுகளைப் பொறுக்கிக்கொள்வார்.

இந்தக் கள்ள நோட்டுகளைப் பொறுக்கிக் கொள்ளக்கூடாதென்று சொன்னால், பெரியவர்களே கேட்க மாட்டார்கள் என்கிறபோது, குழந்தைகளைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? "அடேடே! இதனால் பணப் பெருக்கத் தொல்லைகள் ஏற்படும்" என்று அப்பா சொன்னால், அதை வெறும் ஏமாற்று என்றே ஐந்து வயதுக் குழந்தைகள் நினைக்கும். அவைகள் இந்தக் கள்ள நோட்டுகளைக் கொண்டுபோய் மிட்டாய் வாங்கத் தொடங்கினால், வெகு சீக்கிரத்தில் நாடெங்குமே அபார மிட்டாய்ப் பஞ்சம் ஏற்பட்டுத்தான் தீரும்.

கோர்ட்டிலே நியாய பரிபாலனத்துக்குப் பெரிய அபாயம் ஏற்படுவது நிச்சயம். கள்ள நோட்டைப் பொறுக்கிய ஒருவனுக்குத் தண்டனையாக ஜட்ஜி ஏதோ தொகையை அபராதம் விதிப்பதாக வைத்துக்கொள்வோம். உடனே அவன், "கோர்ட்டார் அவர்களே, இதோ இரண்டு நிமிஷ டயம் கொடுங்கள்" என்று சொல்லி வெளியே போய்த் திரும்பி வந்து அபராதத் தொகையை அலட்சியமாய்ச் செலுத்துவான்; ஜட்ஜிக்கு வேண்டுமானாலும் சிறிது பணம் இனும் கொடுப்பான். இல்லையென்று சொல்லி, ஜட்ஜி அவனைச் சிறையில் அடைத்தால், நாட்டின் தொழில் தடைப்படுகிறது. எதிரிக்கு வேறு என்ன வேண்டும்? இந்த அவந்தரையைத் தானே அவன் வேண்டுகிறான்.

இந்தப் புதிய கள்ள நாணய நோட்டுகளை யாருமே எடுக்கத் தேவையில்லை. எடுக்காதபோதே, மக்களில் ஒரு பாதிப் பேர், மறு பாதிப் பேரைச் சந்தேகத்தோடு பார்க்கத் தொடங்கிவிடுவார்கள். மற்றவன் வைத்திருப்பது கள்ள நாணயம் என்று ஒவ்வொருவனும் எண்ணினால், கடைக்காரர்களெல்லாம் கண்டபடி மணிக்கு மணி பண்டங்களின் விலையை ஏற்றிவிடுவார்கள். ஒரு டாக்ஸி நிறைய நோட்டுகளை வாடகையாகக் கொடுத்தால்தான் அந்த டாக்ஸியைப் பிடிக்கலாம்.

இப்படிச் சகல விலைவாசிகளும் ஒரேயடியாக ஏறினால், என்ன நடக்கும்? அவரவர் வேலையை அவரவர் ஒழுங்காய்ச் செய்ய வேண்டுமென்று சர்க்கார் உத்தரவு போட்டால் போகிறது என்று சொல்கிறீர்களா? அப்படிப் போடும் உத்தரவு பலிக்குமா? பலிக்காது. தொழிற்சாலைகளில் போய் ஒழுங்காய் வேலை செய்யும் தொழிலாளிகளைவிட, தெருவிலே கை வண்டி தள்ளிக் கள்ள நோட்டுகளைப் பொறுக்கிக்கொண்டு செல்பவனே அதிகப் பணம் சம்பாதிப்பான் என்றால், எவன்தான் தொழிற்சாலைக்குப் போவான்?

யுத்த காலத்தில் நவீன நாகரிக நாடுகள், சுயேச்சையான விலைவாசி முறைகளை அநுஷ்டிப்பதில்லை என்பதும், பலவிதக் கண்ட்ரோல்களை அநுஷ்டிக்கின்றன என்பதும் உண்மையே. ஆனால், சுயேச்சையான விலைவாசி முறைகளை அடியோடு கை விட்டால், அதிக ஊதியத் தூண்டுதலைத் தொழிலாளர் இழந்துவிடுவார்கள். பண்டங்களின் விநியோகமும் ஒழுங்காய் நடைபெறாது. இதனால் உற்பத்தி தடைப்பட்டுவிடும். அப்போது சர்வாதிகாரிகளைப் போல்தான் ஜனங்களை ஆட்டி வைக்க நேரிடும்.

'பணக் குண்டு'க்குப் பலியான ஜனங்களின் மனத்திடமும் அழிந்து போகும். அவர்கள் பாடுபட்டுச் சேர்த்துவைத்த பணமெல்லாம் ஒரே நாள் ராத்திரியில் மதிப்பற்றுப் பூஜ்யமாகிவிடும். பணத்தின் மீது யாருக்குமே நம்பிக்கை இராது. சர்க்காரின் கடன் பத்திரங்களை வாங்கியவன் எவனும் தன்னைச் சர்க்கார் கொள்ளையடித்து விட்டதாகவே எண்ணுவான். பக்கத்து வீட்டான் வீடு வாங்கியிருக்க, தன் தேச பக்திக்குப் பரிசு இதுதானா என்று ஆத்திரமடைவான்.

இந்தக் கள்ளப் பவுன் நோட்டுகளால் உள்நாட்டில் மட்டுந்தானா அவந்தரை? பிரிட்டிஷ் ஸ்டெர்லிங் நாணயம் உபயோகமாகும் தேசத்துக்கெல்லாம் இது பரவி இதனால் விபரீதம் நேரும்.

ஒரே ஒரு பரிகாரந்தான் ஒரு வேளை பலிக்கக்கூடியதா யிருக்கலாம். அதாவது, நோட்டு நாணயமே சட்டப்படி செல்லாது என்று தடை செய்துவிட்டு, பாங்கிச் செக்குகள், சில்லறைக் காசுகள் இவைகளை மட்டுமே புழக்கத்தில் வைத்துக்கொள்ளலாம். இதனால் சர்க்கார் நிர்வாக ஏற்பாடுகளிலெல்லாம் பெரிய மாறுதல் செய்ய நேரிடும். மிகச் சிறு தொகைக்கெல்லாம் 'செக்' வெட்டுவதென்றால், பாங்கிகளால் கணக்கு வைத்துச் சமாளிக்க முடியாது போகும். தவிர, இந்த மாறுதலைச் சமாதான காலத்திலேயே செய்துவிட வேண்டும்; யுத்த காலத்தில் செய்ய முடியாது. சகல பிரஜைகளும் தங்கள் சிறு சிறு தொகைகளைக்கூடப் பாங்கியில் கொடுத்து, செக் வெட்டக்கூடிய கணக்கு வைத்துக்கொள்ளும்படி செய்தால் தான் இந்த முறை சாத்தியப்படும்.

'பெர்ல் ஹார்பர்' சம்பவம் மாதிரி திடீரென்று பணக் குண்டு வந்து நம் நாட்டைத் தாக்கும் வரைக்கும் நாம் காத்திருந்தால், நிலைமை மிஞ்சிப்போகும். பாங்கியில் சகல மக்களும் பணத்தைப் போட்டுச் செக் வெட்டும் கணக்கு வைத்துக் கொள்வதற்கு முன்பே, நாணயங்கள் ஒன்றுக்கு மூன்று மடங்காய்ப் பெருகிவிட்டால், அப்புறம் நம்மால் என்ன செய்ய முடியும்?



40-அடி உயரப் பீப்பாயில் இவர் (1) உடை மாற்றிக்கொள்கிறார்; (2) பேப்பர் படிக்கிறார்; (3) குஷியாகச் சவாரி செய்கிறார்; (4) மனைவியோடு டெலிபோன் பேசுகிறார்!

கொம்பின் உச்சியில்

★

விளம்பரங்களிலேதான் எத்தனை விநோதம்! இந்த விளம்பர விசித்திரம் பிரிட்டனில் நடந்துள்ளது. இதுபற்றிய விவரம் லண்டன் 'இல்லஸ் டிரேடட்' பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது.

40 அடி உயரமுள்ள ஒரு கொம்பின்மேல் பதித்த பீப்பாயில் ஒரு மாதகாலம் உட்கார்ந்திருப்பதென்றால் எப்படி இருக்கும்? பிரிட்டனில் விக் ரீவ்ஸ் என்ற 24 வயது வாலிபர் கோபுரங்களின் உச்சியில் ஏறிப் பழகியவர். இங்கிலாந்தில் பர்மிங்ஹாம் நகருக்கு அருகே உள்ள வால்ஸால் என்ற ஊரில் அவர் இப்படிச் செய்து காட்டினார்.

அங்கே க்ளாடு ரோ என்ற ஹோட்டல்காரர், ஒரு மாதம் இந்தமாதிரி இருப்பவர்களுக்கு 200 பவுன் தருவதாகச் சொல்லியிருந்தார். ரீவ்ஸ் முன்வந்து அப்படியே செய்வதாகச் சவாலை ஏற்றுக்கொண்டார். 31 நாள் அந்தப் பீப்பாயில் இருந்தார். இதோடு அன்றாடம் மூன்றுவேளை உணவும் இரா வேளைகளில் கொஞ்சம் சாராயமும் வெந்நீரும், காலையில் தினசரிப் பத்திரிகை ஒன்றும், கீழே இருப்பவர்களோடு டெலிபோனில் பேச வசதியும் கிடைத்தன.

அந்தப் பீப்பாயைப் பார்த்தால் அவ்வளவு நாள் தாங்குமா என்று சொல்லும்படி இருந்தது. இருந்தாலும் ஓர் அபாயமும் ஏற்படவில்லை. அமெரிக்காவில் விளம்பரத்துக்காக இப்படி ஆளை உட்கார வைப்பது வழக்கம். இந்தப் பீப்பாயில் ஹோட்டல்காரரின் பெயர் எழுதித் தொங்கவிட்டிருந்தது. ஹோட்டலுக்குப் பக்கத்தில் தம்முடைய சொந்த மீன் - கறிக் கடைக்குப் பின்னால் இருந்த தோட்டத்தில்தான் ரோ இப்படிக் கொம்பு நட்டுப் பீப்பாயை அதன் மேல் பதித்திருந்தார்.

உள்ளூர்ப் பத்திரிகைகளுக்கு இது சுத்தமாகப் பிடிக்கவேயில்லை. "இந்தமாதிரி கௌரவமான ஓர்

ஊரில் ஒரு வாரமாக ஒருவன் பீப்பாயில் குந்தியிருக்கிறனென்றல் அதை நம்ப முடியவில்லையே! இன்னும் மூன்று வாரத்துக்கு அப்படியே இருக்கப்போகிறனும். அது போதாது என்று இவனைப்பார்த்து இன்னும் அநேகம் பேர், 'நான், நீ' என்று இப்படி இருக்க முன் வருகிறர்களே! கடைசியில், இதென்ன ஊருக்கே வெட்கக் கேடாக முடியுமோ என்னவோ யார் கண்டார்கள்?'' என்று பிரலாபிக்கத் தொடங்கின.

ஊராரில் சில பேருக்கும் இது பிடிக்கத்தான் இல்லை. சிலபேர் இதைக் கேலிக்கூத்தாக மதித்தார்கள். சிலர் இதைச் சும்மா பார்த்துக் கொண்டிருந்தார்களே யொழிய இரண்டு கட்சியிலுமே அக்கறை காட்டவில்லை. ஆனல் அநேகம் பேர் இதை உற்றுக் கவனித்துக்கொண்டே யிருந்தார்கள். பகல் வேளையில் கூட்டம் குறைவாக இருந்தாலும் மாலை ஆக ஆக அது அதிகரித்து வந்தது.

போலீஸாருக்கு இது துளியும் பிடிக்கவில்லை. அருகிலே பெரிய ரஸ்தாவில் அடிக்கடி வண்டிப் போக்குவரத்துத் தடைப்பட்டது.

இந்தமாதிரி ஓர் இடத்தில்தான் 40 அடி உயரத்தில் அந்தப் பீப்பாயில் ரீவ்ஸ் உட்காருவதும், எழுந்து நிற்பதும், எட்டிப் பார்ப்பதும், மண்டி போட்டு அமருவதுமாகப் பொழுதுபோக்கி வந்தார். கால் அடிக்கடி மரத்துவிடும். அப்போதெல்லாம் டாக்டருக்கு 'போன்' செய்து அவர் சொல்லுகிறபடி செய்துவந்தார்.

''முதல் கொஞ்சநாள் மனசுக்குப் பிடிக்கத்தான் இல்லை. அதற்குக் காரணம் மணிக்கணக்கை நாம் கவனித்துக்கொண்டே யிருப்பது தான். அதை மறந்துவிட்டால் அப்புறம் ஒரு கவலையும் இல்லாமல் எத்தனை நாள் வேண்டுமானலும் காலந் தள்ளலாம்'' என்கிறர் ரீவ்ஸ்.

இடம் போதாததால் நீண்ட நேரம் படித்துக்கொண்டே யிருக்கவும் முடியவில்லை. அதோடு ஜனங்கள் வெறும் பீப்பாயை வேடிக்கை பார்க்க வரவில்லையே! அதில் ஓர் ஆள் இருப்பதுதானே, பொழுது போய் இருட்டின பிறகுகூட அவர்கள் அங்கே கும்பல் கூடுவதற்குக் காரணம்?

அன்றடம் அவருடைய இளமனைவி வேறு, அவரைப்பற்றி விசாரித்துக்கொண்டேயிருந்தாள். வேலை நேரம் முடிந்து அவள் தன் தாயின் வீட்டுக்குப் போகுமுன் டெலிபோன்மூலம் அவரோடு பேசுவாள். இந்த ஐந்து வருஷ காலமாக இரண்டுபேரும் அங்கே தான் வசித்துவந்தார்கள்.

முதலில் இந்த விஷயத்தைப் பற்றி அவளிடம் அவர் பிரஸ்தாபித்தபோது அவளுக்குப் பிடிக்கத் தான் இல்லை. இருந்தாலும், 'அவரைப் பார்க்கவும் அவரோடு பேசவும் முடியும்; விரைவிலே நமக்குத்தான் குழந்தை பிறக்கப்போகிறதே (அவள் கர்ப்பமாக இருந்தாள்); பல செலவுகளுக்குப் பந்தயத் தொகை பயன்படுமே' என்று எண்ணி அதற்கு இணங்கினள்.

ரீவ்ஸ் வெகு சுலபமாக மேலே ஏறி உட்கார்ந்துவிட்டார். ஆனல் இறங்கும்போதுதான் திண்டாட்டம் ஆகிவிட்டது. தாமாக அவரால் இறங்க முடியவில்லை. கடைசியில் நெருப்பணைக்கும் படை ஏணி, முதலியவற்றுடன் வந்து அவரைக் கீழே இறக்கவேண்டியதாயிற்று.

ஆடுவதற்கு ஏற்ற அழகான முற்றமும் வேண்டும்.

நாட்டிய சாலை

போதுகூச்சி சுப்பிரமணிய சாஸ்திரி

நாட்டிய சாஸ்திரத்தின் இரண்டாம் அத்தியாயத்தில் நாட்டியசாலையின் அமைப்பைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. இந்தப் பகுதியில் பாஷையின் நடையைப் புரிந்துகொள்வது கடினமாய் இருப்பதால் உரை எழுதியவர்கள் இதை விட்டு விட்டார்கள்.

நம் முன்னோர்கள் நாட்டிய சாலையை மூன்று விதங்களாகப் பிரித்திருக்கிறார்கள். நீண்ட சதுர வடிவத்தில் இருப்பதற்கு 'விக்ருஷ்டம்' என்று பெயர். சம சதுரத்தில் அமைந்தது 'சதுரச்ரம்.' முக்கோண வடிவத்தில் அமைந்தது 'த்ரயச்ரம்.' ஒவ்வொன்றிலும் 'ஜேஷ்டம்,' 'மத்யமம்,' 'அதமம்' என்று மூன்று பிரிவுகள் உண்டு. மொத்தம் ஒன்பது விதம் ஆகிறது. இவற்றின் அளவை முழம், மார்பு என்ற முறையில் பரதர் கொடுத்திருக்கிறார். ஒரு முழம் இரண்டடிகளும் மூன்றங்குலங்களும் கொண்டது.

108 முழ நீளம் உள்ள கட்டிடத்தை 'ஜேஷ்டம்' என்றும், 64 முழ நீளம் உள்ள கட்டிடத்தை 'மத்யமம்' என்றும், 32 முழ நீளம் உள்ள கட்டிடத்தை 'அதமம்' என்றும் சொல்லியிருக்கிறார்கள். தேவதைகள் சம்பந்தமான நாட்டியங்களை ஆடுவதற்கு 'ஜேஷ்டம்' என்னும் அளவுள்ள சாலையே தகுந்தது. அரசர் சம்பந்தமாக உள்ள நாடகங்களை நடத்த 'மத்யம' சாலை தகுந்தது. சாமானிய மக்களைப்பற்றிய மற்ற எல்லா நாடகங்களையும் 'அதமம்' என்னும் அளவுள்ள சாலையிலேயே நடத்தவேண்டும் என்பது விதி. ஆனால், பொதுவாக நாட்டிய சாலையை 'மத்யமம்' என்ற அளவிலேயே அமைக்க வேண்டும். நாட்டிய மண்டபம் பெரிதாகி விட்டால், பார்ப்பவர்களுக்கு நாட்டியம் தெளிவாகத் தெரியாது. தூரத்தில் இருக்கும் சபையோருக்குச் சம்பாஷணைகள் கேட்காமலே போய்விடலாம். நாட்டிய மண்டபம் சிறிய அளவில் அமைந்திருந்தால், பேச்சும் பாட்டும் எதிரொலி செய்து இனிமையைக் கெடுத்து விடும். மண்டபம் பெரிதானால், பாத்திரங்களின் பல்வேறு முகபாவங்களைச் சபையோர் பார்க்க முடியாமல் போய் விடும். அதனால் நடுத்தர மண்டபமே, நாடகம், நாட்டியம் என்ற இரண்டு வகைக்கும் தகுதியாக அமைகிறது என்று பரதாசாரியர் சித்தாந்தம் செய்திருக்கிறார்.

நாட்டிய மண்டபத்தை நிருமிக்க நினைத்த நிலத்தை நன்றாய்ப் பரீட்சிக்க வேண்டும். மனையடி சாஸ்திரத்தில் சொல்லியபடி

காப்பிரைட்: பாரதி (தெலுங்கு), சென்னை.



படம் 1.

சுப முகூர்த்தத்தில் வேலை தொடங்க வேண்டும். மேடு பள்ளம் இல்லாதபடி, உறுதியான கரிசல் மண் இராத நிலம் தகுந்தது. நிலத்தின் மண் வெள்ளையாகவோ கறுப்பாகவோ இருக்கவேண்டும். முதலில் நிலத்தில் புல்பூண்டுகள் இல்லாதபடி சுத்தப்படுத்த வேண்டும். பின்பு கலப்பையால் உழவேண்டும். மரங்களின் வேர்கள், எலும்புகள், ஆணிகள், மண்டையோடுகள், முட்கள் ஆகியவை இருந்தால் அவற்றை அப்புறப்படுத்தி விட வேண்டும். இந்த நிலையில் பூமி உள்ளும் புறமும் சுத்தமாகி விடுகிறது. பின்பு பூச நட்சத்திரத்தன்று வெண்மையான நூலால் கட்டிடத்துக்கு வேண்டிய இடத்தை அளந்துகொள்ள வேண்டும்.

சபையோர் எல்லாரும் தடங்கல் இல்லாமல் நாடகத்தைப் பார்க்கக் கூடிய விதத்தில் காலரி அமைக்க வேண்டும். காலரி உயர்ந்துகொண்டே போய்ப் பின்புறத்தில் கடைசியில் இருக்கும் ஆசனம் 'ரங்கபீட'த்துக்குச் சம உயரத்தில் இருக்க வேண்டும். முதல் படம் நாட்டிய மண்டப அமைப்பைக் காட்டுகிறது.

இது 'விக்ருஷ்ட' நாட்டிய மண்டபம். 1 என்ற எண் ஜனங்கள் உட்காரும் இடம். இதன் நீளம் 32 முழம்; அகலம் 32 முழம். 2 என்ற எண் 'ரங்கபீடம்' எனப்படும். இது 16 முழ நீளமும் 8 முழ அகலமும் உள்ளது. 3 என்ற எண்கள் இரண்டும் குறிக்கும் இடங்களை 'மத்தவாரணி' என்பார்கள். இவை 8 முழ நீளமும் 8 முழ அகலமும் உள்ள சம சதுர இடங்கள். 4 என்ற எண் உள்ள இடம் 'ரங்க சீர்ஷம்' (அரங்கின் தலை) எனப்படும். இதன் நீளம் 32 முழம்; அகலம் 8 முழம். 5 என்ற எண் 'ஷட்தாருகம்' என்னும் இடத்தைக் குறிக்கிறது. இதன் நீளம் 8 முழம்; அகலம் 4 முழம். 6 என்ற எண்கள் 'நேபத்யம்' அல்லது 'கிரீன்ரூமு'க்குப் போகும் வழிகள். 7 என்ற எண் 'நேபத்ய'த்தைக் குறிக்கும். இதன் நீளம் 32 முழம்; அகலம் 16 முழம். 2,3 என்ற எண்களுக்கு முன்னும் பின்னும் காணப்படும் சிறு புள்ளிகள் தூண்கள்.

ஏணி போல் காலரி உயர்ந்துகொண்டே போவதால் அங்கே இருந்து பார்ப்பவர்களுக்கு நாட்டிய மண்டபம் மலைக்குகையைப் போல் தோற்றம் அளிக்கும். இந்த 'விக்ருஷ்ட' மண்டபத்தில் 'சதுரச்ர' மண்டபத்தில் இருப்பதைவிட அதிகமான தூண்கள் இருக்கும். மெல்லிய கம்பிகளால் பின்னிய ஜன்னல்களே நாட்டிய மண்டபங்களில் இருக்கலாம். அதன் மூலம் சிறிதளவு காற்று மட்டும் உள்ளே வரும். பாட்டு,வாத்தியங்கள் முதலியவற்றின் நாதத்துக்குப் பின்னும் இனிமையை உண்டாக்கவே இந்த முறை. 'ரங்கபீட'த்துக்கும் 'ரங்கசீர்ஷ'த்துக்கும் இடையில் ரங்க பீடத்து நீளம் முழுவதையும் மறைக்கும் திரை ஒன்று இருக்கும். பூந்தோட்டம் அல்லது நாடகத்தின் நடுவில் வரும் 4 குட்டி நாடகங்களை இங்கே திரையிட்டு வைத்திருப்பார்கள். வேண்டிய சமயத்தில் திரையை விலக்கிவிடுவார்கள். சுவர்களுக்கு வர்ணம் தீட்டவேண்டும். காடு, ஊர், நீர் நிலைகள், சிறிய தோட்டங்கள், மலைகள் இவை எல்லாம் தத்ரூபமாக இருக்க வேண்டும். மரங்களை உபயோகித்து இந்த வேலைகளைச் செய்வார்கள்.



படம் 2.

இனி நடுத்தர அளவுள்ள 'சதுரச்ர' மண்டபத்தின் அமைப்பைப் பார்ப்போம். இதன் நீளம் 64 முழம்; அகலமும் அவ்வளவே. இதன் தென்புறத்திலும் வடபுறத்திலும் பதினாறு பதினாறு முழம் விட்டுவிட்டு மிகுந்த இடத்தில் நாட்டியசாலை அமைக்க வேண்டும். இந்த நாட்டிய மண்டபத்தின் நீளம் 64 முழமும் அகலம் 32 முழமும் ஆகும். 'விக்ருஷ்ட' மண்டபத்தில் சொல்லாத சில முறைகளை இங்கே சொல்லுகிறார் பரதர். மற்றவை இரண்டுக்கும் பொதுவே. இந்த மண்டபத்தை இரண்டு பகுதிகளாக்கினால் கிழக்கே ஜனங்கள் உட்காரும் இடம் வரும். இதன் வெளிப்புறத்தில் எல்லாச் சுவர்களும் உறுதியாகக் கட்டப்பட்டிருக்கவேண்டும். 'ரங்கபீட'த்தின் அளவு 8 முழம். இது சமசதுரம். இனி மண்டபத்தின் வடபுறத்தில் 12 முழம், தென் புறத்தில் 12 முழம் காலி இடம் இருக்கிறது.

'ரங்கபீட'த்துக்கு வெளியே பத்துத் தூண்கள் இருப்பது விசேஷமென்று பரதர் சொல்லுகிறார். இதன் முன் செங்கல்லா

லும் மரத்தாலும் 'காலரி' அமைக்க வேண்டும். சில நூல்களில் 'ரங்க மண்டப'த்தின்மேல் மாடி இருக்கும் என்று சொல்லியிருக்கிறது. பழைய சம்பிரதாயப்படி 'நேபத்யம்' என்ற 'கிரீன் ரூமு'க்கு முன் உள்ள 'ரங்க சீர்ஷ'த்தில் தூண்களை மண்டபத் தோற்றத்தில் அமைத்து அவற்றின்மேல் மாடி எழுப்புவார்கள். சொர்க்கக் காட்சியைக் காட்ட வேண்டிய சமயங்களில் இதன் மேலே அமைத்த மாடியை உபயோகித்துக் கொள்வார்கள். இதற்குப் போவதற்காக மண்டபத்தின் இருபுறத்திலும் படிகள் கட்டியிருப்பார்கள். இந்த மாடி அமைப்பே 'சதுரச்ர' மண்டபத்தின் சிறப்பு.

சபையோர் உட்காரும் இடத்தில் பத்துத் தூண்கள் இருக்கும். (இவை கட்டிடத்தின் உறுதிக்காக மட்டும் ஏற்பட்டவை; இந்தக் காலத்தில் இவை அவசியம் இல்லை.) சுவர்களுக்குப் பன்னிரண்டு முழ தூரத்தில் இவை இருக்கவேண்டும். ஒரு தூணுக்கும் மற்றொரு தூணுக்கும் இடைவெளி 8 முழம். நடுவே 'ரிஸர்வ்ட்' வகுப்பு (2 என்ற இடம்). சுற்றிலும் காலரி. இங்கே வாசல் எதுவும் இல்லை.

'ரங்கசீர்ஷ'த்துக்கு (7) இந்த மண்டபத்தில் 4 முழ அகலமே இருக்கும். அதனால் வாத்தியக்காரர்களும் பாடகர்களும் அமரும் இடம் இதில் 'நேபத்ய'த்தக்குள் அமைகிறது. இதன் பெயர் 'ஷட்தாருகம்.' மண்டபத்தில் தாமரை மலர் முதலியவற்றைச் செதுக்கிய தூண்களின் மேல் எட்டு முழ அகலம் உள்ள பீடத்தை, அதாவது ஒரு விட்டத்தைக் கிடத்துவார்கள். இதைத் 'துலா தண்டம்' என்று சொல்லுவார்கள். இவற்றைத் தாங்கும் தூண்களில் அழகிய பெண் வடிவங்களைச் செதுக்க வேண்டும். 'ரங்கசீர்ஷ'த்துக்கு மேற்கே இருக்கும் 'நேபத்ய'த்துக்குச் சாதாரணமாக இரண்டு வாசல்கள் உண்டு. ஆனால் இந்த மண்டபத்துக்கு மூன்றாவது வழியும் வேண்டும். ஏனென்றால், 'நேபத்ய'த்தில் இருக்கும் பாடகர்களின் கண்ணில், நடிப்பவர், ஆடுபவர்கள் இவர்களுடைய தோற்றம் பட்டுக்கொண்டிருப்பது அவசியம். இவர்கள் உட்காரும் இடம் அரங்க மேடை அளவு உயரம் இருக்கவேண்டும். நடிகர்கள் அரங்கத்தின் நடுவே வேகமாக நுழைவதற்கும் இந்த மூன்றாவது வழி உபயோகப்படும். நடிகர்கள் நுழைவதற்காக அரங்க மேடைக்கு எதிரே நாட்டிய மண்டபத்துக்குக் கிழக்கே நாலாவது வழி இருக்கவேண்டும். 'சதுரச்ர' மண்டபத்துக்கு இப்படி நாலு வழிகள் இருக்கவேண்டும்.

அரங்க மேடை கிழக்கு மேற்காக 8 முழ நீளம் இருக்க வேண்டும். இதன் இரு புறங்களிலும் ஒன்றரை முழ உயரத்துக்கு இரண்டு திண்ணைகளை அமைக்க வேண்டும். ஒவ்வொன்றும் நாலு முழ அகலத்தில் இருக்க வேண்டும். திண்ணைக்கு இரு புறங்களிலும் முன் சொன்னபடி நான்கு ஸ்தம்பங்களோடு சேர்ந்த இரண்டு மத யானைகளை அமைக்க வேண்டும். 2-ஆம் படம் 'சதுரச்ர' நாட்டிய மண்டபம். 1 என்ற இடம் 16 முழ அகலம் 24 முழ நீளம் கொண்ட வெளியிடம். 2 என்பது 8 முழ அகலமுள்ள சபை. இது

'ரிஸர்வ்' இடம். 3 என்பது 'காலரி' அமைக்கும் இடம். இது 12 முழ அகலம் உள்ளது. 4 என்பது 8 முழ அகலமுள்ள அரங்க மேடை. 5 என்னும் இரண்டு எண்களும் இரண்டு திண்ணைகள். 6 என்பவை எட்டு முழ நீளமுள்ள மதயானைகள் அமைக்கும் இடங்கள். 7 என்பது 4 முழ அகலம் 32 முழ நீளமுள்ள 'ரங்கசீர்ஷம்'. 8 என்பது 'ஷட்தாருகம்' இருக்கும் இடத்தைக் குறிப்பது. இதன் அகலம் 4 முழம்; நீளம் 8 முழம். 9 என்னும் எண்கள் வாசல்களைக் காட்டுகின்றன. 10 என்பது 'நேபத்யம்' அல்லது 'கிரீன் ரூமை'க் காட்டுகிறது. இதன் நீளம் 32 முழம்; அகலம் 16 முழம்.

நாட்டிய மண்டபத்தில் அரங்க மேடையை முக்கோண வடிவமாக அமைத்தால் அது 'த்ரயச்ர' மண்டபம் எனப்படும்.

பெண் அல்ல—ஆண்

கிஸி ஜாதிப் பெண்

கிஸி ஜாதி ஆண்

'மஞ்சரி' ஆகஸ்ட் '52 இதழில் 'இந்தியப் பழங்குடிகள்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். அது 'ஃபோரம்' என்ற ஆங்கிலப் பத்திரிகையிலிருந்து மொழிபெயர்த்தது. ஷை பத்திரிகையில் வந்த ஒரு படத்தை அதில் இருந்ததுபோலவே, "கிஸி ஜாதிப் பெண்; புகை குடிக்கிறாள்" என்று 'மஞ்சரி'யிலும் வெளியிட்டிருந்தோம். 31-8-'52 வெளியான 'ஃபோரம்' இதழில், கிஸி ஜாதியார் வசிக்கும் சுபான்ஸிரிப் பிரதேசத்தில் அதிகாரியாக இருக்கும் ஆர். ஜி. மென்ஸீஸ் என்பவர், "அது கிஸி ஜாதி ஆணின் படம். இதோ கூடை ஏந்திச் செல்லும் கிஸி ஜாதிப் பெண்ணின் படம் ஒன்றை அனுப்பியிருக்கிறேன்" என்று கடிதம் எழுதியிருக்கிறார்; இப்படிச் சமீபத்தில் வெளியான படத்தைத்தான் இதோ பழைய படத்துடன் வெளியிட்டிருக்கிறோம்.

இந்த ஸினிமா விமர்சனம் ஒரு படத்துக்குத்தானு? எத்தனையோ இந்தியப் படங்களுக்கும் பொருந்தும்.

'வலை' விமர்சனம்

ஏ. எம். ஏ.

இந்த ஸினிமா படம் திருட்டுத் தங்க வியாபாரம்பற்றியது. அதுமட்டும் அல்ல; இன்னும் பல விஷயங்களும் அடங்கியது. 'பாலைவனக் காதல்', 'குளிக்கும் அழகி', 'அபூர்வ நாட்டியம்' என்ற வேறு என்ன பெயரை இதற்குக் கொடுத்தாலும் தகும்.

அப்படியானல், 'ஜால்' என்ற பெயரை இதற்குக் கொடுப்பானேன் என்று கேட்கிறீர்களா? சொல்லுகிறேன், கேளுங்கள். 'ஜால்' என்ருல் வலை. அந்த வலையில் கதாநாயகி மாட்டிக்கொள்கிருள். வலையை உபயோகிப்பவர் செம்படவர். ஆகவே, இதில் செம்படவர் கதையும் அடங்கியிருக்கிறது.

இந்தக் கதை நிகழும் இடம், கடற்கரையில் உள்ள எந்த ஊராக வேண்டுமானுலும் இருக்கலாம். இந்தப் படம் பார்க்கிறவர்களுக்குக் கஷ்டமே இராதபடி டைரக்டர் ஓர் ஏற்பாடு செய்திருக்கிருர். அதாவது தம்முடைய மனத்தில் என்ன இருக்கிறது என்பதைக் கொட்டை எழுத்துக்களில் அங்கங்கே திரையில் எழுதி விடுகிருர். ஆகவே, மேலைக் கடற்கரையில் உள்ள ஏதோ ஒரு கிராமத்தில் கதை நடக்கிறதென்று நாம் அறிந்துகொள்ளுகிருேம். ஆனுல் அது கோவா தீவாகவும் இருக்கலாம். ஏனென்ருல், வர்ணத்திரவம் ஒன்றை நாட்டியக்காரர்கள் குடிக்கிருர்கள். அது வெறும் டொமடோ ரஸமாகவும் இருக்கலாம். தவிர, நாட்டியக்காரரின் பெயரெல்லாம் போர்ச்சுகீஸியப் பெயர்களாக இருக்கின்றன.

மரியா என்னும் செம்படவ மங்கையாக நடிகை கீதா பாலி நடிப்பது ரொம்ப அருமையாயிருக்கிறது. இன்னும் கொஞ்சம் தடபுடலாக அவள் நடித்திருந்தால், நிச்சயமாக இந்திய ஸினிமா நடிப்பிலேயே முதல்தரமாக இருந்திருக்கும். ஆனுல், டைரக்டர் அதற்கு இடம் கொடுக்காமல்

மூலம்; சங்கர்ஸ் வீக்லி (ஆங்கிலம்: 31-8-'52), புது டில்லி.

போய்விட்டார். என்றாலும், தனக்குரிய பாத்திரத்தைச் சிறப்பாக அவள் நடித்திருக்கிறாள். 'கிராமப் புனருத்தாரண' சேவையில் பணக்கார வீட்டுப் பெண்கள் எப்படி நடிப்பார்களோ அப்படியே தத்ரூபமாக நடித்திருக்கிறாள் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்.

கதாநாயகியின் முக்கியமான ஜோலி என்ன? காதல் செய்வதும், கனஜோராய்ப் பாட்டுப் பாடுவதுந்தானே? இந்த இரண்டு ஜோலிகளையும் கீதா பாலி மிகவும் சோபிதமாய்ச் செய்திருக்கிறாள். அதுவும் எப்படிப்பட்ட சமயத்திலே? மீன் பிடிப்பது, தன் குருட்டு அண்ணனைப் பராமரிப்பது இரண்டு வேலைக்கும் நடுவிலே இந்த ஜோலிகளையும் கச்சிதமாய் நடத்துகிறாள். திருட்டுத் தங்க வியாபாரி டோனி என்பவன் மீது அவள் காதல் கொள்ளுகிறாள். தேவ் ஆனந்த் என்ற நடிகனே டோனி.

தேவ் ஆனந்தின் வெண்கல வர்ண முகத்தை என்ன என்று சொல்வது! அற்புதம்! அற்புதம்!! அதிலே துளி உணர்ச்சி இருக்க வேண்டுமே; கிடையாது. கடைசி வரையில் ஒரே அசடு வழிகிறது அதில். திருட்டுத் தங்க வியாபாரியைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? அவன் இப்படித்தான் இருப்பான். தவிர, அவனே கதையில் வரும் துஷ்டன். அவன் அந்தக் கிராமத்துக்குத் தங்கம் தேடி வருகிறான். வந்தவன் தங்கம் கிடைத்ததும் திரும்பலாமே. அதுதான் இல்லை; எக்காரணத்தாலோ அங்கேயே தங்கி விடுகிறான்.

இந்திய ஸினிமாக்களில் சங்கீதத்துக்கு எவ்வளவு உபயோகம் இருக்கிறது என்பது இங்கே பரிபூர்ணமாய் நிரூபிக்கப் பெறுகிறது. நெருக்கடி ஒன்று நேர்கிறது. உள்ளூர்ச் செம்படவன் ஒருவன் ஒரு கத்தியை எடுத்து, டோனியைக் குத்திக் கொல்ல யத்தனிக்கிறான். கீதா பாலி, 'டக்'கென்று உருக்கமாக ஒரு பாட்டுப் பாடி அதைத் தடுத்துவிடுகிறாள்.

பரபரப்பான நிகழ்ச்சியெல்லாம் கதையின் கடைசிக் கட்டத்துக்கு ஒதுக்கப் பெற்றிருக்கின்றன. மரியாவின் குருட்டு அண்ணனாக நடிக்கும் கே. என். சிங் வாட்டசாட்டமான ஆசாமி. மிக்க அமைதியும் அடக்கமும் தெய்வபக்தியும் கொண்ட அந்த அண்ணன், மரியாவின் காதலனை டோனியின் குரல்வளையைப் பிடித்து ஒரே தூக்காகத் தூக்கித் தரையிலே உருட்டுகிறான். உள்ளூர்ச்செம்படவன் ஒருவனை மரியா மணந்துகொள்கிறாள். ஆனால், டோனியோடு ஓடிப் போக முயல்

கிறாள். கடைசி நிமிஷத்தில் காதலர் இருவரும் ஓடுவதைச் செம்படவர் கண்டு பிடித்து விடுகிறார்கள்.

முன் படகில் காதலர் ஓட, பின் படகில் செம்படவர் துரத்துகிறார்கள். துப்பாக்கிக் குண்டுகள் ஒரு படகிலிருந்து மறு படகுக்குப் பரஸ்பரம் பாய்கின்றன. வெகு பரபரப்பான காட்சி. ஆனால் யாருக்கும் காயம் பட்டதாய்த் தெரியவில்லை.

இறுதியில்தான் எதிர்பாராத சம்பவம் வருகிறது. ''என்னைச் சுட்டுவிடு'' என்று கதாநாயகனையே அழைக்கிறாள் மரியா. இப்படியாக, ஸினிமாப் படம் பிடிக்கும் கலையின் சகல நுணுக்கங்களும் இந்தப் படத்திலே பூர்த்தி பெற்றிருக்கின்றன.

படத்தின் படிப்பினை மிக உயர்வானது: திருட்டுத் தங்க வியாபாரம் செய்வது தவறு என்பதை இந்தப் படம் ஸ்தாபிதம் செய்து விடுகிறது. நீங்கள் திருட்டுத் தங்க வியாபாரம் செய்வீர்களானால், தேவ் ஆனந்துக்கு நேர்ந்ததைவிட அதிகக் கேடு உங்களுக்கு நேரக் கூடும். அவனுக்கு என்ன நேர்ந்தது தெரியுமோ? செம்படவச் சிறுமி மரியா, அவனுக்கு ஒரு பெரிய பிரசங்கமே செய்துவிட்டாள். 'திருட்டுத் தங்க வியாபாரம் செய்வது கடவுளுக்கே பொறுக்காத பாவம்' என்று அவள் தெள்ளத் தெளிய அதில் விளக்கிவிட்டாள்.

அயல் நாட்டு மெட்டுக்களைக் காப்பியடித்த பாட்டுக்களெல்லாம் பரவாயில்லை. கடலின் பேரலைகள், பாறைகளை மோதும் நடிப்பு ரொம்ப ஜோர்.

தன் கையே தனக்கு உதவி

பௌனார் ஆசிரமத்தில் ஒரு நாள் விவாதத்தின்போது ஒருவர் எழுந்து, ''தேசமெங்கும் கிணறுகள் தோண்டினால் உணவு உற்பத்தி பெருகும். அதனால் வறுமை நீங்கும். ஆகவே சர்க்கார் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்'' என்றார். அதற்கு நான், ''சர்க்கார் என்பது நாம் தானே! மக்களின்றிச் சர்க்கார் எங்கே இருக்கிறது? ஆகவே, வாருங்கள். நாமே அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுவோம். நமது நிலத்தில் முதலில் ஒரு கிணறு தோண்டத் தொடங்கலாம்'' என்றேன். எங்களுக்கு இதற்கு முன் கிணறு தோண்டி அநுபவமில்லை. ஆனால் மண் வெட்டி இருக்கும்போது கவலை என்ன? தோண்டிக்கொண்டே போனோம். என்ன ஆச்சரியம்! ஒரு நாள் தண்ணீரைக் கண்டோம். அக்கம் பக்கத்திலுள்ளோர் எல்லோரும் அதைப் புண்ணிய தீர்த்தமாகப் பாவித்துத் தண்ணீரைப் பருகிச் சென்றார்கள். 80 வயதான கோட்டி பாபா என்ற கிழவரும் சிரமப்பட்டு எங்களோடு வேலை செய்ததைப் பார்த்துச் சூர்காமில் உள்ள வாலிபர்கள் தங்களுக்குள், ''நாமும் பாபாஜீயோடு கிணறு தோண்டலாமே!'' என்று சொல்லி உடனே எங்கள் வேலையில் கலந்துகொண்டார்கள். மக்களின் இதயத்தில் ஆண்டவன் இந்த எழுச்சியை உருவாக்கும்போது மனந் தளர்வதற்கு என்ன இருக்கிறது?

—வினோபா பாவே

குருவிக் குடிசை

★

பட்சிகளின் இயல்புபற்றி மிஸ் எலன் ஹொவார்டு என்பவள் நேர்த்தியான புஸ்தகம் ஒன்று எழுதியிருக்கிருள். அதிலிருந்து எடுத்த ஒரு பகுதி இது. "இவள்மாதிரி பட்சிகளை ஆராய்ந்தவர் யாருமே இல்லை" என்று பிரபல விஞ்ஞானி ஜுலியன் ஹக்ஸ்லி புகழ்ந்திருக்கிருர்.

ஸஸ்ஸெக்ஸ் என்னும் ஊரில் உள்ள என் குடிசைக்கு மின்சாரக் கம்பிகள் போடுவதற்காக ஒரு தொழிலாளி வந்தார். குடிசை வாயிற்படியிலேயே அவர் பிரமித்து நின்றுவிட்டார். மரங்களிலிருந்து எண்ணற்ற பட்சிகள் பறந்து வந்து, என் தோளிலே உட்கார்ந்ததைக் கண்டதுந்தான் இப்படி அவர் பிரமிப்படைந்தார்.

அவைகளைக் காணும் வரையில் அவர் சாதாரணமான ஓர் அப்பாவிபோல் இருந்தார். கண்டதும், அவர் முகம் மலர்ந்து பிரகாசித்தது. "என்ன ஆச்சரியம்! என்ன ஆச்சரியம்!" என்று முணுமுணுத்தார்.

என்னைப் போல் வாழ்வதிலே பல சிரமங்கள் இருக்கின்றன. சதா சர்வகாலமும் ஏராளமான பட்சிகளுடனே நான் வாழ்கிறேன். இதனுல் வீடு அடிக்கடி அசுத்தம் ஆகிவிடுகிறது. சாமான்களெல்லாம் நாசமாகின்றன. ஒட்டடை அடிப்பதற்காக எல்லாப் பண்டங்களையும் தரையையும் பத்திரிகைக் காகிதங்களைப் போட்டு மூடிப் புத்தகங்களைத் துணி போர்த்து மூடுவோமே; இதே மாதிரி எந்த நேரமும் நான் செய்ய வேண்டியிருக்கிறது. இது தான் போகட்டும். எனக்கு நல்ல தூக்கமாவது உண்டா? அதுவும் கிடையாது. தூங்கும்போது ஜன்னல் கதவுகளை மூடி வைப்பேன். போது விடிவதற்குள்ளே பட்சிகள் வெளியே போவதற்காக அந்தக் கதவுகளைப் படார் படார் என்று கொத்தும். மொத்தத்தில் தங்களைத் தவிர வேறு எந்த விஷயத்திலும் என் கவனம் செல்லாதபடி பட்சிகள் தடுத்துவிடுகின்றன.

இன்னும் மோசமான சில கஷ்டங்களும் இருக்கின்றன. பட்சிகளோடு பழகும்போது, ஒவ்வொரு பட்சியிடமும் தனித்தனியே எனக்கு அன்பு உண்டாகிவிடுகிறது. ஆனுல், பட்சிகளின் ஆயுள் மிக அற்பம். தவிர, அவைகளுக்குப் பல ஆபத்துக்களும் நேர்கின்றன. வெகு ஜாக்கிரதையாக அவைகளைப் பாதுகாத்து வரும் நான் துளி ஏமாந்தால்



போச்சு; பூனைகள் செய்யும் அட்டூழியத்தைச் சொல்லி முடியாது.

பழைய பண்ணைப் பழத் தோட்டம் ஒன்றுக்கு நடுவிலே என் பட்சிகளின் குடிசையை நான் கட்டியிருக்கிறேன். பெரிய கிராமம் ஒன்றின் ஓரத்தில் இருக்கிறது அந்த இடம். என் பண்ணையையும் வேறு பண்ணைகளையும் சுற்றி, வழியிலே பல வீடுகள் இருக்கின்றன. ஆயினும், என் தோட்டத்தைச் சுற்றி மிக உயரமான கள்ளி வேலி அமைந்திருக்கிறது. தோட்டம் சொந்தமாக இருக்கிறது. ஆப்பிள், பீயர், பெர்ரி முதலிய மரங்கள் இருக்கின்றன. இவைகளில் பழுக்கும் பழமே என் பட்சிகளுக்கு உணவு.

பட்சிகள் கூடு கட்டும் காலம் வரும்போது, தோட்ட எல்லையைச் சுற்றிலும் மிக உயரமாகப் புல் வளரும்படி நான் விட்டுவிடுவது வழக்கம். பனி அல்லது மழையினால் ஈரமாய்ப் போன இந்தப் புல் பத்தைக்குள் நுழைந்து உள்ளே வரப் பூனைகள் சிரமப்படும். என்றாலும், நான் என்னதான் இந்த மாதிரி ஏற்பாடுகள் செய்தாலும், எப்படியோ பூனைகள் உள்ளே புகுந்து விடுகின்றன.

பூனைகள் மாத்திரமா? கொட்டைப் பருந்துகளைப் போன்ற ஜாக்டா, மாக்பை என்ற பறவைகள் வேறு உள்ளே வந்து சின்னஞ்சிறு குருவிகளைக் கொத்திக் கொண்டு போய்விடுகின்றன. பல நாள் அதிகாலையிலே ஐந்து மணிக்கு ஏதாவது ஒரு நீலச் சிட்டு, என் படுக்கைக்கும் ஜன்னலுக்கும் இடையே பரபரப்புடன் பறந்து கொண்டு, பீதியுடன் பெருங்கூச்சல் போடும். 'ஓடி வா! ஓடி வா!' என்று என்னை அது இப்படி அழைக்கிறது. நான் ஒரு குச்சியை எடுத்துக்கொண்டு ஓடி, அந்தச் சிட்டின் சத்துருவை வெளியே விரட்டுவேன்.

நான் திரும்பவும் படுக்கைக்கு வந்து சேர்ந்தேனோ இல்லையோ, சிங்சிங் என்று கரிக்குருவி அபாயக் கூச்சல் போடத் தொடங்கிவிடும். அதைக் கவ்வ வந்த பூனையின் மேல் ஜாடித் தண்ணீரைக் கொட்டித் துரத்துவேன். இப்படியெல்லாம் பட்சிகளை நான் காத்து வந்தும், பூனைகளுக்கும் கொட்டைப் பருந்துகளுக்கும் சில குருவிகள் இரையாகத்தான் ஆகிவிடுகின்றன.

சில குருவிகளுக்கு ஏதாவது காயம் ஏற்பட்டுவிடுகிறது. அவைகள் குணமடைய நான் உதவி புரிய வேண்டியிருக்கிறது. இப்படியாக, அல்லும் பகலும் ஓய்ச்சல் ஒழிவில்லாமல் பட்சிகளுக்குப் பணிவிடை செய்தவண்ணம் இருக்கிறேன். நான் 'டைப்' அடிக்க உட்காருவேன். நாலு குருவி வந்து என் 'டைப்ரைட்டர்' மீது குந்தும். வேறு இரண்டு குருவி வந்து என் தலைமயிரைக் கொத்தும். மற்றும் மூன்று வந்து, எழுத்துக் குமிழ்கள் மீது பொத்தென்று விழும்.

எனக்குப் பட்சிகள் என்றால் அளவற்ற அன்பு. இதனாலேயே என்னிடம் அவைகள் வெகு சீக்கிரத்தில் நேசமாகின்றன. அவைகளின் நம்பிக்கையை நான் சம்பாதித்து விடுகிறேன்.

பட்சிகள் குடிசைக்கு நான் ஜாகை போனவுடனே, பட்சிகளுக்கென்று ஒரு மேஜை தயாரித்து வைத்தேன். மடக்கு ஜன்னல் கதவுக்கு அருகே, அவைகளுக்கென்று ஒரு ஸ்நானத் தொட்டி

அமைத்தேன். ரோபின் என்ற செங்குருவி ஒன்றும், ஒரு நீலச் சிட்டும், ஒரு கரிக்குருவியும் மேஜைக்கும் ஸ்நானத் தொட்டிக்கும் வந்து சேர்ந்தன. அப்புறம் இன்னும் பல குருவிகளும் வரத் தொடங்கின. சகஜமாய்ப் பேசும் குரலிலேயே பட்சிகளிடம் நான் பேசுவேன். நம் பேச்சுக் குரலிலிருந்து, நம் கருத்தைப் புரிந்து கொள்ளப் பட்சிகள் வெகு சீக்கிரம் கற்றுவிடுகின்றன.

பட்சிகள் குடிசைக்கு நான் போய்ச் சேர்ந்ததும், அவைகளின் நடத்தையை என்னுலேயே நன்ருய்ப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, அவைகளுக்கு நல்ல புத்திசாலித்தனம் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

நான் போய் மூன்று மாதம் ஆகியிருக்கும். வசந்த காலம். ஒரு நாள் காலையில் அதிசயமான நிகழ்ச்சி ஒன்று நடந்தது. ஒரு கதவருகே நின்றுகொண்டு ஏதோ அவசர ஜோலி ஒன்றை நான் கவனித்துக்கொண் டிருந்தேன். நீலச்சிட்டு ஒன்று சிறகடித்துத் துயர / ஓலமிட்டுக்கொண்டு என்னிடம் ஓடிவந்தது. என் முன்னே சுற்றிச் சுற்றிப் பரபரப்புடன் வட்டமிட்டது. அப்போதெல்லாம் என் கண்ணேயே அது உற்றுப் பார்த்தது. அந்தச் சமயம் அது கீச் சிட்ட ஓலக் குரலை அதற்கு முன் ஒருபோதும் நான் கேட்டதில்லை.

வாயில்படியைத் தாண்டி வெளியே போனேன். உடனே அதன் ஓலம் நின்றுவிட்டது. அந்த நீலச்சிட்டும் அதன் துணைச்சிட்டும் எனக்கு முன் பறந்து, வழி காட்டிக் கொண்டு சென்றன. நான் வருகிறேனு என்பதைச் சற்று நேரத்துக் கொரு தரம் திரும்பிப் பார்த்து உறுதி செய்துகொண்டே பறந்தன. ஒரு மரப்பெட்டியிலிருந்த அவைகளின் கூடு சின்னபின்னமாய்ப் பிய்ந்திருந்தது. பெண் சிட்டின் பன்னிரண்டு முட்டைகளும் மரப் பெட்டிக்குள் அலங்கோலமாய்ச் சிதறிக் கிடந்தன. மரப்பெட்டியின் கதவு மூடித்தான் இருந்தது. ஆயினும், பட்சிகள் நுழைவதற்காக மரப்பெட்டியில் அமைத்திருந்த சிறு துவாரத்தின் வழியாக ஏதோ ஒரு பூனை தன் காலை நுழைத்து, சிட்டுக்களின் கூட்டை இப்படிப் பிய்த்திருக்கிறது!

கூட்டின் சிதைவை எடுத்து ஒழுங்குபடுத்திப் பழையபடி சரியாக வைத்தேன். இவ்வளவு நேரமும் இரண்டு சிட்டுக்களும் என் பக்கத்தில் அமர்ந்து மௌனமாக என்னையே கவனித்துக் கொண்டிருந்தன. முன்போலவே மரப்பெட்டியின் வலது பக்கத்தில் முட்டைகளை வைத்தால்தான் அவைகள் தாய்ச் சிட்டின் அருகே இருக்கும் என்று எண்ணினேன். இப்படி வைப்பதே அதற்கு உவப்பாயிருக்கும் என்று எனக்குத் தோன்றிற்று. ஆனல் முட்டைகளை இப்படி வைத்தேனே இல்லையோ, பெண் சிட்டுச் சட்டென்று பறந்து பெட்டிக்குள் புகுந்தது. வெளியிலிருந்து பூனையின் காலுக்கு எட்டாத தூரத்தில் மரப் பெட்டியின் மறுபுறத்தில் முட்டைகளையெல்லாம் தள்ளி வைத்தது. பத்து நாள் கழித்துக் குஞ்சு பொரித்தது. சிட்டின் புத்திசாலித்தனத்தால்தானே, ஆபத்துக்குத் தப்பி இப்படி அது சௌக்கியமாய்க் குஞ்சு பொரிக்க முடிந்தது! யோசிக்கும் திறன் அதற்கு இல்லாவிட்டால், இந்த நன்மை எப்படி விளைந்திருக்கும்?

மற்றொரு நீலச்சிட்டின் கூடு ஒரு மரப்பெட்டிக்குள் இருந்தது. ஒரு சமயம் ஏதோ ஞாபக மறதியாக அந்த மரப்பெட்டியின் கதவைப் பாதி உயர்த்தினேன். ஆனால், சிட்டு உள்ளே உட்கார்ந்திருந்ததைக் கண்டதும், சட்டென்று மறுபடியும் மூடிவிட்டேன். மரப்பெட்டியின் கதவு இப்படித் திறந்து மூடியதை இதற்கு முன் அது கண்டதேயில்லை. இதனால் அதற்குத் திகில் உண்டாகிவிட்டது. நுழைவாயில் துவாரத்தின் வழியாக அது வெளியே வந்து பறந்தோடித் தன் துணைச்சிட்டை அடைந்தது. நான் கதவைத் திறந்து மூடியதையெல்லாம் அந்த ஆண் சிட்டுப் பார்த்திருக்க முடியாது.

ஆண் சிட்டும் பெண் சிட்டும் திரும்பிக் கூட்டருகே ஓடி வந்தன. பெண் சிட்டுப் பழையபடி அடை காக்கத் தொடங்கியது. ஆண் சிட்டு வெகு கவனமாக மரப்பெட்டிக் கதவைப் பரீட்சித்துப் பார்த்தது. பிறகு பெட்டியின் நுழைவாயில் வழியாகப் பெண் சிட்டைக் கவனித்தது. பின்பு மரப்பெட்டியை மறுபடியும் ஒரு முறை பரீட்சித்தது. கடைசியாக, வெளியே சமீப வேலி ஒன்றில் போய் உட்கார்ந்துகொண்டது. பெண் சிட்டுக்குத் தைரியம் கொடுப்பதற்குத்தானோ, அல்லது காவலாகத்தானோ எதற்காக இப்படி உட்கார்ந்துகொண்டதோ தெரியவில்லை.

பட்சிகள் தங்கள் குரலின் ஏற்ற இறக்கம், அபிநயம் இவைகளின் மூலம் ஒன்றோடொன்று பேசிக் கொள்ளுகின்றன என்பது நிச்சயம். ஏனென்றால், நான் என் குரலைச் சிறிது மாற்றினாலும் சற்று ஜாடை காட்டினாலும், என் கருத்தை அவைகள் புரிந்துகொள்ளுவதைக் காண்கிறேன்.

பெருஞ்சிட்டுக்கள் என் வெண்ணெய்த் தட்டைக் கொத்த விரும்புகின்றன. பெரும்பாலும் அப்படிக் கொத்த நான் விடமாட்டேன் என்று அவைகளுக்குத் தெரியும். அவைகள் மெல்லச் சிறிது தூரத்துக்கு அப்பால் வந்து உட்கார்ந்து கொள்ளுகின்றன. முதலில் வெண்ணெய்த்தட்டை ஆசையோடு பார்க்கின்றன; பிறகு என் முகத்தைப் பார்க்கின்றன.

''வாருங்களேன்'' என்று நான் கொஞ்சிக் கூப்பிட்டால், அவைகள் வந்து வெண்ணெயைத் தின்கின்றன. ''கூடாது; போங்கள்'' என்று நான் சற்றுக் கடுமையாய்ச் சொன்னால், தாங்கள் இருந்த இடத்திலேயே இருந்துகொண்டு என்னைக் கெஞ்சுவதுபோல் பார்க்கின்றன; பின்பு வெண்ணெயைப் பார்க்கின்றன. இன்னும் கொஞ்சம் கடுமையாக, ''கூடாது; கூடாது'' என்று நான் சொன்னால், அவைகள் தத்தித் தத்தி இன்னும் சிறிதுதூரத்தில் போய் உட்கார்ந்து கொள்ளுகின்றன. ''கூடவே கூடாது'' என்று நான் கோபமாய்ச் சொன்னால், ஜன்னலைப் பார்க்க அவைகள் ஓடிப்போகின்றன. சட்டென்று கொஞ்சும் குரலில், ''போனால் போகிறது; வாருங்கள்'' என்று நான் அழைத்தால், உடனே அவைகள் மேஜைமீது தத்தித் தத்தி என்னை நோக்கியபடியே வெண்ணெயை நாடி வருகின்றன.

அடுத்த வீட்டில் உள்ள ஒரு கரிக்குருவிக்குத் திருடன் என்று பெயர். அது ஒரு சமயம் இந்தச் சிட்டுக்களைப்போல் என்னிடம்

வெகு பணிவாக நடந்துகொண்டே இருந்துவிட்டுக் கடைசியில் என்னை ஏமாற்றிவிட்டது.

அது என்னிடம் காட்டிய பணிவுக்கும் புத்திசாலித்தனத்துக்கும் பரிசாக எப்போதும் அந்தக் கரிக் குருவிக்கு ரொட்டியும் உருளைக் கிழங்கும் மட்டும் கொடுத்து வந்தேன். ஒரு நாள் என் மடிமீது ஒரு தட்டில் என் சிற்றுண்டியும் ஒரு வாரத்து ரேஷன் கறியும் வைத்திருந்தேன். கரிக்குருவி திடீரென்று தன் பணிவையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு, என் மடியில் இருந்த கறியை 'லபக்' என்று கொத்திக்கொண்டு போய் விட்டது. வேலியில் போய் வெகு குஷியாகக் கொக்கரித்துக் கொண்டு என் கண்முன்னே கறியைத் தின்னத் தொடங்கியது.

பட்சிகளை நெருங்கித் தொடர்ந்து கவனித்திருக்கிறேன். அவைகளின் செயல்களை வெறும் இயற்கைத் தூண்டுதல் என்று சொல்ல முடியாது; புத்திசாலித்தனம் என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனால், பட்சி இனத்துக்கு இனம் அந்தப் புத்திசாலித்தனம் வித்தியாசப்படுகிறது. காவல் காத்துக்கொண்டிருப்பவனைக் கண்டு பட்சிகள் பயப்படும் சமயத்தில் மாத்திரமே பெரும்பாலும் அவைகளின் செயலை ஆராய்ந்துவிட்டு, அவைகளைப் பற்றி ஆராய்ச்சியாளர் தீர்ப்புக் கூறுகிறார்கள். ஆனால், மனிதர்களையே எடுத்துக்கொண்டால், தங்கள் குழந்தை குட்டிகளின் உயிருக்கே ஆபத்தான நிலைமையில் எத்தனை பெற்றோர் தங்கள் அறிவைப் பரீட்சை கொடுக்க இசைவார்களோ தெரியவில்லை.

அருமையான யுக்தி

முதல் உலக யுத்தத்தின்போது, அட்லாண்டிக் கடலில் ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களின் உபத்திரவம் தாங்க முடியவில்லை. அவைகள் அத்தனையையும் அழித்துவிடுவதற்கு வில் ரோகர்ஸ் என்ற நடிகர் ஒரு யுக்தி சொன்னார்.

"அட்லாண்டிக் சமுத்திர நீரை ஒரேயடியாய்க் கொதிக்கச் செய்துவிடவேண்டும். அந்தச் சூடு தாங்காமல் ஜெர்மன் நீர் மூழ்கிகளெல்லாம் மேலே குளிர் காற்று வாங்க நீர் மட்டத்துக்கு வரும். உடனே டப்டப் என்று அவைகளை நாம் சுட்டுத் தள்ளலாம்" என்றார் நடிகர்.

"அது சரிதான். அவ்வளவு பெரிய சமுத்திரத் தண்ணீரை எப்படிக் கொதிக்கச் செய்வது?" என்று அவரை யாரோ கேட்டார்கள்.

"அதைச் சொல்வது என் வேலை அல்ல. யுக்தியைத் தான் நான் சொல்ல முடியும். அதை நிறைவேற்றும் விவரங்களையெல்லாம் சொல்லிக்கொண்டிருக்க முடியாது" என்று நடிகர் பதிலளித்தார்.

—'நியூ யார்க் ஹெரால்டு டிரிப்யூன்'

பத்தே வருஷத்தில் நம் தொழிலாளி
களுக்கெல்லாம் கார் கிடைக்குமாம்!

இந்தியக் கார்



★

இப்போது, மோட்டார்-காரின் விலையில் அறுபது சதவிகிதத்துக்கு வேண்டிய சாமான்கள் உள்ளூரிலேயே தயாராகின்றன. இது 8 வருஷங்களுக்கு முன்பு நாட்டில் ஆரம்பித்த மோட்டார் உற்பத்தித் தொழிலின் சிறந்த முன்னேற்றத்தைக் காட்டுகிறது அல்லவா? முதலில் மோட்டார் தயார் செய்வதற்கு ஒரு பெரிய இடம் கட்டுவதோடு நின்றுவிடும் போல் இருந்தது. ஆனால் சிறிய ஆணிகள் திருகாணிகளிலிருந்து மோட்டாருக்கு வேண்டிய முக்கியமான சாமான்கள் வரைக்கும் இப்போது இந்திய மோட்டார் தொழிற்சாலையில் செய்கிறார்கள். இன்னும் இரண்டு வருஷத்தில் மோட்டார் எஞ்சினுக்கு வேண்டிய மிக நுணுக்கமான சாமான்களைக்கூட நாமே தயார் செய்துகொள்ளும் அளவுக்கு முன்னேற்றமடைந்து விடுவோம் என்று மோட்டார் தொழில் முதலாளிகள் நம்புகிறார்கள்.

இந்த முன்னேற்றத்துக்கு இந்திய சர்க்கார்தான் காரணம் என்று சொல்ல வேண்டும். மோட்டார் உற்பத்தித் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு ஆகும் செலவில் மூன்றில் ஒரு பங்கைச் சர்க்கார் ஏற்றுக்கொண்டு பண உதவி அளித்து வருகிறார்கள். தொழில் முதலாளிகளிடம் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையே இதற்குக் காரணமாகும். தொழில் அபிவிருத்தியின் பொருட்டுச் சர்க்கார் மேலும் மேலும் லட்சக்கணக்கான ரூபாய்களைக் கடனாகக் கொடுத்தும் உதவி வருகிறார்கள். உள்ளூரில் மோட்டார் உற்பத்தி செய்பவர்களுக்குச் சர்க்கார் சாதகமாயிருப்பதற்கிணங்க, பாதுகாப்பு மந்திரி இலாகாக்காரரும் ராணுவத்துக்கு வேண்டிய கார்களை வெளிநாட்டிலிருந்து வரவழைப்பதை நிறுத்திவிட்டு இப்போது உள்ளூர்த் தொழிற்சாலையிலேயே அவைகளை வாங்கிக்கொள்கிறார்கள்.

பண உதவி அளிப்பதோடு மட்டும் இந்தத் தொழில் அபிவிருத்தியில் சர்க்கார் காட்டும் சிரத்தை நின்றுவிடவில்லை. கார் செய்வதற்கு மிக அவசியமான சில சாமான்களை இன்னமும் வெளிநாட்டிலிருந்து வரவழைக்க வேண்டியிருக்கிறது. அந்தச் சாமான்களுக்கு லைசன்ஸ் தடைகளைச் சிறிது தளர்த்தியிருக்கிறார்கள். அத்தனை சாமான்களையும் வெளிநாட்டிலிருந்து வரவழைத்து இங்கே கோத்துவிடுகிற கம்பெனிகளின் லைசன்ஸ்களை மட்டும் குறைத்துவிட்டார்கள். இப்படிச் செய்வதனால் வெளிநாடுகளிலிருந்து கார்களை வரவழைப்போரின் வியாபாரத்தில் மண்ணைப் போடுவதோடு உள்ளூரில் தொழில் விருத்தியாவ

மூலம்: பம்பாய்க் கிரானிக்கிள் (ஆங்கிலம்: 6-7-'52), பம்பாய்.

துடன், இங்கே தயாராகும் மோட்டார் சாமான்களுக்கும் நல்ல கிராக்கி ஏற்படும் என்று சர்க்கார் நம்புகிறார்கள். இறக்குமதியாகும் கார் சாமான்களின் மீது வரியைச் சர்க்கார் உயர்த்தியது மேலும் அதிக சௌகரியமாயிற்று. எஃகு, வர்ணம், ரப்பர் போன்ற பல சாமான்களைத் தயாரிக்கும் தொழில்கள், கார் செய்யும் தொழிலுடன் இணைந்திருப்பதால் அநேக நாடுகளில் கார் உற்பத்தியை மிக முக்கியமான தொழிலாகக் கருதுகிறார்கள். உதாரணமாக இன்று உற்பத்தியாகும் கார் ஒன்றுக்கு நாற்பது ஐம்பது விதமான வகைகளில் சுமார் இரண்டு டன் எஃகு வேண்டியிருக்கிறது. மோட்டார் தொழில் மிகமிக முன்னேற்றமடைந்திருக்கும் அமெரிக்காவில் வருஷத்தில் 5 லட்சம் கார்கள் தயாராகின்றன. அவைகளுக்குப் பத்து லட்சம் டன் எஃகு வருஷந்தோறும் செலவாகிறது.

இந்தியாவிலோ இந்தத் தொழில் மிகவும் ஆரம்ப தசையில் இருப்பதால், ஒவ்வொரு வருஷமும் 20,000 கார்களைத்தான் தயார் செய்ய முடிகிறது. அவைகளுக்குத் தேவையான எஃகு 40,000 டன் தான். தொழில் குழந்தைப் பருவத்தில் இருந்தாலும் நம் நாட்டுத் தொழில்களில் அது ஒரு நல்ல ஸ்தானம் பெற்றிருக்கிறது என்றே சொல்லலாம். நம் கார் உற்பத்தித் தொழிலுக்குச் சென்ற வருஷம் ஸ்வீடனிலிருந்து வந்த தோல், கித்தான், வர்ணம், ரெஸின், பாட்டரிகளைப்போல் காருக்கு வேண்டிய சாமான்கள், பத்து லட்சம் ரூபாய் பெறுமான முள்ளவையாக இருந்தன.

ஆயினும் நம் தொழிற்சாலைகளில் தயாராகும் கார்களுக்குக் கிராக்கி குறைவாயிருப்பதால், அவைகளின் விலை வெகுவாக ஏறுகிறது. கார்களின் விலை ஏற ஏற அவைகளுக்குக் கிராக்கியும் குறைந்துகொண்டே வருமல்லவா? இப்படி ஒன்றையொன்று பாதிப்பதற்கு அநேகம் காரணங்கள் இருக்கின்றன. உதாரணமாக, வெளிநாடுகளிலிருந்து வரவழைத்த பல சாமான்கள் இப்போது வரவில்லை. ஆனால் இன்னமும் சில சாமான்களை வரவழைத்துத்தான் ஆக வேண்டியிருக்கிறது. இவைகளை உள்நாட்டிலேயே தயார் செய்வதற்கு, அதிகப் பணம் செலவாகிறது. வருஷந்தோறும் கார்களின் மாடல் மாறிக்கொண்டே வருகிறது. ஒரு மாடல் மாறினால் உடனே லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்ய நேர்கிறது. புதுப் புதுச் சாமான்கள் தேவையாகவே, கடைசியில் கார் தயார் செய்யும் செலவு ஏறி, வியாபாரத்தில் போட்டியிட முடியாமல் போய் விடுகிறது. இப்போது இந்தியாவிலுள்ள இரண்டு பெரிய தொழிற்சாலைகளின் கார்களுக்குப் போதிய கிராக்கி இல்லாததாலேயே குறைவான கார்களை அவை உற்பத்தி செய்கின்றன.

நம் நாட்டு மோட்டார் உற்பத்திக் கம்பெனியார் ஐரோப்பா, அமெரிக்காவிலுள்ள பெரிய மோட்டார் உற்பத்திக் கம்பெனிகளின் ஏஜெண்டுகளாகவே இருக்கிறார்கள். வெளி நாட்டில் உற்பத்தியாகும் சாமான்களைப்போலவே உள்நாட்டிலும் அவர்கள் தயார் செய்ய வேண்டியிருக்கிறது. உபயோகிப்பதற்கு முன்பு அவைகளை வெளி நாட்டுக்கு அனுப்பிச் சோதித்துப்

பார்க்கச் செய்கிறார்கள். இதனால் தங்கள் வியாபாரம் கெட்டு ஏதாயினும் மந்தமாகிவிடுமோ என்று அந்த வெளிநாட்டுக் கம்பெனிகள் பயந்து, நம் உள்நாட்டுச் சாமான்களை நிராகரிக்கும் என்று அஞ்ச வேண்டியதில்லை. வெளிநாட்டுக் கம்பெனிகள் நமக்கு மிகவும் உபகாரம் செய்கின்றன. நம் வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் அவைகள் மிக்க சிரத்தை காட்டுகின்றன.

ஆரம்பத்தில் மேல்நாட்டுக் கம்பெனிகளின் உதவி தேவையாயிருந்தது. இப்போது அப்படியில்லை. நாளடைவில் அவைகளின் தொடர்பும் நமக்குக் குறைந்து கொண்டே வருகிறது. இன்னும் பத்து வருஷத்துக்குள் பிற நாட்டின் உதவியில்லாமல் நாமே நம் கார்களை முழுவதும் தயார் செய்து கொள்ள முடியும் என்று நம் மோட்டார் உற்பத்திக்காரர்கள் கருதுகிறார்கள். அப்போது கார்களின் விலை நன்றாய்க் குறைந்து விடும். ஆயினும், அப்போதும் சாதாரணத் தொழிலாளி ஒவ்வொருவனுக்கும் சொந்தத்தில் கார் இருப்பது சாத்தியமாகாது.

ஜெர்மனியில் மோட்டார் தொழில் முன்னேறுவதற்குச் செய்த வழியை நாமும் பின்பற்றினால் ஒவ்வொரு தொழிலாளியும் சொந்தத்தில் ஒரு கார் வைத்துக் கொள்வது சாத்தியமாகும். நூறு பவுன் விலைக்குள் அடங்கும் கார் ஒன்றை ஜெர்மானியர் தயார் செய்தார்கள். பிறகு வெளிநாட்டிலிருந்து விற்பனைக்கு வரும் கார்களை வராமல் செய்துவிட்டு, இந்த மலிவான காரைத் தவிர உள்ளூரில் வேறு விதக் கார்கள் செய்வதையும் நிறுத்திவிட்டார்கள்.

நம் மோட்டார் உற்பத்தி முதலாளிகள் இப்படி ஓர் ஏற்பாடு செய்வதற்கு முற்றும் சாதகமாயிருக்கிறார்கள். சர்க்கார் இன்னும் சற்றுக் கை கொடுத்து உதவினால் சாதாரணமாய் ஒவ்வோர் ஆணும் பெண்ணும் காரிலேயே வேலைக்குச் செல்லலாம். அது மட்டுமல்ல. அமெரிக்காவிலுள்ள பள்ளி மாணவர்கள் போல நம் தொழிலாளரின் குழந்தைகளும் 'பாரத்-62' மாடல் காரில் பள்ளிக்கூடம், காலேஜ்களுக்குப் போக முடியும்.

ஒரு ராஜாவின் பட்டம்

இதோ இது நேபாள ராஜாவின் பட்டம். அவருக்கே இது முழுவதும் நினைவிருக்குமோ என்பது சந்தேகந்தான்:

ஸ்வஸ்திஸ்ரீ கிரிராஜசக்ர சூடாமணி நரநாராயணேத்யாதி விவித விருதாவலீ விராஜமான மஞ்சுநாத ஒஜஸ்ரீ ராஜன்யப்ரோஜபல நேபாளதாரா ஓம் ராமபட்ட அதுல ஜ்யோதிர்மய த்ரிசக்திபட்ட அதிப்ரபல கோர்க்கா தக்ஷிண பாஹு மஹாதிபதி ஸர்வோச்ச கமாண்டர்-இன்-சீஃப் ஸ்ரீமன் மஹாராஜாதிராஜ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாராஜ த்ரிபுவன் வீர விக்ரம ஜங் பகாதுர் ஷா பகாதுர் ஷம்ஷேர் ஜங் தேவானும் ஸதா ஸமரவிஜயினும்.

முத்து மாலை

லலிதா கோத்வால்

இந்த அம்மாள் 'ஓரியெண்ட்' பத்திரிகையில் முத்தைப் பற்றித் தொடர்ச்சியாகப் பல கட்டுரைகள் எழுதிவருகிருர். விஞ்ஞான ரீதியாகவும், அநுபவ பூர்வமாகவும் முத்தின் வரலாறு, தன்மை முதலியவற்றை விவரிக்கும் அந்தக் கட்டுரை வரிசையில், 'முத்தை வாங்குவதும் பாதுகாப்பதும்' பற்றிய இது சகலருக்கும் பயன்படக் கூடியது.

ஜிலு ஜிலு என்று ஒளி செய்யும் கீழ்நாட்டு முத்துக்களை அணிந்துகொள்ள அநேகமாக எல்லாப் பெண்களும் ஆசைப்படுகிருர்கள். சுத்தமான உருண்டை வடிவமும் நல்ல ரங்கும் உள்ள முத்தே நவரத்தினங்களின் ராணி என்று சொல்வது வழக்கம். மற்ற ரத்தினங்களை யெல்லாம்விட முத்தையே மேல்நாட்டுப் பெண்கள் அதிகமாக விரும்புகிருர்கள். அவர்களில் இயற்கை முததுக்கள் வாங்கச் சக்தியில்லாதவர்கள் செயற்கை முத்துக்களையாவது வாங்கி அணிந்துகொள்கிருர்கள்.

பாரசீக வளைகுடாவில் கிடைக்கும் முத்துக்களே முதல்தரமானவை. மன்ஞர் ஜலசந்தியில் கிடைக்கும் முத்துக்களை அடுத்த படியாகச் சொல்லலாம்.



இலங்கையில் முத்துக் குளிப்போர்

மூலம்: ஓரியெண்ட் (ஆங்கிலம், 24-8-'52), கல்கத்தா.

இயற்கை முத்துக்களையும் செயற்கை முத்துக்களையும் சாதாரணமாகப் பார்த்து வித்தியாசம் தெரிந்துகொள்ள முடியாது. இதனால், பெருஞ்செல்வச் சீமாட்டியைப் போலவே அவளுடைய தாதியும் முத்துமாலை அணிந்திருக்கலாம். எது செயற்கை, எது இயற்கை, அல்லது இரண்டுமே செயற்கைதானா என்று கண்டுபிடிக்க முடியாது. இப்படி வித்தியாசம் தெரியாதிருப்பதும் ஒருவிதத்தில் நல்லதுதான் என்று பலர் நினைக்கிறார்கள்.

கடலில் வசிக்கும் சிப்பிக்குள், வெளியில் உள்ள தூசி ஏதாவது புகுந்து விடுகிறது. அது உறுத்துவதால், ஒருவிதமான கெட்டித் திரவம் சிப்பிக்குள் உற்பத்தியாகி, அந்தத் தூசியைச் சுற்றிலும் படை படையாகச் சூழ்ந்து மூடிக்கொள்கிறது. இதுவே வர வர இறுகி முத்தாகி விடுகிறது.

பல வருஷ காலம் இப்படி மேலும் மேலும் திரவம் மூடிக்கொண்டே யிருந்தால், பெரிய முத்தாகிறது. ஒன்றிரண்டு வருஷமேயானால் சிறிய முத்து அமைகிறது.

சிப்பி வசிக்கும் பிரதேசம், கடல் நிறம், சிப்பியின் வகை இவைகளை அநுசரித்து, முத்தின் வர்ணம் அமைகிறது. வெள்ளை, பால் வெள்ளை, லேசான மஞ்சள், ரோஜா, நீலம், பழுப்பு, கரிய எஃகு இப்படிப் பல வர்ண முத்துக்கள் உண்டு.

உருண்டை, தட்டை, கோழி முட்டை, அரை உருண்டை இப்படி முத்தின் உருவங்களிலும் பலவகை இருக்கின்றன.

கறுப்பு, ரோஜா, பச்சை முதலிய வர்ண முத்துக்கள் அபூர்வமாகத் தான் கிடைக்கும். உருவிலும் ரங்கிலும் ஒரே விதமான அபூர்வ வர்ண முத்துக்களைச் சேகரித்து ஒரு மாலை தயாரிப்பதென்றால், அதற்கு 20 முதல் 50 வருஷங்கள்கூட ஆகிவிடும். இப்படிச் சேகரித்துக் கோத்த முத்து மாலைக்கு ரூ. 10,000 வரையில் விலையாக வாங்கி விடுவார்கள். ஆனால், அதை நீங்கள் மறுபடியும் விற்க விரும்பும்போது, வாங்குவோர் அகப்படுவது துர்லபம். உங்களுக்கு ரூ. 2,000 கிடைத்தாலே பெரிய அதிருஷ்டமாயிருக்கும்.

நஷ்டமாகாமல் இருக்க வேண்டுமென்றால், வெள்ளை அல்லது பால் வெள்ளை முத்துக்களை நீங்கள் வாங்குவதுதான் நல்லது. இவைகளின் விலை அதிகமாக ஏறி இறங்குவதில்லை.

முத்தைச் சிப்பியிலிருந்து எடுத்ததும், அதை நன்றாய்க் கழுவி, ரசாயனத் திரவம் ஒன்றில் போட்டுச் சுத்தம் செய்கிறார்கள். அந்த ரசாயனத் திரவம் ஒரு வியாபார ரகசியமாகும். சுத்தம் செய்த முத்தைப் பாலிஷ் செய்கிறார்கள். சரமாகக் கோக்க வேண்டிய முத்தைத் துளையிட்டு மீண்டும் பாலிஷ் செய்கிறார்கள். முத்தில் போடும் துளை மிகவும் சிறியதாய் இருக்க வேண்டும். இல்லையானால், அந்த முத்தின் விலை குறைந்துவிடும்.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் முத்தை நிறுத்து விற்க, ஒருவித நிறை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு 'காரட்'டில் நாலில் ஒரு பங்குக்குப் 'பர்ல் க்ரெயின்' என்கிறார்கள். நிறையின் சதுரத்துக்கு ஏற்றபடி முத்தின் விலை ஏறுகிறது.



சிப்பிக்குள் கிறிப் பார்க்கும்போது முத்துக்கள் இப்படிக் கிடப் பதைக் காணலாம்.

அழைத்துக் காட்டி அதற்கு மதிப்புப் போடச் சொல்ல லாம்.

இப்படி ஒரு முத்துச் சரத்தை வாங்கியதும், அதை எடுத்துக்கொண்டு ஜாவேரி பஜாருக்கு அருகேயுள்ள தரம்காண்டா என்னும் ஸ்தாபனத்துக்கு நீங்கள் போக வேண்டும். அங்கே அந்தச் சரத்தின் அரக்கு முத்திரையை நீக்கிவிட்டு, சரத்தை முத்துப் பரீட்சை யந்திரம் ஒன்றுக்குள் செலுத்துவார்கள். ஏதாவது செயற்கை முத்து அந்தச் சரத்தில் இருக்குமானல், யந்திரம் தானகவே நின்று, அந்த முத்தை நிராகரித்து விடும். சரம் முழுவதும் அசல் முத்துக்களே கோத்திருந்தால், தரம்காண்டா ஆசாமிகள் உங்களுக்குக் காரண்டி சர்ட்டிபிகேட் ஒன்று கொடுப்பார்கள்.

பம்பாயில் முத்து நிறையைச் 'சாவ்' என்று குறிக்கிருர்கள். ஒரு 'சாவ்' நிறையுள்ள முத்தைச் சுமார் 8 ரூபாயிலிருந்து 300 வரைக்கும் விற்கிருர்கள். நிறம், குணம் இரண்டையும் பொறுத்து விலை இப்படி வித்தியாசப்படுகிறது. ஆறு சாவ் நிறையுள்ள சிறந்த முத்துச்சரம் ஒன்றை நேரே ஒரு முத்து வியாபாரியிடம் போய் வாங்கினல், 1,800 ரூபாய் ஆகும். அதையே ஒரு பிரபல கம்பெனி யாரிடம் போய் வாங்கினல், அவர்கள் வைக்கும் லாபம், கமிஷன் எல்லாம் சேர்ந்து, 50 முதல் 75 சத விகிதம் வரை அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கும். ஒரு முத்துச்சரத்தை நீங்கள் வாங்கு முன் வேறு வியாபாரிகளிடம்

அடுத்தபடியாக அந்த முத்துக்களை வகை பிரித்து, நிறை போட வேண்டும். ஒவ்வொன்றையும் சிறு சல்லடை ஒன்றில் போட்டு, 'ஸைஸ்' என்ன என்று நிர்ணயித்து, 'ஸைஸ்' வாரியாகப் பிரிப்பார்கள். ஒவ்வொரு 'ஸைஸ்' முத்துக்களையும் தனித்தனி நிறுத்து மொத்த நிறையைக் கணக்கெடுத்து, அந்த நிறையும் உங்களுக்கு வியாபாரி சொன்ன நிறையும் ஒத்திருக்கிறதா என்று பார்ப்பார்கள். கடைசியாக, ஒரு பில் தயாரித்து ஒரு பிரதி உங்களுக்கும் ஒரு பிரதி வியாபாரிச்கும் கொடுப்பார்கள். முத்துக்களின் எண்ணிக்கை, நிறை, மொத்த விலை இவைகளை அதில் குறிப்பிட்

டிருப்பார்கள். இந்த அருமையான சேவையைப் புரியும் நிபுணர்கள் இதற்கெல்லாம் சொற்ப ஊதியமே பெற்றுக்கொள்கிறார்கள். இந்தத் தரம்காண்டா ஸ்தாபனத்தைக் குஜராத்தி ஜெயின் ட்ரஸ்ட் ஒன்று ஸ்தாபித்து, பரோபகார மாக நடத்தி வருகிறது. தரம் காண்டா என்பதற்குத் 'நீதித் தராசு' என்று பொருள்.

முத்துக்களை வாங்கியபின், மாலையாகக் கட்ட வேண்டும். உங்களுக்கு முத்துக்களை விற்ற வியாபாரியே பெரும்பாலும் இந்த வேலையையும் ஏற்றுக்கொள்வார். உங்கள் முத்துக்களை மாலை கட்டும்போது, நீங்கள் நேரே இருந்து பார்த்துக்கொள்வதுதான் நல்லது. இல்லாவிட்டால் போலி முத்துக்கள் ஒன்றிரண்டை மாலை கட்டும் தொழிலாளி நடுவிலே புகுத்திவிடக்கூடும்.

தரம்காண்டா நிபுணர்கள் உங்களிடம் முத்துக்களைக் கொடுத்த பின், மீண்டும் ஒரு முறை அவைகளைச் சல்லடையில் போட்டு 'ஸைஸ்' வாரியாகப் பிரிக்க வேண்டும். மேஜை மீது ஒரு சிவப்புத் துணியைக் கொஞ்சமும் சுருக்கம் விழாமல் இழுத்துப் பிரித்து நாலு மூலையையும் மேஜைக் கால்களில் கட்டி விட வேண்டும். அந்தத் துணியின் மேல் சலித்தே இப்படி 'ஸைஸ்' பிரிக்க வேண்டும். பிறகு, மிகச் சிறந்த பட்டு இழைகள் சில வற்றை முறுக்கி மிக மெல்லிய உறுதியான சரடு ஒன்று தயாரிக்க வேண்டும். நுண்மையான கம்பியை விட மிக மிக மெல்லிய ஊசி ஒன்றைக் கொண்டு, அந்தப் பட்டுச் சரட்டில் உங்கள் முத்துக் களைக் கோக்கவேண்டும். அந்தப் பட்டுச் சரட்டின் இரண்டு நுனியிலும் இந்திய மோஸ்தரில் ஒரு குஞ்சம் கட்டி விடலாம். நாம் உடுத்தும் சேலை அல்லது தாவணிக்கு இதுவே மிகவும் பொருத்தமாக இருக்கும். இதை விட்டு, சிறு வைரங்கள் பதித்த கொக்கிகள் இரண்டை வேண்டுமானாலும் பொருத்தி விடலாம். கவுன் அல்லது அங்கி அணிவோருக்கு இந்தக் கொக்கிகளே பிடிக்கும்.

முத்து மிகவும் மிருதுவானது. சற்றுத் தவறினால் அதில் கீறு விழுந்துவிடும். வைரம், சிவப்பு முதலியவை நல்ல உரம் பெற்றிருக்கும். அவைகளைப் போல் முத்து நீடித்து உழைக்காது. வெகு நாள் வெளியிலேயே இருந்து காற்றில் உலர்ந்து விட்டால், முத்தின் ஜொலிப்புக் குன்றி விடும். அப்படிக் குன்றாது தடுப்பதற்கு, சுமார் ஆறு மாதத்துக்கு ஒரு தடவையாவது பத்து மடங்கு தண்ணீரில் ஒரு மடங்கு உப்பைக் கரைத்து அதில் உங்கள் முத்துக்களை ஒரு நாள் ராத்திரி முழுவதும் ஊறப் போட்டு வைப்பது நல்லது. ஆவிட் முதலிய ரசாயனப் பொருள்கள் படுவது, தூசி, உராய்வு, வேர்வை, உஷ்ணம், ஈரம் இவைகளால் எல்லாம் முத்துக்குக் கெடுதி நேரும்.

ஒவ்வொரு தடவையும் முத்து மாலையை அணிந்துவிட்டுக் கழற்றும்போது, சுத்தமான பட்டுத் துண்டு ஒன்றைக் கொண்டு முத்துக்களைச் சுத்தமாகத் துடையுங்கள். பிறகு மற்றொரு பட்டுத் துண்டில் மாலையைச் சுருட்டி, ஒரு காகிதப் பெட்டி, மர அலமாரி, பீரோ எதிலாவது வையுங்கள். அலங்காரமான நகைப் பெட்டியில் முத்துமாலையை

வைப்பது தவறு. நகைப் பெட்டியில் உள்ள துணி அல்லது வெல்வட்டினால் முத்துக்கு மிகவும் கெடுதியே நேரும். இரும்புப் பெட்டியில் முத்தை வைப்பதும் சரியல்ல. இப்படி வைத்தால் வைரத்தைப் போலவே முத்தும் தன் அற்புதமான ஜொலிப்பைச் சிறிது சிறிதாகக் காலக் கிரமத்தில் இழந்துவிடும்.

சில சமயம் உங்கள் முத்துக்கு அபாயம் நேரிடலாம். அது எரிந்தோ கருகியோ போகலாம். அப்போது அதை எறிந்துவிடாதீர்கள். முத்து நிபுணரிடம் கொடுங்கள். அவர் அதன் கருகிய மேல் படலத்தை, வெங்காயம் உரிப்பதுபோல உரித்து நீக்கி விடுவார். உள்ளே நல்ல பளபளப்புடன் சிறிய முத்து அப்படியே இருக்கும். இந்த வேலையை மிகவும் ஜாக்கிரதையோடு லாகவமாகச் செய்யவேண்டும். முத்தை இந்திய ரத்தின வியாபாரிகள் முதலில் பத்துக்கொன்று உப்புக்கரைத்த தண்ணீரில் போட்டுக் கழுவி, பிறகு ரீடா (சீக்கராம்) நீரில் கழுவிச் சுத்தம் செய்கிறார்களாம். 'ஹைட்ரஜன் பெராக்ஸைடு' என்ற திரவத்தில் கொஞ்சம் தண்ணீரைக் கலந்து, அந்த நீரைச் சட்டென்று முத்தில் விட்டும் கழுவலாம். ஆனால், இந்த நீரில் நீண்ட நேரம் முத்து இருந்தால், முத்தின் அழகு கெட்டுவிடும். வருஷத்துக்கு ஒரு முறை உங்கள் முத்துக்களைப் புதிய பட்டுச் சரட்டில் கோப்பது நலம். அப்படிக் கோப்பதற்கு முன், முத்துக்களைச் சுத்த ஜலத்தில் பன்னிரண்டு மணி நேரம் ஊறப்போட வேண்டும். பின்பு, ரத்தின வியாபாரியிடம் அவைகளைக் கொடுங்கள். அவர் இதற்கென்றே பிரத்தியேகமாய்த் தயாரித்த ஒரு திரவத்தில் முத்துக்களைப் போட்டுச் சுத்தமாக அலம்பிப் 'பாலிஷ்' செய்து கொடுப்பார். இந்த வேலையை ஒருபோதும் நீங்களே செய்ய வேண்டாம். பாலிஷ் செய்து முடித்த முத்தைச் சீனப் பட்டுச் சரடு ஒன்றில் முன் போலக் கோத்துவிடுங்கள்.

சரட்டை மாலையாக முடிந்தாலும் சரி, மேல் நாட்டு முறையில் கொக்கி போட்டு மாட்டினாலும் சரி, சரட்டின் நுனியில் விழக்கூடிய கரடு முரடான முடிச்சுகளோ, பிசிரோ தெரியாதபடி, அந்த நுனியை வெள்ளி அல்லது தங்கக் கம்பியால் சுற்றி மூடிவிட்டால் அழகாயிருக்கும். இப்படியெல்லாம் சிறிது சிரமப்பட்டு முத்தை நீங்கள் ஜாக்கிரதையாக வைத்துக்கொண்டால், எத்தனை வருஷமானாலும் புதிது போல் அது மிக அழகாக இருக்கும்; அதன் ஜொலிப்பும் கெடாது.

பொற்கொல்லனும் அறிவாளியும்

பொற்கொல்லன் பொன்னில் உள்ள களிம்பைப் போக்குவது போல அறிவாளி கணந்தோறும் சிறிது சிறிதாகத் தம்முடைய மாசுகளைப் போக்கிக்கொள்கிறார்.

—புத்தர்.

நகர மக்கள் பெருகி வருகிறார்கள்;
உழுதுண்டு வாழ்வோர் பாதிப் பேர்.

இந்திய ஜனத் தொகை

★

1951-இல் எடுத்த கணக்குப் படி ஜம்மு-காஷ்மீர்ப் பிரதேசம் நீங்கலாக இந்தியாவின் ஜனத்தொகை 35 கோடியே 68 லட்சத்து 29 ஆயிரத்து 485 என்று தெரிகிறது. ஜம்மு-காஷ்மீரின் ஜனத்தொகை சுமார் 44 லட்சத்து 10 ஆயிரத்துக்கு இருக்கும். மொத்தம் கணக்கெடுத்ததில் 1941 - இல் இருந்ததைவிட 4 கோடியே 20 லட்சத்து 60 ஆயிரமாக அதிகரித்திருப்பது தெரிகிறது. அதாவது, 10 ஆண்டுகளுக்கு 12.5 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது; ஆண்டு ஒன்றுக்குச் சராசரி 1.2 சதவிகிதம் ஆகிறது. ஒரு சதுர மைலுக்குச் சுமார் 281 பேர் வசிக்கிறார்கள். ஆனால் திருவாங்கூர்-கொச்சிப் பிரதேசத்தில் ஒரு சதுர மைலுக்குள் சுமார் 900 பேரும் மேற்கு வங்காளத்தில் அதே பரப்பில் 829 பேரும் இருப்பதாகத் தெரிகிறது.

நகரங்களில்தான் வரவர ஜனத்தொகை அதிகமாகப் பெருகி வருகிறது. 1941-இல் மொத்தத்தில் 4 கோடியே 40 லட்சம் (14 சதவிகிதம்) பேர் நகர வாசிகள் என்று கணக்கெடுத்திருந்தார்கள். 1951-கணக்குப்படி 6 கோடியே 20 லட்சம் (17 சதவிகிதம்) இது பெருகியிருக்கிறது. பெரும்பாலும் ஒரு லட்சமும் அதற்கு மேலும் ஜனத்தொகை உள்ள இடங்களில்தான் இப்படிப் பெருகியிருக்கிறது. இந்த மாதிரி நகரங்களின் எண்ணிக்கை இந்தப் பத்து ஆண்டுகளில் 48-இலிருந்து 75 ஆகப் பெருகிவிட்டது. இவற்றின் ஜனத்தொகை 1 கோடியே 46 லட்சத்திலிருந்து 2 கோடியே 40 லட்சமாகப் பெருகியுள்ளது. ஆஜ்மீர், டெல்லி இவை நகரமே ராஜ்யமாக அமைந்தவை. அவைகளின் ஜனத்தொகை அதிகமே. அடுத்தபடியாக நகரங்கள் மிகுதியாக உள்ளவை சௌராஷ்டிரம் (நகர ஜனத்தொகை 33.7 சதவிகிதம்), பம்பாய் (நகர ஜனத்தொகை 31.1 சதவிகிதம்), மேற்கு வங்காளம் (நகர ஜனத்தொகை 24.8 சதவிகிதம்), மைசூர் (நகர ஜனத்தொகை 24.0 சதவிகிதம்) இந்த ராஜ்யங்களே. மிகவும் குறைவான நகரங்களும் நகரவாசிகளும் உள்ளவை ஒரிஸ்ஸாவும் (நகர ஜனத் தொகை 4.1 சதவிகிதம்), அஸ்ஸாமும் (நகர ஜனத் தொகை 4.6 சதவிகிதம்), பிஹாருமே (நகர ஜனத் தொகை 6.7 சதவிகிதம்).

பொதுவாகத் தொழில் வகைப்படி கணக்கிட்டால் இந்தியாவில் 70 சதவிகிதம் பேர் விவசாயத்திலும் மீதிப் பேர் வியாபாரம், பிற தொழில் துறைகள், சர்க்கார் உத்தி

காப்பிரைட்; மாடர்ன் ரெவ்யூ (ஆங்கிலம்; செப்டம்பர் '52), கல்கத்தா.

யோகம் இவற்றிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். மொத்த ஜனத்தொகையில் சுமார் 24 கோடியே 91 லட்சத்து 20 ஆயிரம் பேர் விவசாயிகள். இவர்களில் 67.2 சதவிகிதம் பேருக்குச் சொந்த நிலம் உண்டு. 12.7 சதவிகிதம் பேர் பொதுவாக நிலம் இல்லாது வாரத்துக்குப் பயிரிடும் விவசாயிகள். 18.0 சதவிகிதம் பேர் பண்ணையில் வேலை செய்வோர். ஆகவே, விவசாயிகளில் மூன்றில் ஒரு பங்கு பேர் நிலமில்லாதவர்கள் என்று தெரிகிறது. அதாவது, 4 கோடியே 48 லட்சத்து 10 ஆயிரம் பேர் அன்றாடம் கூலிக்கு உழைக்கும் பண்ணையாட்கள்; சுமார் 3 கோடியே 16 லட்சத்து 40 ஆயிரம் பேர் வாரத்துக்குப் பயிரிடுவோர். தாமே விவசாயத்தில் ஈடுபடாமல் நிலத்தின் சொந்தக்காரராயிருந்து குத்தகைப் பணத்தில் ஜீவிப்பவர்களும், இவர்கள் குடும்பத்தாரும் சேர்ந்து மொத்தம் 53 லட்சத்து 20 ஆயிரம் பேர் இருப்பார்கள். அதாவது மொத்த விவசாயிகளில் 2.1 சதவிகிதம் பேர் இந்த வகையைச் சேர்ந்தவர்கள்.

விவசாயமல்லாத பிற தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களில் 3 கோடியே 76 லட்சத்து 69 ஆயிரம் பேர் உற்பத்தித் துறையிலும், 2 கோடியே 13 லட்சத்து 10 ஆயிரம் பேர் வியாபாரத்திலும், 56 லட்சத்து 22 ஆயிரம் பேர் போக்குவரத்து முதலியவற்றிலும், 4 கோடியே 29 லட்சத்து 80 ஆயிரம் பேர் மற்றத் துறைகளிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆக விவசாயிகளல்லாதவர்கள் மொத்தம் 10 கோடியே 75 லட்சத்து 70 ஆயிரம் பேர்.

சித்திரக் காட்சியில்



ஓவியர்: என்ன என் படத்தைத் திருப்பி மாட்டியிருக்கிறீர்களே?

—'மஹேஷ்'

கார்ட்டூன் கதம்பம்

ஸ்டாலின்: விஷின்ஸ்கி அவர்களே, பூச் செடிக் காட்சிக்கு நாம் எதை அனுப்புவது?

—'மான்செஸ்டர் டெய்லி டெஸ்பாட்ச்'



"உணவு நிலை வெகு திருப்திகரமாக இருக்கிறது" என்று அடித்துப் பேசுகிறார் மந்திரி கித்வாய்.

—'மைஸிண்டியா'



"தமிழ் நாட்டுக்குச் சென்னை ஒரு தூண் போன்றது" என்ருர் ராஜாஜி. தூணிலிருந்து என்ன புறப்படும்?

—'சங்கர்ஸ் வீக்லி'



"லஞ்ச ஊழலை ஒழிப்பதற்குச் சர்க்காரிடம் சட்டத்துக்குப் பஞ்சமில்லை; சாமர்த்தியம்தான் பஞ்சமாயிருக்கிறது" என்கிருர் கைலாஸ்நாத் காட்ஜு.

—'ஃப்ரீ இண்டியா'

யுத்தம் ஒன்றில்தானு, சமாதான
காலத்திலும் வேலே செய்யக்கூடாதா?

ராணுவம் பயன்பட வழி

எஸ். என். அகர்வால்

வயது வந்தோரின் வோட்டுக்களைப் பெற்றுப் புதிய பார்லிமெண்டு ஏற்பட்டுவிட்டது. 'பெரிய சமூகப் பொருளாதார மாறுதல்கள் நிகழ்த்துவோம்' என்று தேர்தலின்போது அபேட்சகர்கள் வாக்குறுதி அளித்தார்கள். இதை நம்பிப் பொதுமக்களும் வோட்டளித்தார்கள். இனியும் எத்தனை நாள்தான் அவர்கள் பொறுத்திருப்பார்கள்? விரைவிலேயே ஏதாவது உருப்படியாகச் செய்தால்தான் பொது மக்களுக்குத் திருப்தி ஏற்படும்.

இப்போது முக்கியமாகக் கவனிக்க வேண்டிய பிரச்னை நாட்டின் பாதுகாப்புத்தான். ஒவ்வோர் ஆண்டிலும் அதற்கே ஏராளமாகச் செலவாகிறது. சென்ற ஆண்டு 181.24 கோடி ரூபாயும், இந்த ஆண்டு மொத்த வருமானமாகிய 404.98 கோடியில்197.85 கோடியும் இதற்காகச் சர்க்கார் செலவழித்திருக்கிறார்கள். உலகிலுள்ள பல நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது அப்படி அதிகம் என்று சொல்வதற்கில்லை. மொத்தத்தில் கவனித்தால், 25 முதல் 29 சதவிகிதம் வரையில் பாதுகாப்புக்காகச் செலவாகிறது. நம் அண்டை நாடான பாகிஸ்தான் ஆண்டு ஒன்றுக்கு மொத்த வருமானத்தில் 55 சதவிகிதத்துக்குமேல் ராணுவத்துக்காகச் செலவழிக்கிறது என்றால் பாருங்கள். பிரிட்டன் 1951-இல் இதற்காகச் செலவிட்டது மொத்த வருமானத்தில் 26.5 சதவிகிதம். சோவியத் ருஷியா அதே ஆண்டில் 21 சதவிகிதம் செலவழித்திருக்கிறது. ஆனால் அமெரிக்காவோ 47 சதவிகிதம் செலவழித்திருக்கிறது; இந்த ஆண்டு கணக்கெடுத்தால் அமெரிக்க ராணுவச் செலவு இன்னும் அதிகமாகவே இருக்கும். ஆனல் நம் பொருளாதார, சமூக நிலையைக் கவனித்தால் பாதுகாப்புக்காக இவ்வளவு தொகை செலவிடுகிறோமே என்றுதான் வருந்த வேண்டியிருக்கிறது.

இப்போது வெளி நாட்டிலும் உள் நாட்டிலும் உள்ள நிலையைக் கவனித்தால், சர்வோதய தத்துவத்தில் திட நம்பிக்கை உள்ளவர்கள்கூட, ராணுவச் செலவை ஒரேயடியாகக் குறைக்கும்படி சொல்ல மாட்டார்கள். இருந்தாலும் இதுவே சாசுவதம் என்று எண்ணிவிடக் கூடாது. இப்போது நடக்கும் செலவில் 15 கோடியோ 20 கோடியோ குறைத்தால் ஒன்றும் முழுகிவிடாது. சமீபத்தில் நிதி மந்திரி, இதைப்பற்றி ஆராய்ந்து வருவதாகவும் சிக்கனமாக நடந்து கொஞ்சம் மிச்சப்படுத்த முடியும் என்றும் தெரிவித்

காப்பிரைட்: இந்தியன் ரேவ்யூ (ஆங்கிலம்; ஆகஸ்ட் '52), சென்னை.

தார். இப்படி 15 அல்லது 20 கோடி ரூபாய் மிச்சப்படுத்தினாலும் போதும்; கல்வியபிவிருத்தி, வீட்டு வசதி, சுகாதாரம் முதலியவற்றுக்கு அந்தத் தொகையை உபயோகிக்கலாம்; உணவு அபிவிருத்திக்கு ஊக்கந்தர விவசாயிகளுக்கு அளித்து வந்து சமீபத்தில் நிறுத்திவிட்ட உதவி நிதியில் ஒரு பகுதியையாவது அந்தத் தொகையிலிருந்து மறுபடியும் கொடுக்கலாம்.

நிரந்தர ராணுவப் படையில் ஒரு பகுதியைக் குறைக்கலாம்; அங்கங்கே பிரதேச ராணுவப்படை அமைத்துப் பயிற்சி அளித்து, சந்தர்ப்பம் நேரும்போது அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இப்போதே இந்த மாதிரி ஒரு படை பயிற்சி பெற்றுத்தான் வருகிறது. இதை இன்னும் அபிவிருத்தி செய்து பலப்படுத்தலாம். ஸ்விட்ஜர்லாந்தில் நிரந்தரப் படை குறைவுதான்; என்றாலும், 20 வயதுக்கு மேற்பட்டுத் திடகாத்திரமுள்ளவர்கள் எல்லாரும் ராணுவப் பயிற்சி பெற்றுச் சமயத்தில் உதவும் 'தேசியப்படை'யைச் சேர்ந்தவர்களாக விளங்குகிறார்கள். அங்கே ஒவ்வொருவரும் முதலில் மூன்று மாதம் ராணுவப் பயிற்சி பெற்ற பிறகு, ஒவ்வோர் ஆண்டும் மூன்று வாரம் ராணுவப் பயிற்சி முகாமில் இருக்கவேண்டும் என்று உத்தரவு. இப்படி 48 வயதுவரை இருந்துவரவேண்டும். சென்ற மகா யுத்த காலத்தில் அங்கே 60 வயதானவர்கள்கூட இப்படிப் பயிற்சி பெற்றார்கள். ராணுவப் பயிற்சி முகாமில் இருந்தபோதும் வழக்கம் போல் உத்தியோகம் பார்க்கும் ஆபீஸிலிருந்து சம்பளம் பெற்றுத்தான் வருகிறார்கள். இதனால் அங்கே ராணுவச் செலவு எவ்வளவோ குறைந்துவிட்டது. இந்தியாவில் கட்டாய ராணுவப் பயிற்சி அவசியமாயிராவிட்டாலும் கட்டுப்படும் ஒழுங்கும் ஏற்பட வாலிபர்களுக்கு உடற்பயிற்சி அளித்தாக வேண்டும். கைக்குக் காவலாக 'ஸ்விஸ் தேசியப் படை'யைப் போல் நம் நாட்டிலும் ஒரு படை இருக்க வேண்டியது அவசியம்.

யுத்தமில்லாத காலத்தில் நிரந்தர ராணுவப்படை நாட்டுக்குப் பயன்படும்படி செய்வதுதான் இப்போது அவசியம். ஆக்க வேலைகளுக்கு இந்திய ராணுவத்தை உபயோகித்துக்கொள்ள வேண்டும் என்று பார்லிமெண்டில் நான் குறிப்பிட்டேன். ஏற்கனவே சீனாவில் இப்படித்தான் செய்துவருகிறார்கள் என்று இப்போதுதான் எனக்குத் தெரிந்தது. 'ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் விவசாயத்திலும் பிற தொழில்களிலும் ஈடுபடவேண்டும்' என்று 1949 டிஸம்பரிலேயே மா-ஸே-துங் உத்தரவிட்டிருந்தார். அதன்படி 50 லட்சம் படை வீரர்களுக்குமேல் விவசாயம், கூட்டுறவுத் தொழில்முயற்சி இவற்றில் கலந்துகொண்டார்கள்; கிராமங்களில் கிணறும் வாய்க்காலும் வெட்டுவது, உழுவது, மடை மாறுவது முதலிய வேலைகளில் மற்றவர்களோடு சேர்ந்து உழைத்தார்கள்.

சமீபத்தில் ராயலசீமையில் பஞ்சம் ஏற்பட்டபோது நம் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு அங்கே ராணுவத்தை அனுப்பி உதவினார். அங்கே நம் ராணுவப்படை வீரர்கள் பல இடங்களில் கிணறுகளை ஆழமாகத் தோண்டிப் பலவிதத்தில் மக்களுக்கு ஒத்தாசையாக இருந்தார்கள். அஸ்ஸாமில் பூகம்

பம் ஏற்பட்டபோதும் இப்படி நம் ராணுவம் பயன்பட்டிருக்கிறது. ஆயினும் சமாதான காலங்களில் நிரந்தரமாக இப்படிப் பயன்படும் படி முறையாகத் திட்டமிட்டு இதை நடத்த வேண்டியது அவசியமாகும். ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற நம் ராணுவம் மிகவும் பயன்படும். கரம்புகளைப் பண்படுத்தல், மண்ணரிப்பு ஏற்படாமல் தடுத்தல், பாலம் கட்டுதல், குளம் கால்வாய் வெட்டுதல், காட்டோரம் பயிர்களை விலங்குகள் அழிக்காதபடி பாதுகாத்தல் - இப்படிப் பல வேலைகளுக்கு நம் ராணுவத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

சமீபத்தில் பார்லிமெண்டில் நம் பாதுகாப்பு மந்திரி, "அதிக உணவு உற்பத்திக்காக ராணுவத்தின் உதவியால் 1951 - இல் 21,966 ஏக்கர் நிலம் பயிரிட்டோம். 8,922 டன் உணவுத்தானியம் கிடைத்தது" என்றார். இது நல்லது தான். ஆனால் இதோடு நின்று விடக் கூடாது. சமாதான காலத்தில் ராணுவம் தொடர்ந்து இப்படிப் பயன்படும்படி ஒழுங்காகத் திட்டம் வகுக்கவேண்டும். ராணுவத்தார் ஆக்க வேலையில் ஈடுபடும் போது முதலில் கொஞ்சம் பணம் செலவழிக்கத்தான் வேண்டியிருக்கும். இருந்தாலும் பின்னால் நிச்சயமாக நல்ல பலன் கிட்டும். அப்போதுதான் ராணுவம் என்பது சமாதான காலத்தில் நாட்டுக்குப் பாரமாகத் தோன்றாது.

இதுவரையில் போர்க்களத்தில் வீரம் காட்டிப் பெயர் எடுத்திருக்கிறது நம் ராணுவம். அதே மாதிரி பஞ்ச நிவாரணம், உணவுப் பற்றாக்குறையைப் போக்குதல், நோய்களைத் தடுத்தல், கல்வியைப் பரப்புதல் இந்த மாதிரி ஆக்கத் துறைகளிலும் அது பயன் படவேண்டும்; அப்போதுதான் நாட்டுக்குத் தேவையான உணவும் பிற பொருள்களும் கிட்டி, சமூக வாழ்விலும் பொருளாதாரத் துறையிலும் பிறர் உதவியை நாடியிராமல் நீடித்துச் சுதந்தர புருஷர்களாக நாம் வாழ முடியும்.

ஆகவே, ராணுவப் பயிற்சியோடு கூடவே ஆக்க வேலைகளிலும் நம் படைகளுக்குப் பயிற்சி தர வேண்டியது அவசியமாகும். டேராடூன் ராணுவப் பயிற்சிக் கூடத்துக்குப் போயிருந்தேன். அங்கே மொத்தத்தில் நல்ல முறையில்தான் பயிற்சி அளிக்கிறார்கள்; என்றாலும் விவசாய முன்னேற்றம், தொழில் அபிவிருத்தி இவற்றுக்காக இன்னும் அதிக நேரம் செலவிடும்படி பயிற்சித் திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும். எல்லாருமே எல்லா ஆக்கவேலையிலும் பயிற்சி பெற வேண்டுமென்று அர்த்தமில்லை. சிலபேர் விவசாயம் முதலிய துறைகளிலும் இன்னும் சிலர் சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் முதலியவற்றிலும், மற்றவர்கள் பொதுச் சுகாதாரம், முதியோர் கல்வி முதலிய துறைகளிலும் பயிற்சி பெற வேண்டும். முதலில் இது சற்றுச் சிரமமாகத்தான் இருக்கும். இருந்தாலும் என்ன செய்வது? ராணுவக் கட்டுப்பாட்டினால் முடியாவிட்டால் இந்த மகத்தான காரியத்தை வேறு எதனாலும் சாதிக்க முடியாது. ஆகவே, நாட்டின் நலனுக்காக இதில் ராணுவம் ஈடுபட்டுத்தான் ஆக வேண்டும். மனமிருந்தால் தானாக வழி பிறக்கும்.

மனிதர்கள் மட்டுமா? மசோதாக்கள்கூட வரிசைக்கிரமமாய்க் காத்திருக்கின்றன!

பார்லிமெண்டில் 'க்யூ'

★



தங்களுக்கு உரிய இடத்தையோ பண்டங்களையோ அடைய விரும்பும் மனிதர்கள்தான் ஒருவர் பின் ஒருவராக 'க்யூ' வரிசையில் நிற்க வேண்டி இருக்கிறதென்று நினைக்காதீர்கள். அரிசி வாங்க 'க்யூ' வரிசை, ஆடை வாங்க 'க்யூ' வரிசை, பஸ்ஸில் உட்கார 'க்யூ' வரிசை இருப்பதுபோல், தம்மைச் சட்டமாக்கிக்கொள்ள, பார்லிமெண்டின் வாசலில் எத்தனை 'மசோதா'க்கள் காத்துக்கொண்டிருக்கின்றன தெரியுமா? இப்போது இந்த 'க்யூ'வில் நிற்கும் மசோதாக்கள் எவை என்று கவனிப்போம்.



சில குற்றங்களுக்கு ஆயுள்வரை தீவாந்தர தண்டனை விதிப்பதற்குப் பதிலாக 14 வருஷம் சிறைத் தண்டனை விதிக்கும்படி, இந்தியன் பீனல் கோடு என்ற சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று பார்லிமெண்ட் அங்கத்தினர் ஜனாப் முகம்மது அகமது கஸ்மி என்பவர் ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார்.

இந்துக்கள், பௌத்தர்கள், சீக்கியர்கள், ஜைனர்கள் இவர்களுக்குள் நடக்கும் திருமணங்களில், 'வரதட்சிணை' கொடுப்பதைக் குற்றமாகச் செய்து அதை வாங்குபவருக்கு 6 மாதமும் கொடுப்பவருக்கு 1 மாதமும் சிறைத்தண்டனை விதிக்கவேண்டும் என்று ஸ்ரீ ஜயஸ்ரீ ராய்ஜீ என்பவர் ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார். இது சட்டமானால் திருமணங்கள் நடந்தவுடன் தென் இந்தியச் சம்பந்திகள் இருவரும் சிறையில்தான் சந்தித்துக் கொள்ளும்படி இருக்கும்.

இப்போது சென்னையில் இந்துக்களுக்குள் பலதார மணம் நடப்பதைமட்டும்

மூலம்: வக்கீல் (தமிழ்: செப்டம்பர் '52), டபீர் மேலத் தெரு, கும்பகோணம்.

தடுக்கும் சட்டம் இருக்கிறது. இதேபோல அகில இந்தியாவிலுமே எவரும் - மனைவியோ, கணவனோ - உயிரோடிருக்கும்போது வேறு மணம் செய்துகொள்வதைக் குற்றமாக்குகிறது ஸ்ரீ தாகூர்தாஸ் பார்க்கவாவின் மசோதா.

முஸ்லிம் 'வக்ப்' (தர்ம ஸ்தாபனங்)களை ஒழுங்குபடுத்த, ஜனாப் முகம்மது அகமது கஸ்மி ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார்.

ஸ்ரீ ஜுன்ஜுன்வாலா ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார். உணவுப்பண்டங்களில் (ஊறுகாய் உள்பட), முக்கியமாக ஹோட்டல்களில் நல்ல தின்பண்டங்களுடன் கெட்ட பண்டங்களைக் கலந்து விற்பனை செய்கிறவர்களுக்கு இதன் பிரகாரம் இரண்டு வருஷக் கடுங்காவலும், குறைந்தது ரூ. 5,000 வரை அபராதமும் விதிக்கலாம். இது சட்டமானால், அநேகமாக எல்லா ஹோட்டல் முதலாளிகளும், உணவுப் பண்டங்களை அடுப்படியில் தயாரிப்பவர்களும், ஹோட்டல் 'சர்வர்'களுங்கூடச் சிறைக்குப் போய்விடுவார்கள்.

பசு வதையைத் தடுக்க ஸ்ரீ கோவிந்ததாஸ் ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார். இது சட்டமானால், பசுவை மட்டும் அல்ல, எருமை, காளைமாடு எதையும் உணவுக்காகவோ வேறு காரியங்களுக்காகவோ எவர் கொலை செய்தாலும் 6 மாதம் சிறையில் இருக்க நேரிடும்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஸ்ரீ பி. எஸ். தேஷ்முக் ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார்.

தாய் தகப்பனை இழந்த அநாதைக் குழந்தைகளைக் காப்பாற்றும் பொறுப்பைச் சர்க்காரே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது ஸ்ரீ திரிவேதியின் மசோதா.

ஸ்ரீ மாதவ ரெட்டி கொண்டுவந்திருக்கும் மசோதா ஒன்று சட்டமானால், பழைய சுதேச மன்னர்களும், முக்கியமாக ஹைதராபாது நைஜாமும் 'பாப்ப'ராகி விடுவார்கள்.

கைத்தறி ஜவுளி உற்பத்தி, விநியோகம், ஏற்றுமதி இவைகளை ஒழுங்குபடுத்த ஸ்ரீ எஸ். வி.

ராமசாமி ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார்.

ஸ்ரீ எஸ். வி. ராமசாமியின் மற்றொரு மசோதா சட்டமானல், இனி இந்தியாவில் குஷ்டரோகிகளுக்கோ, மேகநீர் வியாதி உள்ளவர்களுக்கோ, பைத்தியங்களுக்கோ, பிறவி மக்குகளுக்கோ குழந்தை பிறக்காது. இவர்களை டாக்டர்கள் பரிசோதனை செய்து இவர்களுக்குக் குழந்தை பிறக்காதபடி சிகிச்சை செய்துவிடுவார்கள்.

சில குற்றங்களைப்பற்றி விசாரணை நடக்கும்போது ஜூரிமார்களையோ அசெசர்களையோ வைத்துக்கொண்டு விசாரணை நடத்த வேண்டுமென்ற முறையை அடியோடு எடுத்துவிட வேண்டுமென்பது ஸ்ரீ எஸ். வி. ராமசாமியின் மற்றொரு மசோதா.

விபசாரம் செய்யும் மனைவிக்கும் தண்டனை கொடுக்கவேண்டுமென்று ஸ்ரீ புல்சிங்ஜீயின் மசோதா வற்புறுத்துகிறது.

18 வயதுக்குட்பட்ட எவரும் ரெயில்களிலோ, பொது இடங்களிலோ, வீட்டுக்கு வீடு சென்றோ, பாட்டுப் பாடியோ, வேறு விதத்திலோ பிச்சை எடுத்தால், அந்தக் குழந்தைகளுக்கும் சரி அவர்களுடைய பெற்றோர்கள் அல்லது போஷகர்களுக்கும் சரி, மூன்று மாதச் சிறைத் தண்டனை கொடுக்க வேண்டுமென்பது ஸ்ரீ திரிவேதியின் மற்றொரு மசோதா.

மரண தண்டனையை எடுத்துவிட வேண்டுமென்று ஸ்ரீ ரோகிணி குமார் சௌதரி ஒரு மசோதா கொண்டுவந்திருக்கிறார்.

இவையெல்லாம் சர்க்கார் கொண்டுவந்த மசோதாக்கள் அல்ல; பார்லிமெண்டின் பிற அங்கத்தினர்கள் கொண்டுவந்திருக்கும் மசோதாக்கள். இவையெல்லாம் சட்டமாவது சந்தேகம். சர்க்கார் கொண்டு வரும் மசோதாக்கள் தான் அநேகமாகப் பெரும்பான்மை அங்கத்தினர்களுடைய ஆதரவு பெற்றுச் சட்டமாகும். ஏனென்றால், ஜனநாயக முறையில் பார்லிமெண்டில் இருக்கும் பெரும்பான்மைக் கட்சிதான் 'சர்க்காரை' அமைத்துக்கொள்ளுகிறது.



பணம் போகிற விதம்

★



(1) உணவு (2) குடியிருப்பு (3) உடை (4) மற்றவை - இந்தச் செலவினங்களைக் குறிப்பிடுபவை இந்த அடையாளங்கள்.

	(1)	(2)	(3)	(4)
ஆஸ்திரியா	50	11	12	27
பெல்ஜியம்	48	15	14	23
பிரெஜில்	49	26	9	16
கானடா	33	26	14	27
டென்மார்க்	33	20	16	31
பின்லாந்து	45	17	20	18
பிரான்ஸ் (பாரிஸ்)	58	8	17	17
ஜெர்மன் ஃபெடரல் குடியரசு	50	18	14	18
இந்தியா (பம்பாய்)	55	18	12	15
நெதர்லாந்து (ஆம்ஸ்டர்டாம்)	41	19	12	28
நார்வே	39	18	17	26
பாகிஸ்தான் (லாகூர்)	61	15	11	13
ஸ்வீடன்	35	22	17	26
ஸ்விட்ஜர்லாந்து	37	21	13	29
ஐக்கிய அமெரிக்கா	36	26	16	22
வெனிசுயெலா	48	20	9	23

பல நாட்டு மக்கள் எந்த எந்த இனங்களில் எவ்வளவு விகிதம் பணம் செலவழிக்கிருர்கள் என்பதைக் காட்டும் மேற்கண்ட புள்ளி விவரம் சர்வதேசத் தொழில் ஸ்தாபனம் வெளியிட்டது. இது ஐ. நா. சபையைச் சேர்ந்த ஒரு விசேஷ ஸ்தாபனம். குறிப்பிட்ட ஆண்டுகளில் அங்கங்கே பல குடும்பங்களைக் கண்டு விசாரித்தறிந்த தகவல்களே இதற்கு ஆதாரம்.

கிராமபோன் ஒலிப்பதிவுக்கும்
இந்த ஒலிப்பதிவுக்குந்தான்
எவ்வளவு வித்தியாசம்!

ரேடியோ ஒலிப்பதிவு

ஆர். எம். மராட்டே

சகஜமாக ஒரு நிகழ்ச்சி முடிந்ததும், "இது நம் ஸ்டூடியோவில் ஏற்கனவே ஒலிப்பதிவு செய்தது" என்று ரேடியோவில் சொல்லிக் கேட்டிருக்கிறோம். 'இந்தியன் லிஸ்னர்' போன்ற ரேடியோ நிலையப் பத்திரிகைகளில் சில நிகழ்ச்சிகளுக்கு அருகில் ‡ என்ற குறி போட்டிருக்கும். இது ரேடியோ நிலையத்தில் ஒலிப்பதிவு செய்யும் ரிகார்டுகளைக் குறிக்கிறது. ரேடியோ நிகழ்ச்சிகளில் இந்த 'மின்சார ஒலிப்பதிவு' (எலெக்ட்ரிக்கல் ரிக்கார்டிங்) என்பது மிகவும் முக்கியமானதாகும்.

சாதாரணமாகக் கிராமபோன் கடைகளில் விற்கும் இசைத் தட்டுக்கும் இதற்கும் வித்தியாசம் தெரிவதற்காகவே இப்படி இதற்குத் தனிப்பெயர் இட்டிருக்கிறார்கள். கிராமபோன் ரெக்கார்டு எடுக்க முதலில் மெழுகுத் தட்டில் ஒலிப்பதிவு செய்துகொள்வார்கள். பிறகு அதிலிருந்து உலோகத்தில் அச்சு எடுத்துக்கொள்வார்கள். ஷெல்-லாக் (அரக்கு), இன்னும் சில சரக்குகள் இவை சேர்ந்த தட்டுக்களில், அந்த உலோக அச்சைக் கொண்டு அநேகம் பிரதிகள் எடுப்பார்கள். மின்சார ஒலிப்பதிவையோ, ஸெல்லோஸ் கலந்த திரவம் லேசாகப் பூசியிருக்கும் மெல்லிய கண்ணாடித் தட்டிலோ உலோகத் தட்டிலோ செய்கிறார்கள். இந்தத் தட்டுக்களின் விட்டம் 12 அல்லது 16 அங்குலம் இருக்கும். இந்தத் தட்டுக்களில் நீலக் கல் ஊசியால் மின்சார அசைவுகளைப் பதிவு செய்வார்கள். இப்படிச் செய்து முடித்ததுமே - ஏன், பதிவு செய்யும் போதேகூட - அதைச் சில சமயம் ஒலி பரப்ப முடியும். ஒலிப்பதிவு செய்யும் யந்திரத்தைப் பொறுத்தது இது. இன்னொரு வித்தியாசம்: கிராமபோன் தட்டு ஒரு நிமிஷத்துக்கு 78 தரம் சுற்றும். மின்சார ஒலிப்பதிவுத் தட்டு 33 தரம் சுற்றினால் போதும். ஒலிப்பதிவு செய்தவுடனே அதை ஒலிபரப்பி விடலாம். ஒரு கிராமபோன் தட்டில் பதிவு செய்வதை விட இரண்டு மடங்கு நிகழ்ச்சியை அதே பரப்புக்குள் மின்சார ஒலிப்பதிவுத் தட்டில் பதித்துவிடலாம். அதாவது, மின்சார ஒலிப்பதிவு வேகத்தில் சுற்றினால் கிராமபோன் இசைத் தட்டு மூன்று நிமிஷத்துக்குப் பதில் ஆறு நிமிஷ நேரம் ஒலித்துக்கொண்டேயிருக்கும். ஆகவே, 16 அங்குல விட்டம் கொண்ட அ. இ. ரேடியோ இசைத்தட்டில் 18 நிமிஷ நேரம் நடக்கும் ஒரு நிகழ்ச்சியைத் தொடர்ந்து பதிவு செய்து அதேமாதிரி இடையீடு இல்லாமல்

மூலம்: தி இண்டியன் லிஸனர் (ஆங்கிலம்), புது டில்லி.

ஒலிபரப்ப முடிகிறது. அ.இ.ரேடியோவைச் சேர்ந்த எல்லா நிலையங்களிலும் இப்படி இரண்டு இரண்டு பதிவு யந்திரங்கள் இருக்கின்றன. இதனால்தான் நாலைந்தே தட்டுக்களில் அதிக நேர நிகழ்ச்சிகளைக் கூட இப்படி எளிதில் பதிவு செய்து ஒலி பரப்பிவிட முடிகிறது.

சரித்திரத்தில் இடம் பெறக் கூடிய விசேஷச் சம்பவங்களை என்றென்றும் கேட்கும்படி நம் ரேடியோ நிலையத்தில் ஒலிப்பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். 1947 ஆகஸ்டு 14-15-ஆம் தேதி நடுநிசியில் பிரிட்டிஷார் நம் கையில் அதிகாரத்தை ஒப்பித்தபோது நடந்த நிகழ்ச்சிகள், பிரார்த்தனைக் கூட்டங்களில் காந்தியடிகள் போதித்த பல விஷயங்கள், 20-1-'48-இல் பிர்லா மாளிகைக் கருகில் பிரார்த்தனைக் கூட்டம் நடக்கும்போது வெடித்த வெடிச் சத்தம், காந்தியடிகளின் அந்திமக் கிரியைநடந்தபோதுதொடர்ந்து $5\frac{3}{4}$ மணி நேரம் அதைப்பற்றி நிகழ்ந்த வர்ணனை - இவ்வளவையும் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். இன்னும் எத்தனை நூற்றாண்டு சென்றாலும் இவற்றைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம் என்றால் பாருங்கள்! சென்ற நூற்றாண்டில் அமெரிக்காவில் நீக்ரோ விடுதலைக்காகப் பாடுபட்ட ஆபிரகாம் லிங்கன் கெட்டிஸ்பர்க் என்ற இடத்தில் செய்த அரிய பிரசங்கத்தை நாம் பாராட்டுகிறோம். அந்தக் காலத்திலே அதை இப்படி ஒலிப்பதிவு செய்து வைத்திருந்தால் இப்போது எவ்வளவு உபயோகமாக இருந்திருக்கும்!

மகத்தான சம்பவங்களோடு அவைகளுக்குக் காரணபுருஷர்களாக விளங்கியவர்களின் வாக்கையும் கேட்கும்போது அவர்களைப் படத்தில் பார்ப்பதைவிட அதிக உணர்ச்சி நமக்கு ஏற்படும். கவியரசி சரோஜினி தேவி காலமான போது அ.இ.ரேடியோவில் 'மெல்லியலாள்' என்று ஒரு நிகழ்ச்சியை ஒலிபரப்பினார்கள். கவியரசியின் பல முக்கியமான சொற்பொழிவுகளை ஏற்கனவே ஒலிப்பதிவு செய்து வைத்திருந்தார்கள். அவற்றிலிருந்துதான் சில பகுதிகளை இப்படித் தொகுத்து ஒலிபரப்பினார்கள். அதைக் கேட்கும்போது கவியரசியைப்பற்றிய உருக்கமான பல நினைவுகள் வந்தன.

பின்னால் எப்போதாவது ஒரு சமயம் பயன்படும் என்பதற்காக மட்டும் ஒலிப்பதிவு செய்வதில்லை. பெரும்பாலும் நிகழ்ச்சி நடந்தகையோடு ஒலிபரப்பவும் இப்படி ஏற்பாடு செய்கிறார்கள். ஜயபுரில் மகாராஜஸ்தான் யூனியனை ஆரம்பித்து வைத்தபோது அந்த விழாவைக் காண முடியாதவர்கள் எத்தனை பேர் இருந்திருப்பார்கள்? அவர்களெல்லாரும் இரண்டே மணி நேரத்தில் டில்லி ரேடியோ மூலம் அங்கே நடந்த அத்தனை நிகழ்ச்சிகளையும் கேட்க முடிந்தது!—எல்லாம் இந்த ஒலிப்பதிவினால்தான்.

ஸர் ஸி. வி. ராமன் டில்லியிலிருந்து ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றி உடனே பேச வேண்டியிருக்கிறது; ஆனால் அவர் அப்போது சென்னையில் இருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அ.இ.ரேடியோ நிலையத்தாருக்கு அதைப்பற்றிக் கவலையே இல்லை. சென்னையில் அவருடைய பேச்சை உடனே ஒலிப்பதிவு செய்து டில்லிக்குக் கடிதம் அனுப்புவது போல் விமானத்

தபாலில் அனுப்பிவிடுவார்கள். தாம் எழுதியதை ஆசிரியர் படிப்பதற்கும் மற்றவர்கள் படிப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு. ஆசிரியரே படிக்கும்போது அவர் அதைச் சொல்லும் பாணியே மனத்தில் பதியும்படி அமைந்திருக்கும். மற்றவர்கள் படித்துக் கேட்டால் சும்மா ஏதோ புத்தகம் படிக்கிற மாதிரிதான் இருக்கும்; அதில் உயிரே இராது.

இப்படியே அகில இந்திய சங்கீதத்தை ஒலி பரப்பும்போதும் முன்னதாகவே அங்கங்கே உள்ள அ. இ. ரேடியோ நிலையங்களில் தலைசிறந்த பாடகர்களின் கானமிர்தத்தை ஒலிப்பதிவு செய்துகொள்கிறார்கள். இதனால் பல மாகாணங்களில் வழங்கும் சங்கீத பத்ததிகளை நாம் கேட்டு அறிந்து அநுபவிக்க முடியும்.

பாகிஸ்தான் பிரிவினைக்கு முன் நாட்டில் குழப்பம் ஏற்பட்டபோது, அங்கங்கே ஊரடங்கு சட்டம் அமலில் இருந்ததால், ஏற்கனவே குறிப்பிட்டிருந்தபடி பல சங்கீத வித்துவான்கள் பாட முடியாமல் போய்விடுமோ என்று ரேடியோ நிலையத்தார் முன்னதாகவே அவர்கள் பாட்டை ஒலிப்பதிவு செய்து வைத்திருந்தார்கள்.

இவைகளையும் இந்தியத் தலைவர்களின் வாக்கையும் இப்படிப் பதிவு செய்து சமயம் நேரும்போது வெளிநாட்டாருக்கு ஒலிபரப்பி வருகிறார்கள், நம் ரேடியோ நிலையத்தார். அதேமாதிரி அந்த நாட்டுச் சங்கீதம், தலைவர்களின் வாக்கு இவற்றைச் சில சந்தர்ப்பங்களில் நாம் கேட்க வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள்.

சில நாட்களுக்குமுன் அ.இ.ரே. டில்லி நிலயத்திலிருந்து மிஸஸ் ரூஸ்வெல்ட்டை, நிலய நிருபர் ஒருவர் பேட்டி கண்ட விவரத்தை ஒலிபரப்பினார்கள். இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், மிஸஸ் ரூஸ்வெல்ட் பேசிய பகுதி மட்டும் ஏற்கனவே அமெரிக்காவில் ஒலிப்பதிவு செய்திருந்ததுதான்.

ஒருசமயம் திக்குவாய்ப் பேர்வழி ஒருவர் அ.இ. ரேடியோவில் தங்கு தடங்கல் இல்லாமல் பேசினார் என்றால் ஆச்சரியமாக இல்லையா? நடந்தது என்ன தெரியுமோ? அவர் பேசியவற்றை ஒழுங்காக வெட்டித் தொகுத்துப் பதிவு செய்து ஒலிபரப்பினார்கள், ரேடியோ நிலயத்தார். அவருக்கே அதைக் கேட்டபோது ஆச்சரியமாக இருந்ததாம்; மனுஷர் பூரித்துப் போய்விட்டார்!

அவருக்கு மட்டுமல்ல; எல்லாருக்குமே, தாங்கள் பேசி முடித்ததும் அதைத் திரும்பக் கேட்கும்போது வியப்பாகத்தான் இருக்கும். தங்களை யாரோ 'கோட்டா' செய்வதாகத் தோன்றும். தாங்கள் பேசின விஷயம் அப்படியே காதில் விழுந்தாலும் குரலை அடையாளம் கண்டுகொள்ள முடிவதில்லை. "மனிதன் பொதுவாகத் தன் குரலை உணர்கிறானே தவிரக் கேட்பதில்லை" என்று விஞ்ஞானிகள் இதற்குக் காரணம் காட்டுகிறார்கள். சரிதான் போங்கள்!

எலிப் பொறி

தீனியை வைத்து எலியைப் பிடிக்கலாம்; ஆனால், பொறியில் எலி புகுவதற்குப் போதிய இடமும் விட்டு வைக்க வேண்டும்.

—'ஸாக்கி'

சின்னஞ் சிறு வயதிலேயே புதிய பொருளாதாரம் பேசிய உத்தமர்.

விநோபா யார்?

ச. ஜகந்நாதன்

விநோபா பாவே மகாராஷ்டிரப் பிராம்மணர். அவருடைய பெற்றோர் ஒழுக்கமும் பக்தியும் நிறைந்தவர்கள். அவருடன் பிறந்த இரண்டு சகோதரர்களும் அவரைப்போலவே பிரம்மசாரிகளாகத் தேச சேவையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

விநோபா இளமையிலேயே சுறுசுறுப்பும், கொள்கையில் தீவிரமும் கொண்டிருந்தார். உயர்தரப் பள்ளி மாணவராக இருந்தபோது, ஆராய்ச்சி நூல்களை வெகு நேரம் படித்துப் பின் வெகு தூரம் உலாவச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். பரோடாவில் உள்ள பிரசித்தி பெற்ற பெரிய புத்தகசாலையில் மணிக்கணக்காக ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பார். "நான் கிராமத்தில் பன்னிரண்டு வயது வரைக்கும் வீட்டில் தங்கும்போது கௌபீனம் கட்டிக்கொண்டே திரிவேன். பள்ளிக்கூடம் விட்டு வந்ததும், வேஷ்டியைக் கழற்றி எறிந்துவிடுவேன். நகரத்துக்குப் படிக்க வந்தபோது, எப்போதும் வேஷ்டி உடுத்த வேண்டுமென்ற நிர்ப்பந்தம் கஷ்டமாயிருந்தது. சட்டை இருந்தாலும், அதைக் கழற்றித் தோளில் போட்டுக்கொண்டுதான் திரிவேன்" என்கிறார். இப்படி ஒரு நாள் சட்டை போடாமல் பரோடா புத்தகசாலையில் அவர் படித்துக்கொண்டிருந்தார். புத்தகசாலை அதிகாரி, "இப்படி முண்டமாக இருப்பது நாகரிகக் குறைவு; நிலையச் சட்டத்துக்கு விரோதம்" என்றார். விநோபா, "சட்டையை அணிந்துகொண்டுதான் படிக்கவேண்டுமென்ற உங்கள் சட்டத்தைக் காண்பியுங்கள்" என்றார். இந்தப் பதிலைப் பொறுக்க முடியாத அதிகாரி அவரை ஆங்கிலேய சூப்பிரண்டெண்டிடம் அழைத்துச் சென்றார். பதினைந்தே வயதான இந்தப் பையனை ஆங்கிலேயர் ஏற இறங்கப் பார்த்தார். கொடிய வெப்பத்தில் 'கோட்-சூட்' அணிந்துகொண்டு வியர்த்து விறுவிறுக்க விசிறிக்குக் கீழ் உட்கார்ந்திருக்கும் துரையை விநோபாவும் பார்த்தார். "மேலுடை இல்லாமல் இங்கே படிப்பதும் வருவதும் நாகரிகமல்ல" என்று துரை ஆங்கிலத்தில் சொன்னார். விநோபா மிகவும் நிதானமாக, "சிறியவர்களாக இருந்தாலும் உட்காரச் சொல்லித்தான் பெரியவர்கள் பேசுவது எங்கள் நாட்டின் நாகரிகம்" என்று ஆங்கிலத்தில் பதிலளித்தார். சூப்பிரண்டெண்

மூலம்: ஸர்வோதயம் (தமிழ், ஜூலை '52), வீரபாண்டி, திருப்பூர்.

டுக்கு ஆச்சரியமாகிவிட்டது; நாற்காலி கொடுத்து உட்காரச் சொன்னார். பின், விநோபா அவருடன் சில நிமிஷ நேரம் பேசிய பிறகு இந்த நாட்டின் இயற்கைக்கு ஒத்த உடை நாகரிகத்தை விளக்கினார். துரை அதை ஒப்புக்கொண்டு அவரைத் தட்டிக் கொடுத்து அனுப்பி விட்டார். இப்படிச் சிறு வயதிலிருந்தே விநோபா தைரியமும் துணிச்சலும் உடையவராக இருந்தார்.

மாணவராக இருக்கும்போதே கிராமப் பொருளாதார நிலையைக் கருத்தூன்றிக் கவனித்தார். கல்லூரிப் பொருளாதார சாஸ்திரத்தைப் படித்துக்கொண்டிருந்தாலும் அவர் மனம் கிராமப் பொருளாதாரத்தில் பதிந்திருந்தது. இண்டர்மீடியட் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது, ஒரு நாள் வகுப்பில் மாணவர்கள் கூடியிருந்தார்கள். ஆங்கிலப் பாட வகுப்பு நடக்கவேண்டிய நேரம். குறித்த காலத்தில் பாடத்துக்குரிய ஆங்கில ஆசிரியர் வகுப்புக்கு வராமல் 'சௌகரியமில்லை' என்று கடிதம் எழுதியனுப்பிவிட்டார். ஆசிரியர் வராவிட்டாலும் மாணவர்கள் தாங்களே வகுப்பு நடத்த முடிவு செய்தார்கள். விநோபாவையே வகுப்பு எடுத்து நடத்தும்படி மாணவர்கள் கேட்டுக் கொண்டார்கள். மாணவ விநோபா ஆசிரியர் ஆனார். அன்று நடத்த வேண்டிய ஆங்கிலக் கவியை அருமையாகவும் தெளிவாகவும் விளக்கினார். பாடம் நன்ருகப் புரிந்ததால் மாணவர்களுக்கு ஒரே சந்தோஷம். வகுப்பு முடிவதற்குச் சில நிமிஷம் இருந்தது. விநோபா தொடர்ந்து, "நான் உங்களுக்கு இன்று புதிய பொருளாதாரம் சொல்லப் போகிறேன். நம் ஆங்கிலப் பாட ஆசிரியருக்கு மாதம் ரூ. 1,100 சம்பளம். தினம் ஐந்துமணி நேரம் வாரத்துக்கு ஐந்து நாள் வேலை செய்கிறார். இப்படி மாதத்துக்குச் சுமார் 100 மணிநேரம் வேலை செய்யும் இவருக்கு மாதச் சம்பளம் ரூ. 1,100. அப்படியானால் ஒரு மணிக்கு இவருக்கு என்ன வருமானம் என்பதைக் கணக்குப் போட்டுப் பாருங்கள். நம் கிராம மக்களுக்குத் தினசரி நாலணு வருவாய் கிடைப்பதே துர்லபம். இப்படி ஏற்றத்தாழ்வின் சின்னமான இந்தக் கல்லூரிப் படிப்பினால் என்ன பிரயோஜனம்?" என்று வகுப்பை முடித்தார்.

புரட்சிக் கருத்துக்களையுடைய விநோபா விரைவில் கல்லூரிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தார். ஒரு நாள் ஹோலிப் பண்டிகைத் தினத்தன்று விளக்குக்கு முன்னால் உட்கார்ந்துகொண்டு தம்முடைய சர்ட்டிபிகேட்டுகளை ஒவ்வொன்ருய்க் கொளுத்திக்கொண்டிருந்தார். தாயார், "என்ன செய்து கொண்டிருக்கிருய்?" என்று கேட்டபோது விநோபா மிகவும் சாந்தமாக, "அகங்காரம், மோகம் இவைகளிலிருந்து விடுபடுவதற்காக இதுவரை கிடைத்த சர்ட்டிபிகேட்டுகளை அழித்துக்கொண்டிருக்கிறேன்" என்று பதில் சொன்னார். இளம் பிராயத்திலேயே துறவு மனப்பான்மை கொண்டு, ஆசாபாசங்களைத் துறந்து, வீட்டைவிட்டுக் கிளம்பினார்; மகான்களைத் தரிசிக்கவும், சம்ஸ்கிருதம் படிக்கவும் ஆவலுடையவராகப் பல இடங்கள் சுற்றினார். 1916-இல் கடவுளே அவருக்கு வழி காட்டியதுபோல்

காந்திஜீயிடம் வந்து சேர்ந்தார். அதிலிருந்து இதுவரை 36 வருஷங்களாக ஆத்ம சாதனையிலும், பணத்திலிருந்து விடுதலை, சுய தேவைப் பூர்த்தி ஆகிய காந்தீயப் பொருளாதார ஆராய்ச்சியிலும் ஈடுபட்டிருந்தார். "இன்று காந்திஜீ இருந்திருந்தால், ஜனங்களுக்கு முன் இந்த மாதிரி நான் வந்திருக்க மாட்டேன்; நான் முன் செய்துகொண்டிருந்தது போல ஒரு கிராமத் தோட்டி வேலை செய்துகொண்டிருப்பேன்; பணப் பிடிப்பிலிருந்து விடுபடுவதற்காக விவசாய ஆராய்ச்சி செய்துகொண்டிருப்பேன். இப்போது நான் வெளி வரவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது" என்று சொல்கிறார். அந்தக் காலத்து மகான்களைப் போலவே ஆத்மிக, தெய்விகக் கருத்துக்களைக் கிராமம் கிராமமாகக் கால்நடையாக நடந்து உபதேசித்துக்கொண்டு, அதன் ஆதாரத்தில் பொருளாதாரப் புரட்சியை நடத்தி வருகிறார். விநோபாவின் பூமிதான இயக்கத்தால் நம் நாட்டுக்கு மாத்திரமல்ல, உலகத்துக்கே ஓர் உன்னத வழி கிடைத்திருக்கிறது.

அணுவெடி அபாயமா?

அணுவை வெடிக்கச் செய்யும் வழி என்ன என்று கண்டு பிடித்ததால், மனிதகுலம் அழிந்துவிடப் போகிறதென்று யாரும் அஞ்சவேண்டியதில்லை. தீக்குச்சி மருந்தைக் கண்டு பிடித்ததால், மனித குலம் அழிந்துவிட்டதா என்ன?

—ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

கணக்கில் நேர்ந்த பிழை

'மஞ்சரி' ஸெப்டம்பர் இதழில் 'இளம் மேதைகள்' என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையில் 64-ஆம் பக்கத்தின் முடிவில் உள்ள எண்களில் ஒரு தவறு நேர்ந்துவிட்டது. அதில் கடைசி எண்ணுக்கு முந்திய '5' என்பது '2' ஆக இருந்திருக்க வேண்டும். 'மஞ்சரி' இளம்வாசகரான விருதுநகர் எம். ஆர். இரத்தினவேலு என்பவர் இதை எடுத்துக் காட்டியதற்கு நமது நன்றி. அவருடைய கடிதத்தின் சுருக்கத்தை இங்கே வெளியிட்டிருக்கிறோம்:

"......அதில் பத்தாவது ஸ்தானம் தப்பு. மெல்போர்ன் 'அவுர்கஸ்' பத்திரிகையிலும் இப்படிப் பிரசுரிக்கப்பட்டிருந்தால் இளம் மேதை ட்ரூமன் சாபர்ட் சொன்ன விடை தப்பு. அச்சுப் பிழையாயின் திருத்திக்கொள்ளுங்கள்.... ட்ரூமன் சாபர்ட் மாதிரி எனக்கு மனக்கணக்குப் போட வராது. இதைக் காகிதத்தில் எழுதியே சரி பார்த்தேன். 'மஞ்சரி'யிடத்தில் எனக்கு அலாதியான பிரியம் உண்டு. நான் தவறாமல் வாங்கி வரும் பத்திரிகை 'மஞ்சரி' ஒன்றுதான்."

ஆஹா! ஜனங்களுக்குத்தான் பரோபகார குணம் எப்படி உண்டாகிறது!

தர்ம உபதேசம்

★

பணக் கொழிப்புக் குறைந்து மீண்டும் பஞ்சம் தலை தூக்கவே, ஊரில் மறுபடியும் பிச்சைக்காரர் தலைகாட்ட ஆரம்பித்தார்கள். சுமார் 45 வயதுக்கு மேற்பட்ட ஒரு பிச்சைக்காரன் வீடு வீடாகப் பிச்சையெடுத்துக் கொண்டே போனான். யாராவது வீட்டுக் கதவைத் திறக்கும்போது அவன் பிச்சை என்று வாய் திறந்துகூடக் கேட்காமல் தன் அழுக்குக் குல்லாயை நீட்டுவான்;

இருந்தாலும் மூன்று வீடுகளில் பிச்சை போட்டார்கள். ஓர் இடத்தில் ஒரு தம்பிடி கிடைத்தது. இன்னோர் இடத்தில் ஒரு காலணா போட்டார்கள். மூன்றாவது வீட்டுக்காரனுக்கு எப்போதுமே தாராள மனசு; அவன் பிச்சைக்காரனின் கிழிந்த குல்லாயில் கால் ரூபாய் போட்டான்.

கொஞ்ச நாள் கழித்து அந்த மூன்று வீட்டாருக்கும் ஒரே மாதிரி எழுதிய மூன்று கடிதங்கள் கிடைத்தன. அதைப் படித்த போது அவர்களுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது.

“நீங்கள் யாரோ முன்பின் தெரியாத அநாதைப் பிச்சைக்காரனிடம் கருணை காட்டினீர்கள். அந்த நன்றிக்குரிய சம்மானமாக இதோ அதைவிட நூறு மடங்கு அதிகமான தொகை உங்களுக்கு அனுப்புகிறேன். ஆனால் தயை செய்து இதைப்பற்றி யாரிடமும் ஒரு வார்த்தைகூடப் பேச வேண்டாம். மறைவாக இருந்தபடியே தகுதியுள்ளவர்களுக்கு என்னால் ஆன உபகாரம் செய்து வரப்போகிறேன்.”

முதல் கடிதத்தில் $\frac{1}{2}$ ரூபாய்க்கும், இரண்டாம் கடிதத்தில் $1\frac{1}{2}$ ரூபாய்க்கும், மூன்றாம் கடிதத்தில் 25 ரூபாய்க்கும் போஸ்டல் ஆர்டர் இணைத்திருந்தது.

காப்பிரைட்: ஃபோரம் (ஆங்கிலம்; 24-8-'52), பம்பாய்.

மறுபடியும் அந்தப் பிச்சைக்காரன் அந்த ஊரில் பிச்சையெடுக்கும்போது என்ன நடந்தது தெரியுமா? கால் ரூபாய் மட்டுமல்ல, முழு வெள்ளி ரூபாய்களும் பாங்கி நோட்டுகளும் அவன் கிழிந்த குல்லாயில் குவிந்தன. ஒரு கனவான் தம் கையில் போதிய பணம் இல்லையே என்று மிகவும் வருத்தப் பட்டுவிட்டு, பிறகு ஜேபியிலிருந்து ஒரு செக் புத்தகத்தை எடுத்துப் பெருந் தொகைக்கு 'பேரர்' செக் ஒன்றையே வெட்டிக் கொடுத்து விட்டார்.

பிச்சைக்காரனுக்கு ஒரே மகிழ்ச்சி. இந்த இரண்டு மூன்று நாளில் அந்த ஊரில் இவ்வளவு தூரம் பரோபகார சிந்தை பெருகி விடும் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை.

அன்று மாலை அவன் அங்கிருந்து வெளியேறிப் பட்டணத்துக்குப் புறப்பட்டான். நகரத்தில் வந்து இறங்கியதும் ஸ்டேஷனில் அழகிய 'யூனிபார்ம்' அணிந்த டிரைவர் ஒருவன் பேஷான கார் ஒன்றைத் தயாராகக் கொண்டுவந்து எதிரே நிறுத்தினான். முதலில் அந்த ஆசாமி நேராகப் பாங்கிக்கு ஓட்டும்படி உத்தரவிட்டான். கையிலிருந்த தொகையைப் பாங்கியில் தன் கணக்கில் கட்டினான். தன் மாளிகைக்குச் சென்றான். சுடச் சுட ஒரு கோப்பை டீ சாப்பிட்டான். நிதானமாக அறுசுவை உணவு உண்டபின் தன் படுக்கையறையில் போய் மேஜை டிராயரைத் திறந்து அந்த ராஜ்யத்தின் படத்தையும் ரெயில்வே கால அட்டவணையையும் எடுத்தான். அடுத்த முறை எங்கெங்கே சுற்றலாம் என்று திட்டம் போடலானான்.

"இப்போதுதான் எனக்குத் திருப்தியாக இருக்கிறது. ஜனங்கள் இப்படி மனசு வந்து கொடுக்கும்படி செய்கிறேனே, இது எவ்வளவு உத்தமமான தொண்டு!" என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

எதிரியின் வேண்டுகோள்

ருஷியாவில் ஒருவனுக்குத் தண்டனை விதித்து, சைபீரியா காட்டுக்கு அனுப்பப் போனார்கள். அப்போது அவன், "உலகத்திலேயே மகா மோசமான இடம் அமெரிக்கா என்கிறீர்களே, அங்கே என்னை அனுப்பாமல் சைபீரியாவுக்கு ஏன் அனுப்புகிறீர்கள்?" என்றான்.

—'பாஸ்டன் க்ளோப்'

ஜனநாயக மகிமை

அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்குக் கப்பலில் போய் இறங்கிய ஒரு ஸோல்ஜர் எழுதிய கடிதம் ஒன்றைச் சமீபத்தில் நான் படித்தேன். அவர் எழுதியிருந்தது இது: "அமெரிக்க ஜனநாயகச் சிறப்பை விளக்கும் ஓர் அபூர்வ உதாரணமாயிருந்தது எங்கள் கப்பல். அதில் இருந்த இடத்தை ஆபீஸர்களுக்குப் பாதி ஸோல்ஜர்களுக்குப் பாதி என்று சரிசமமாகப் பங்கு பிரித்துக்கொண்டு நாங்கள் அநுபவித்தோம். (ஆபீஸர்கள் 130 பேர்; ஸோல்ஜர்கள் 3,000 பேர்.)"

—லூயில் கானெக்

நம் பத்திரிகைகள்

ஏ. டி. மணி

அகில இந்தியப் பத்திரிகாசிரியர் மகாநாட்டின் தலைவரும் 'ஹிதவாதா' பத்திரிகையின் ஆசிரியருமான இவர் இன்று இந்தியாவிலுள்ள தினசரிகளைப்பற்றி முக்கியமான பல விவரங்களை எடுத்துக் கூறுகிறார். பத்திரிகைத் துறையில் நல்ல அநுபவம் உள்ளவர் இவர். ஆகவே, இதிலுள்ள கருத்துக்கள் அவசியம் கவனிக்க வேண்டியவை. வெளிநாட்டுப் பத்திரிகை ஒன்றுக்காகத் தொகுத்தது இந்த விவரம்.

அரசியல் அறிவு வளர நம் நாட்டுப் பத்திரிகைகள் முக்கிய சாதனமாக விளங்கு கின்றன. பொதுவாக, இந்தியத் தினசரிகள் மக்களின் மனத்தைக் கவரும் செய்திகளுக்கு அதிக இடம் அளிப்பதில்லை. அன்றாட அரசியல் பிரச்னைகளைத்தான் பிரமாதமாக வெளியிட்டு வரு கின்றன. ஆஸ்பத்திரிக்கு ஆம்பு லன்ஸ் வண்டியில் போய்க்கொண் டிருக்கும்போது நடு வழியில் ஒரு தாய் பிரசவித்து விடுகிறாள் என்று வைத்துக்கொள்வோம். இந்த மாதிரி விஷயத்துக்கு இங்கே முக்கியத்துவம் கொடுக்க மாட் டார்கள். ஆனால் நாலு அம்சத் திட்டம், துனீசியா, இந்தியத் தேர் தல், சர்வதேச பாங்கி போன்ற அரசியல், பொருளாதார விஷயங் களைப்பற்றிய செய்திகளையும் தலை யங்கங்களையும் போட்டுப் பிரமாதப் படுத்துவார்கள்.

இதற்குக் காரணம், பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இந்தியப் பத்தி ரிகைகள் தேசியத்தைப் பரப்பு வதே நோக்கமாக இருந்ததுதான்; பிரிட்டிஷ் சர்க்கார் அவைகளை எப்போதும் சந்தேகித்து வந்தார் கள். அரசியல்பற்றியே இந்த ஐம்பது ஆண்டுகளாக அவை அதிகமாக விவாதித்து வர நேர்ந் தது. இந்தப் பழைய வாசனை கொஞ்சத்தில் போகுமா?

இதைக் கவனித்தால் இந்தியப் பத்திரிகைகள் இன்னும் பரந்த முறையில் நடைபெறவில்லை என்பது விளங்கும். இப்போது சில பத்திரிகைகள் இந்தக் குறையை உணர்ந்துதான் வருகின் றன. அரசியலோடு, மக்கள் ரசிக் கக்கூடிய பிற சின்னஞ் சிறு விஷ யங்களையும் பிரசுரிக்கும் பல வாரப் பத்திரிகைகள் இப்போது வெளி வரத் தொடங்கியிருக்கின்றன.

இந்தியப் பத்திரிகைகளில் வெளியாகும் தலையங்கங்கள் பொதுவாக விரிவாயும் விவாத ரீதியிலும் அமைந்திருக்கும். மேல் நாடுகளில், சென்ற நூற்றாண்டில் அரசியல் பிரசுரங்கள் வெளியிடு வார்கள்; ஒரு விதத்தில் அதே

காப்பிரைட்: ஃப்ரி இந்தியா (ஆங்கிலம்: 14-9-'52), ஜெனரல் பாங்கர்ஸ் ரோடு. சென்னை-2

மாதிரிதான் இந்தத் தலையங்கங்களும் இருக்கின்றன. அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் உள்ள பத்திரிகைகளில் பொருள் பொதிந்து ரத்தினச் சுருக்கமாக வெளியாகும் கட்டுரைகளைப் பார்த்தால் நம் நாட்டு எழுத்தாளருக்கும் சரி, பொது மக்களுக்கும் சரி பிடிக்காது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அரசியல் பிரசாரத்தையே படித்துப் படித்து அதில் ஊறிவிட்டதால் இன்னும் பத்திரிகை அபிப்பிராயத்தைப் பார்த்துத்தான் பல விஷயங்களை முடிவு செய்கிறார்கள். பல தலையங்கங்கள் பொடி எழுத்தில் ஒன்று அல்லது ஒன்றரைப் பத்திக்குமேல் இருந்தாலும் அவர்கள் அக்கறையாகப் படிக்கிறார்கள். வழக்கமாகத் தினசரிப் பத்திரிகைகளைப் படிப்பவர்கள் படுக்கப் போவதற்கு முன் இந்தியாவிலோ உலகத்திலோ நிகழ்ந்த சில விசேஷ நிகழ்ச்சிகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள். நெடுநாளாக நடந்துவரும் கொரிய சமரசச் பேச்சுப்பற்றி எடுத்துவிட்டால் போதும்; 'கேபிள் மூலம் விரிவான தகவல் கிடைப்பதென்றால் அதிகச் செலவாகும்' என்று சுருக்கமாகவே அவற்றைப் பத்திரிகைகளில் வெளியிட்டாலும் இந்தமாதிரி வாசகர்கள் அந்தக் கொஞ்சத்தை வைத்துக்கொண்டே பிரமாதமாக விவாதிக்க ஆரம்பித்துவிடுவார்கள்.

ஆங்கிலத்தில் வெளியாகும் இந்தியப் பத்திரிகைகளில் பொதுவாக வெளிநாடுபற்றிய தகவல்கள் பிழையின்றி விரிவாய் இருப்பதைக் காணலாம். 'நியூ யார்க் டைம்ஸ்,' 'தி வீக் இன் ரெவ்யூ' போன்ற பத்திரிகைகளை நன்றாகப் படித்துவிட்டு அன்றாட உலக நிகழ்ச்சிகளைக் கவனித்தே உடனுக்குடன் தலையங்கம் எழுதுகிறார்கள்.

பல தினசரிப் பத்திரிகைகளில் உள்ளூர்ச் செய்திகளைப்பற்றிய விவரம்- அதிலும் பொதுக் கூட்டத்தில் பல பேர் பேசியவைபற்றிய விரிவான தகவல் - வெளியாகிறது. இவை எல்லாமே அப்படி ரசமாக இருக்கும் என்று சொல்வதற்கில்லை. கூட்டத்துக்கு இன்னார் இன்னார் வந்திருந்தார்கள் என்றும் இந்தச் சந்தர்ப்பங்களில் பிரசுரித்து விடுகிறார்கள். இதனால் வீண் மனஸ்தாபங்கூட ஏற்பட்டு விடுகிறது. இன்னார்தான் முக்கியமானவர் என்று கண்டுபிடிக்க இயலாத வரையில் யார் பெயராவது விட்டுவிட்டால் அவர் அதிருப்தி அடைவது சகஜந்தானே?

மேல்நாட்டில் விலை போகும் அளவுக்கு இந்தியாவில் பத்திரிகைகள் செலவாவதில்லை. பம்பாயிலிருந்து வெளியாகும் 'டைம்ஸ் ஆவ் இந்தியா' பத்திரிகைதான் ஏராளமாகச் செலவாகிறது (93,225 பிரதிகள்). இது முன்னே பென்னெட் அண்டு கோல்மான் என்ற பிரிட்டிஷ் கம்பெனிக்குச் சொந்தமாக இருந்தது. மூன்று வருஷங்களுக்கு முன் சேத் ராமகிருஷ்ண டால்மியா என்ற பிரபல வியாபாரி இதை வாங்கினார். அவருடைய அரசியல் கொள்கை ஒரே மாதிரி இராமல் மாறிக்கொண்டேயிருக்கிறது. நாட்டில் பழையபடி இந்து ஆதிக்கம் நிலவவேண்டும் என்பது அவர் கோரிக்கை. இது சம்பந்தமாக அவர் வெளியிடும் அறிக்கைகளை அவ்வப்போது அந்தப் பத்திரிகையில் பார்க்க

லாம். 'டைம்ஸ் ஆவ் இந்தியா' பிரிட்டிஷாருக்குச் சொந்தமாக இருந்தபோது பெரும்பாலும் சர்க்காரை ஆதரித்து, ஏதோ சின்னஞ் சிறு விஷயங்களில்மட்டும் தன் சொந்தக் கருத்தை வெளியிட்டு வந்தது. இப்போது அப்படியில்லை. அது நேரு ஆட்சிக்கு எதிர்க்கட்சிப் பத்திரிகையாக விளங்குகிறது. ஆயினும், இன்ன விஷயங்களில் தான் மாறுபடுகிறது என்பது இன்னும் தெளிவாகவில்லை.

சென்னையிலுள்ள 'ஹிந்து' பத்திரிகை மிகவும் கௌரவமான முறையில் நடைபெற்று வருகிறது என்று சொல்லலாம். ஸ்ரீ கே. ஸ்ரீநிவாசன் குடும்பத்தார் இதை நடத்தி வருகிறார்கள். இதன் அமைப்பு லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகைபோல் இருக்கிறது. மற்ற இந்தியப் பத்திரிகைகளைவிடப் பரந்த முறையில் இதில் செய்திகள் வெளியாகின்றன. லண்டனிலும் நியூ யார்க்கிலும் இதற்கென்று தனி நிருபர்கள் இருக்கிறார்கள். இது சிறந்த முறையில் செய்திகளைப் பிழையின்றி வெளியிடும் பத்திரிகை என்று பெயர் பெற்றிருக்கிறது. பொதுவாகக் காங்கிரஸ் கட்சியைத்தான் ஆதரித்து வருகிறது; சில முக்கியமான விஷயங்களில் மட்டும் சொந்த அபிப்பிராயத்தை வெளியிடத் தயங்குவதில்லை. தென்னிந்தியாவில் கம்யூனிஸ்ட் கொள்கையை வன்மையாகக் கண்டித்து வருகிறது 'ஹிந்து'.

இதற்கு அடுத்தபடியாக பிர்லாவுக்குச் சொந்தமான பத்திரிகைகளைக் குறிப்பிடலாம். டெல்லியிலுள்ள அவருடைய 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' 41,651 பிரதி செலவாகிறது. அலாகாபாதிலுள்ள 'லீடர்' 8915 பிரதி செலவாகிறது. பாட்னாவிலும் 'ஸெர்ச்லைட்' என்று இவருக்குச் சொந்தமான ஒரு பத்திரிகை இருக்கிறது. அங்கங்கே பிரதேச பாஷையிலும் இவைகளை வெளியிட்டு வருகிறார் பிர்லா. ஆனால் இவற்றின் அன்றாட அலுவல்களில் இவர் தலையிடுவதில்லை. தம்முடைய வியாபார நலனைப் பாதிக்காமல் இருக்கவேண்டும் என்பதுதான் இவர் நோக்கம்.

'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ தேவதாஸ் காந்தி; இவர் மகாத்மாவின் மகன். பொதுவாகக் காங்கிரஸ் கட்சியைத்தான் இந்தப் பத்திரிகை ஆதரித்து வருகிறது. ஏதோ சில்லறை விஷயங்களில் மட்டும் நேருவின் கொள்கைகளைக் கண்டிக்கிறது. பிர்லாவின் பத்திரிகைகளில் முக்கியமானவை இதுவும் ஹிந்தியில் வெளியாகும் 'ஹிந்துஸ்தான்' என்ற பத்திரிகையுமே. ஆங்கிலத்தில் வெளியாகும் இவருடைய மூன்று பத்திரிகைகளிலும் விசேஷக் கட்டுரைகள் உண்டு. இந்த மூன்று பத்திரிகைகளையும் மொத்தமாக எடுத்துக்கொண்டால் அப்படிப் பிரமாதமாக இவை இந்தத் துறையில் வெற்றியடைந்திருப்பதாகச் சொல்வதற்கில்லை.

ஸ்ரீ ராமநாத் கோயங்கா நடத்தும் பத்திரிகைகளை எடுத்துக்கொள்வோம்: இவற்றில் சென்னையில் வெளியாகும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' 44,469 பிரதி செலவாகிறது. கூடவே தமிழில் வெளியாகும் 'தினமணி' 54,229 பிரதி செலவாகிறது. பம்பாயிலிருந்து இவர் வெளியிடும் 'நேஷனல் ஸ்டாண்டர்டு', டெல்லியிலிருந்து

வெளியிடும் 'டெல்லி எக்ஸ்பிரஸ்' இரண்டும் அவ்வளவு அதிகமாகச் செலவழியவில்லை. சமீப காலம் வரையில் கோயங்கா இந்தியப் பார்லிமெண்ட் அங்கத்தினராக இருந்தவர். அவருடைய கொள்கைகளுக்கு ஏற்றபடி இந்தப் பத்திரிகைகளின் கருத்தும் அவ்வப்போது மாறி வந்தாலும் பொதுவாக இன்னும் காங்கிரஸிடத்தில் பற்று உள்ளவராகத்தான் அவர் இருக்கிறார். அவரும் கம்யூனிஸ்ட் கொள்கையை எதிர்ப்பவர்தான். இந்தப் பத்திரிகைகள் இன்னும் மக்களின் அபிப்பிராயத்தை உருவாக்கக் கூடிய நிலைக்கு வரவில்லை.

இவைகளைத் தவிர இன்னும் தனித்தனியே சிலபேர் நடத்தும் சிறந்த பத்திரிகைகளும் இருக்கின்றன. லாகூரிலிருந்து வெளியாகும் 'ட்ரிப்யூன்' பத்திரிகை அந்தப் பக்கத்திலே மிகவும் பிரசித்தமானது; 'ஹிதவாதா' என்பது இந்திய ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த பத்திரிகை. மத்தியப் பிரதேசத்தில் இதற்குச் செல்வாக்கு உண்டு. கல்கத்தாவிலிருந்தும் டெல்லியிலிருந்தும் ஒரே சமயத்தில் வெளியாகும் 'ஹிந்துஸ்தான் ஸ்டாண்டர்டு'ம் 'ஆனந்த பஜார் பத்திரிகா' என்ற வங்காளித் தினசரியும் (89,299 பிரதிகள்) சுரேஷ்சந்திர மஜூம்தாருக்குச் சொந்தமானவை. நெருக்கடியான சில பிரச்னைகளைப் பொறுத்த வரை கொள்கை மாறுபட்டாலும் மொத்தத்தில் காங்கிரஸின் சார்பாகத்தான் இவை இருக்கின்றன. கல்கத்தாவிலிருந்தும் அலாகாபாதிலிருந்தும் ஒரே சமயத்தில் வெளியாகும் 'அமிர்தபஜார் பத்திரிகா'வும் வங்காளியில் வெளியாகும் 'ஜுகாந்தர்' என்ற பத்திரிகையும் ஸ்ரீ துஷார்காந்தி கோஷ் என்பவருக்குச் சொந்தமானவை.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த பத்திரிகைகளில் முக்கியமானது பம்பாயிலிருந்து வெளியாகும் 'ப்ளிட்ஸ்' என்ற வாரப் பத்திரிகை. சுமார் 42,900 பிரதிகளுக்குமேல் செலவாகிறது. இந்திய சர்க்காரைத் தாக்கிப் பரபரப்பூட்டும் தகவல்கள் இதில் வெளியாகின்றன. இதைப் போல் கடுமையாகக் காங்கிரஸ் ஆட்சியைத் தாக்கும் பத்திரிகை இல்லை என்றுகூடச் சொல்லலாம். அமெரிக்கா என்றாலே இதற்கு ஆகவில்லை. இதன் ஆசிரியரும் சரி, சொந்தக்காரர்களும் சரி, கம்யூனிஸ்ட் கொள்கையில் நம்பிக்கையுள்ளவர்கள் என்று சொல்ல முடியாவிட்டாலும் ஓரளவுக்குச் சோவியத் சார்பாக இருக்கிறார்கள் என்றே சொல்லவேண்டும். ஏராளமான பேர் இதை வாங்கிப் படிக்கிறார்கள்; இருந்தாலும் பொது மக்களிடையே அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கு ஏற்ற செல்வாக்கு இதற்கு இல்லை. காங்கிரஸை இது இவ்வளவு தாக்கியுங்கூட, சமீபத்தில் பம்பாய் நகரில் நடந்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் பெருவாரியில் வெற்றி பெற்றது என்றால் பாருங்கள்.

கல்கத்தாவிலிருந்து வெளிவரும் 'ஸ்டேட்ஸ்மான்' என்ற பத்திரிகை மிகவும் முக்கியமானது; செல்வாக்குள்ளது. பிரிட்டிஷ்காரர் நடத்தும் பத்திரிகை இது. 62,722 பிரதிகள் விற்பனையாகின்றன. வெளிநாடு பற்றிய தகவலை இதில் விசேஷமாகக் காணலாம். இரண்டு நாடுகளிலும் இதை அநேகம் பேர் வாங்கி வந்ததால் கொஞ்ச நாளைக்கு முன்னால்கூட இது இந்தியா, பாகிஸ்தான் விஷயத்தில்

ஒன்றாது எட்டி நிற்பது போன்ற முறையில் எழுதி வந்தது.

ஆனால் இப்போதெல்லாம் இந்திய நிலைமைக்கு ஒத்து இயங்குகிறது; அவ்வப்போது சர்க்காரைக் குறை கூறினாலும் ஆக்கமளிக்கும் விதத்தில் சில யோசனைகளைச் சொல்லி வருகிறது.

பொதுவாக இந்தியப் பத்திரிகைகள் தெளிவான நோக்கத்தோடுதான் நடந்து வருகின்றன என்று சொல்ல வேண்டும். பொது மக்களுக்கு அறிவூட்டும் இந்த மாதிரி பத்திரிகைகளைத் தெற்கு ஆசியாவிலே வேறெங்கும் காண முடியாது. அரசியலில் தங்களுக்குரிய கடமைகளை உணர்ந்து நடக்கப் பொதுமக்களுக்குத் தெரிந்துதானே ஆகவேண்டும்! ஆகவே, இந்தியாவில் ஜனநாயகம வளர வளர இந்தியப் பத்திரிகைகளும் சிறந்தோங்கும் என்று எதிர்பார்க்கலாம். அதிலும், அந்த அந்தப் பிரதேச மொழியிலேயே இவற்றை நடத்தவேண்டும். அப்போதுதான் இவற்றைப் படிக்கப் பொது மக்கள் எல்லோருக்குமே வாய்ப்பேற்படும்.

மொத்தத்தில் கவனித்தால் பல குறைகள் இருந்தாலும், ஜனநாயக முறையை உறுதியாகப் பற்றிப் பேணி வளர்க்கும் தொண்டில் இந்தியப் பத்திரிகைகள் சிறந்து விளங்குகின்றன என்று சொல்ல வேண்டும். யதேச்சாதிகாரத்தை வன்மையாக எதிர்த்து அவை சமாளித்து வருகின்றன. இந்திய ஜனநாயகம் ஓங்கி வளர இதை விட வேறு என்ன வேண்டும்?

தெய்விகக் கணக்கு!



அழகு என்பது என்ன? இந்த விஷயம்பற்றி 'எவ்வரிபடீஸ் விக்லி' என்ற பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்றில் ஒரு சிறு விவாதம் நடந்தது. "மனிதர்களின் அழகு எந்தக் கணித சூத்திரத்துக்குள்ளும் அடங்காது" என்று ரெஜினால்டு டி. ஈஸ்டன் என்ற ஸ்காட்லாந்துவாசி எழுதினார். "ஜோஸபைன் கிரிப்பின் என்பவளுடைய தலை அழகாயிருப்பதன் காரணத்தை நிரூபிக்கும் கணித ரீதியான சித்திரங்களை இதோ அனுப்பியிருக்கிறேன்" என்கிறார் டெர்பிவாசியான அலெக்ஸாண்டர்ஸ் க்ருக்கா என்பவர். மேலே இருப்பவை அவர் கொடுத்துள்ள படங்கள்தான்.

வெள்ளத்திலே அகப்பட்டுக்கொண்டவன்
முழுகிச் சாக வேண்டியதுதானா?

நீஞ்சாமல் மிதக்கலாம்

★

நீஞ்சத் தெரிந்தவனே நீர் விபத்தில் தப்பலாம் என்பது சரியல்ல. எவரும் தப்பித்துக்கொள்வதற்குரிய வழியை விளக்கும் இந்த விவரம் 'காரொனெட்' பத்திரிகையில் இ. இ. ஆல்ப்ரைட் என்பவர் எழுதிய ஒரு கட்டுரையை ஆதாரமாகக் கொண்டது.

இரண்டாவது உலக யுத்தம் நடந்துகொண்டிருந்த காலத்தில், அட்லாண்டிக் சமுத்திரத்தில் அமெரிக்கப் பாதுகாவல் கப்பல் ஒன்று சென்றுகொண்டிருந்தது. அப்போது திடீரென்று டார்ப்பிடோ குண்டு ஒன்று படீர் என்று நீருக்கடியிலே வெடித்து அந்தக் கப்பலைத் துளைத்து முழுகடித்துவிட்டது.

அந்தக் கப்பலில் இருந்த ஒரு வீரன் தண்ணீரில் தன்னந்தனியே தத்தளித்துக்கொண்டிருந்தான். வெடியின் அதிர்ச்சியால் நினைவிழந்த அவனுக்கு மீண்டும் பிரக்ஞை வந்தபோது, புஜ எலும்பு முறிந்திருக்கக் கண்டான்; கையில் கடுமையாகத் தீக்காயம் பட்டிருப்பதை அறிந்தான். "இனி நான் பிழைப்பதேது? தொலைந்தேன்" என்று எண்ணி மனஞ் சோர்ந்தான். பல வருஷங்களுக்கு முன்னே அவன் கற்ற பாடம் ஒன்று அப்போது அவனுக்குப் பளிச்சென்று ஞாபகம் வந்தது. "அது கண்டிப்பாகப் பலிக்கும்" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.

வீரனின் உடம்பு மெல்ல மெல்ல நீரில் ஆழ்ந்தது. சில நிமிஷ நேரத்துக்கெல்லாம் மீண்டும் மேல் மட்டத்துக்கு வந்தது. ஒரு கணம் மேலே இருந்துவிட்டு, மறுபடியும் நீருக்குள் அமிழ்ந்தது.

1 2 3

நூற்றுக்கணக்கான தடவை இதே மாதிரி அந்த வீரனின் தீர முகம் நீரில் அமிழ்வதும் வெளியே கிளம்புவதுமாய் இருந்தது. கப்பலில் அமிழ்ந்தவர்களைக் காப்பாற்றுவதற்காகத் தூரத்திலே வந்த படகு ஒன்றில் இருந்தவர்கள், இந்த வீரன் தத்தளிப்பதைக் கண்டு ஓடி வந்தார்கள்.

படகில் தொற்றி யேறினன் வீரன். படகில் இருந்தவர்களுக்கெல்லாம் இவனைக் கண்டு ஆச்சரியமாய்ப் போயிற்று. இன்னும் எவ்வளவு நேரம் வேண்டுமானுலும் தண்ணீரில் கிடக்கக்கூடிய தெம்பு இவனுக்கு இருந்தது. கப்பல் உடைந்து ஏற்கனவே ஐந்து மணி நேரம் சென்றுவிட்டது. அப்படியிருந்தும் இவன் துளிக்கூடக் களைக்காததுதான் அவர்களுக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

இந்த வீரனைக் காப்பாற்றிய 'விந்தை' யுக்தி என்ன? ஃப்ரெட் ஆர். லானு என்ற நீச்சல் நிபுணர் ஒருவர், சில நிமிஷ நேரத்தில் கற்றுக்கொடுத்த ஒரு தந்திரந் தான் அது. அந்தத் தந்திரத்தால், பல பேர் உயிர் தப்பிப் பிழைத்திருக்கிறார்கள். இன்று நீரில் மூழ்கிச் சாகும் பல்லாயிரக் கணக்கான மக்களில் பாதிப் பேரை, இந்தத் தந்திரத்தால் காப்பாற்றிவிட முடியும் என்று அந்த நிபுணர் சொல்லுகிறார்.

ஜியார்ஜியா மாகாணத்தில் யந்திர நுட்பக் கலாசாலையில் நீச்சல் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர் அவர். அங்கே பதினறு வருஷங்களாக இப்படி ஆசிரியராக இருக்கிறார். நீருக்குமேல் வெகு நேரம் வரைக்கும் மிதந்துகொண்டிருப்பதற்கு வேறு ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கும் முறைகளெல்லாம் சரி அல்ல என்று அப்போதே லானு ஆட்சேபித்தார். நாய்கள் நீஞ்சுவது மாதிரி நீஞ்ச வேண்டும் என்று சில ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள்; வேறு சில நீச்சல் முறைகளை மற்ற ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

"இதெல்லாம் பிசகு. தண்ணீரில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் போகத்தான் இந்த முறைகளெல்லாம் பயன்படும். தங்களைக் காப்பாற்றுவோர் வருகிற வரைக்கும் தண்ணீரில் ஒரே இடத்தில் பத்திரமாய் மிதந்து கொண்டிருப்பதற்கு உதவும் ஒரு முறையே நமக்கு வேண்டும்" என்று லானு சொன்னார்.

விஞ்ஞான ரீதியில் இந்த விஷயத்தை அவர் ஆராயத் தொடங்கினர். "சாவதா பிழைப்பதா என்று நீரிலே உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் ஒருவன், மிதந்த



படி இருப்பதற்கு என்ன தேவை? உடம்பிலே போதிய காற்றுத் தான் தேவை'' என்று அவர் முடிவு செய்தார்.

பரீட்சை செய்து பார்த்ததில், நூற்றுக்கு 95 பேர், தாங்கள் சுவாசிக்கும் காற்று ஒன்றைக் கொண்டே நீரில் மிதக்க முடிந்தது. மீதி 5 பேரும் சுவாசிப்பதோடு கையையும் காலையும் சிறிது சிறிது ஆட்டுவதன் மூலம் மிதக்க முடிந்தது. அலை மிகவும் கொந்தளிப்பாயிருந்தால் அங்கங்களைப் பலமாய் ஆட்ட வேண்டியிருக்கலாம். அப்படி யில்லாமல் அமைதியாக இருக்கும் கடலில், அங்கங்களைப் பலமாய் ஆட்டுவது அநாவசியம்; அதனால் உடம்பு தான் பலம் குன்றிக் களைத்துப் போகிறது.

''முடிந்த மட்டும் உடம்பின் பலத்தைக் குன்ற விடாமல் பாதுகாத்துக்கொள்ளுங்கள். சுவாசிக்க அவசியமானபோது மட்டும் அதை உபயோகியுங்கள்'' என்கிறார் லானு. அதாவது தேகத்துக்குச் சிறிது உழைப்பும் தராமல் கட்டை போல் கிடக்கவேண்டும் என்பது அவர் கருத்து.

நீரில் மிதக்கும்போது தலையைத் தண்ணீருக்குமேலே நீட்டிக் கொள்ள வேண்டும் என்று பெரும்பாலான நீச்சல் நிபுணர்கள் சொல்லுகிறார்கள். இதற்கு நேர் எதிரிடையான வழியை லானு சோதித்துப் பார்த்தார். ''வாய்க்கு மேல் பாகம் உங்கள் தலையின் நிறை சுமார் 12 பவுண்டு இருக்கிறது. தலையை நீருக்கு மேலே நீட்டிக்கொண்டு மிதப்பதனால், தேக பலம் வீணே செலவழிகிறது. 12 பவுண்டு நிறையுள்ள கோட்டை அணிந்து கொண்டு நீஞ்சுவது போல்தான் இதுவும் சிரமந் தரும்'' என்று அவர் சொல்லுகிறார்.

''சுவாசிக்க வேண்டிய போது மட்டுமே தலையை நீருக்கு மேலே தூக்குங்கள்'' என்று தம் சிஷ்யர்களுக்கு லானு உபதேசிக்கிறார். ஜியார்ஜியா யந்திர நுட்பக் கலாசாலையில் பயிலும் அவருடைய மாணவர்கள், தங்கள் நேரத்தில் பெரும் பகுதியையும் நீருக்குள் துளியும் ஆடாமல் அசையாமல் மிதப்பதிலேயே கழிக்கிறார்கள்.

அதற்கு லானு சொல்கிற விதிகள் இவை (படங்களைக் கவனியுங்கள்):

1 - நீர் மட்டத்துக்கு மேலே உங்கள் தலை இருக்கும்போது, முடிந்த மட்டும் நிறைய மூச்சு இழுங்கள்.

2 - முகம் கவிழ்ந்தபடி மிதவுங்கள்.

3 - நீர் மட்டத்துக்கு மேலே உங்கள் தலை வந்துகொண்டிருக்கும்போது மூச்சை விடுங்கள்.

4 - கையையும் காலையும் அடித்துத் தலையை வெளியே நீட்டிப் பலமாய் மூச்சு இழுங்கள்.

5 - தலையை முன் புறம் கவிழ்த்து அமிழுங்கள்.

6 - தேகத்துக்கு முற்றும் ஓய்வு கொடுத்துப் பேசாமல் இருங்கள். மறுபடியும் மூச்சு விடவும் இழுக்கவும் தேவையான போது மட்டும் முன் போல் மேலே வாருங்கள்.

இந்தப் பயிற்சியை முதல் முதலாகக் கற்கிறவர்களுக்குச் சில நிமிஷ நேரத்தில் இது பழகிவிடும். பிறகு, வெகு கணக்காக நீருக்குள்ளும் வெளியிலும் மாறி மாறி அமிழ்வதும் எழுவதுமாக இருப்பார்கள். முப்பது நிமிஷ நேரத்தில்

இதை எவருக்கும் லானு சொல்லிக் கொடுத்து விடுகிருர். இப்படிக் கற்ற மாணவர் உடனே நீச்சல் குட்டையில் குதித்துவிடுகிருர். லானுவிடம் இந்தப் பயிற்சி பெற்ற புதிய மாணவர்கள் பலர், இந்த மாதிரி எட்டு மணி நேரம் வரையில்கூட நீருக்குள்ளே வெகு சுலபமாக மிதக்கிருர்கள்!

லானு மற்ெருரு சோதனை செய்தார். நீச்சல் திறமை வாய்ந்த ஒரு மாணவருடைய காலையும் கையையும் கட்டி, நீச்சல் குட்டைக்குள் போட்டார். பிறகு, பல மணி நேரம் கழிந்து விட்டது. அப்போதும் அந்த மாணவர் எந்த வித சிரமமும் இல்லாமல் வெகு கணக்காக நீருக்குள் அமிழ்வதும் வெளியே தலை நீட்டுவதுமாய் இயங்கிக்கொண்டிருந்தார்!

ஒரு சிறு குழந்தைகூட இந்தப் பயிற்சியைச் சுலபமாகப் பழகிவிடலாம். "நீங்கள் தண்ணீருக்கு மேலே வர விரும்பும்போது, கையையும் காலையும் கீழ் நோக்கித் தண்ணீரிலே அடியுங்கள். அவ்வளவு போதும்; மேலே வந்துவிடுவீர்கள். அப்போது மூச்சுவிட்டு இழுங்கள். மீதிப் போதெல்லாம் ஓய்ந்து கட்டைபோல் கிடவுங்கள்" என்பதுதான் லானுவின் போதனை. இதை ஜாக்கிரதையாகக் கற்று நன்ருய்ப் பயின்றவர்களெல்லாம், தண்ணீர் விபத்தைப்பற்றிச் சற்றும் அஞ்ச வேண்டியதில்லை.

ஒரே ஒரு வித்தியாசம்

பிரசித்தமான பிராண்டெல்லோ என்ற இத்தாலிய நூலாசிரியர், ஸிஸிலி கிராமம் ஒன்றில் ஒரு சமயம் நோயுற்ருர். அவருக்கு ஆறுதல் சொல்ல எண்ணிய உள்ளூர் டாக்டர், "ஸார், ஒன்றுக்கும் பயப்படாதீர்கள். எனக்குக்கூடச் சில வருஷங்களுக்கு முன் இந்தமாதிரிதான் அபாயமான நோய் ஏற்பட்டது. நான் முற்றும் குணமாகிப் பிழைத்துவிட்டேன்" என்ருர்.

"அது சரிதான். ஆனால், உங்களுக்கு வாய்த்த அதே டாக்டர் இல்லையே எனக்கு வாய்த்திருப்பவர்?" என்ருர் ஆசிரியர்.

—'செல் ஸாய்', ஜூரிச்.

ஜாதகத் தொல்லை

"எவாளை மணக்க எனக்கு ரொம்பவும் ஆசைதான். ஜாதகத் தொல்லைதான் தடையாயிருக்கிறது."

"ஏன், உன் அப்பா அம்மாவோடு நீங்களும் வசிக்கலாமே."

"அது சரிதான். ஆனல் அவர்களே தங்கள் அப்பா, அம்மாமார்களோடு வசிக்கிருர்களே; எங்களுக்கு எப்படி அங்கே இடம் கிடைக்கும்?"

—'கூரியர்', பேர்லின்.

ரமணர்

வாழ்வும் வாக்கும்

ஆத்மஞானத்துக்கு முன் மற்ற ஞானமெல்லாம் அற்பம் என்பதைத் தம் வாழ்க்கையால் நிரூபித்துக் காட்டியவர் மகரிஷி ரமணர். இவர் வாக்கு ஸ்வாநுபவம் பொதிந்தது.

காவியகண்டர் வருகை: விளக்கு நின்று எரியுமானால் தன் அருகே உள்ள இருளையெல்லாம் போக்கிவிடும். திருச்சுழியலிலிருந்து அண்ணாமலையப்பனால் அழைக்கப் பெற்று அந்தத் தலத்தையே தம்முடைய ஞான ராஜதானியாகக் கொண்ட இளங்குமரராகிய துறவியை மக்கள் அடிக்கடி வந்து வணங்கித் தரிசித்துச் சென்றார்கள். இந்தப் பெருமானுடைய சந்நிதியிலே ஏதோ ஒரு கவர்ச்சி ஏற்படுவதாகப் பலர் உணர்ந்தார்கள். காந்தமானது அசைவற்றுக் கிடந்தாலும் அது தன்னிடத்தே உள்ள காந்த சக்தியால் தன் அருகில் வரும் இரும்பை இயக்குவது போல, இந்த ஞானச் செல்வரை அணுகி நிற்போர் அனைவருடைய உள்ளமும் நெகிழ்ந்தன. கனல் தன்னைச் சுற்றிலும் வெப்பத்தைப் பரவச் செய்யும்; விளக்கு ஒளியைப் பரவச் செய்யும்; மலர் மணத்தைப் பரவச் செய்யும். இவை இந்திரியங்களைச் சார்ந்து உணர்ச்சியை உண்டாக்குவன. இந்த இளம்பூரணராகிய துறவரசரிடம் தவக்கனல் இருந்தது. அது உடம்பிலே உறைக்கும் கனல் அல்ல; உள்ளத்திலே உறைப்பது. அதனருகே சென்றவர்களுக்கு அந்தக் கனலின் வெப்பம் உள்ளத்தை நெகிழ வைத்தது. காயாக இருப்பது வெப்பத்தால் முதிர்ந்து நெகிழ்ந்து கனியாகிறது. இந்தப் பெரியாரை அணுகிய சிலர் வேறிடங்களில் காணாத உணர்ச்சியை இங்கே பெற்றனர். அறிவின் கூர்மையாலும் விரிவினாலும் எல்லாப் பொருளையும் நுணுகி ஆராயும் அறிஞர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுடைய அறிவுக்கு எட்டாத ஒன்று அருளால் கிடைக்கும். பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்த இளைஞருடைய உலகியலறிவும் நூலறிவும் ஓரளவுக்குள்ளேதான் அமையும். ஆனால் இவருக்கு அறிவுக்கு அப்பாற்பட்டதும், அறிவுக்கு எல்லை காணும் நிலையில் இருப்பதுமாகிய அநுபவம் கிடைத்துவிட்டது. அதனால் அறிவாளிகளுக்கு இவரைக் கண்டால் வியப்பு உண்டாயிற்று.

கணபதி சாஸ்திரிகள் என்ற பெரிய வடமொழிப் பண்டிதர் ஒருவர் இருந்தார். அவர் ஸம்ஸ்கிருதத்தில் மகா கவிஞர். அதோடு ஞானசாஸ்திரங்களில் நல்ல ஆராய்ச்சியுடையவர். காவிய கண்ட கணபதி சாஸ்திரிகள் என்று தமிழுலகம் அவரைக்

கொண்டாடியது. சிறந்த உபாஸகர் அவர். பாரத நாட்டில் வளரும் சமயங்கள் இம்மையிலேயே இன்ப அநுபவத்தைத் தருபவை. ஆகவே, சமயநெறியில் புகுந்தவர்கள் தாம் பயன்பெற்றதையும் பெறுததையும் தாமே உணர்ந்து கொள்ளலாம். தம்மைத் தாமே சோதித்துக்கொள்ளலாம். பசியுடையவன் உணவை உண்டால் அந்தப் பசி தணிந்து ஒருவகையான மதமதப்பு உண்டாகிறது. ஞானவேட்கை யுடையவர்களும் தக்க சாதனங்களைக் கொண்டு சாத்தியமாகிற நிலையை அடையும் பொழுது அவர்களுக்கும் ஒருவகையான மதமதப்பு உண்டாகும். ஆனல் அது எளிதிலே கிடைப்பதல்ல.

கணபதி சாஸ்திரிகள் காவியங்களிலே திளைந்து ஆடினர். சாஸ்திரங்களின் ஆழத்தைக் கண்டார். தலயாத்திரை செய்தார். உபாஸனு பலத்தால் அவருக்குச் சில நலங்கள் கிடைத்தன. அந்த நலங்களே பெரியவை என்று ஏமாந்து போகிறவர்கள் பலர். நல்ல கனி பழுக்கும் மரத்தை அடைந்து இலையைப் பறித்து வருவதும், மலரை மாத்திரம் பறித்து வருவதும், காயாக இருக்கும்போதே பறித்து வருவதும் சிறப்பான காரியங்கள் அல்ல. இலையைக் கடந்து அரும்பையும் மலரையும் காயையும் பார்த்துக் கனி கனியும் பருவம் வரையிலே காத்திருந்து கைக்கொள்பவரே நல்ல பயன் பெற்றவராவார். காவியகண்ட கணபதி சாஸ்திரியார் உபாஸனை யின் விசேஷத்தாலே அறிவு கைவரப் பெற்ருர்; கவித்துவம் பெற்ருர்; நன்ருகப் பேசும் ஆற்றலை அடைந்தார்; ஒருவாறு ஆசையை அடக்கும் முயற்சியிலும் தலைப்பட்டார். மற்றவர்களுக்கெல்லாம் கிடைப்பதற்கரியனவாகிய புலமையும் கவித்துவமும் அவருக்கு எளியனவாயின. அவற்ருேடு அவர் திருப்தியுறவில்லை. "கற்பனவும் இனி அமையும்" என்று மாணிக்கவாசகர் கல்விக்கும் விடை கொடுத்து விடுகிருர். கணபதி சாஸ்திரிகளுக்கு மற்ற ஆசைகளெல்லாம் அடங்கிவர, வேறு ஒரு பேராசை பெருகியது. உண்மையான ஞானுனந்தத்தைப் பெற வேண்டும் என்ற ஆசைதான் அது.

தலங்கள்தோறும் திரிந்தார் சாஸ்திரிகள். திருவண்ணுமலையில் மலையைச் சுற்றிப் பிரதக்ஷிணம் செய்யும் சாலையில், நிருதிலிங்க மண்டபம் என்ற இடம் ஒன்று இருக்கிறது. அங்கே கணபதி சாஸ்திரிகள் தனியே அமர்ந்து தியானம் செய்துகொண் டிருந்தார்.

இறைவன் திருவருளால் நம்முடைய முயற்சியின்றியே, நாம் எதிர்பாராமலே சில காரியங்கள் நடைபெறுகின்றன. அத்தகைய காரியங்கள் இன்ன காரணத்தால் உண்டானவை என்று புலப்படுவதில்லை. ஆனல் நடைபெறுகின்றன. அவற்றைப்பற்றிக் கேட்கிறவர்கள் நம்பமுடியாதபடி கூட அவை தோன்றும். ஆனல் அதை அநுபவித்தவர்களோ, அதன் விளைவை உணர்ந்தவர்களாதலின் பிறருக்கு அதைக் காரண காரிய அறிவாற்றலால் விளக்கவேண்டும் என்பதுபற்றி அதிகக் கவலை கொள்வதில்லை. அறிவுலகத்துக்கு அப்பால் உணர்வுலகத்தில் உலவுபவர்களுக்கு அருள் மின்சாரம் பாயும்போது அத்தகைய அதிர்ச்சிகள்-இன்ப

அதிர்ச்சிகள் உண்டாவது இயல்பு தான்.

கணபதி சாஸ்திரிகள் தியானம் செய்து கொண்டிருக்கும்போது, "பகவான் அழைக்கிறார்" என்று அசரீரியாக ஓரொலி கேட்டது. அவருடைய உண்முக உலாத்தலினிடையே அகத்தே உள்ள செவியிலே கேட்ட ஒலி போலும். அவர் விழித்தார். அந்த ஒலியை அவர் வெறும் கற்பனை என்று கொள்ளவில்லை; பகற் கனவென்று எண்ணவில்லை. உண்மையாகவே ஆண்டவன் தமக்கு அருள் செய்யும் பொருட்டு விடுத்த அழைப்பென்றே கருதினார். உடனே புறப்பட்டார்.

அப்போது இந்த ஞானப்பிரான் மலையின்மீது உள்ள விருபாக்ஷி குகையில் இருந்தார். கணபதி சாஸ்திரிகள் மலையேறி அந்தக் குகைக்குச் சென்று இந்தத் துறவரசை வணங்கிக் கண்ணீரும் கம்பலையுமாகி நின்றார். இந்தப் பெருமானுடைய சந்நிதானத்தில் ஏதோ ஓர் அமைதி மின்சாரத்தைப் போலத் தாக்குதலை உணர்ந்தார். "நான் கற்றேன்; பல பல நூல்களைக் கற்றேன். வேதாந்த நூல்களையெல்லாம் அறிந்தேன். மந்திர ஜபங்கள் பல செய்தேன். ஆயினும் மனம் அடங்க வழியின்றித் தவிக்கிறேன்" என்று கணபதி சாஸ்திரிகள் புலம்பினார். இந்தத் தவமா முனிவர்பிரான் அவரைப் பார்த்துப் புன்னகை பூத்தார்.

(வாழ்வு)

உபாஸனையின் சிறப்பு: பெருந்தன்மையை விரும்புகிறவன் எல்லாப் பலன்களுக்கும் கர்மங்களுக்கும் இடமான தன் ஆத்மரூபத்தை அவசியம் அறியவேண்டும். அப்படி விருப்பமுள்ளவனுக்கு உபாசனையின்றிச் சாஸ்திர ஆராய்ச்சி ஒன்றினால் மட்டும் சித்தி உண்டாகாது. (வாக்கு)

ஐயம் இல்லை: 'பல குறைகள் நிரம்பிய இல்வாழ்வில் நான் துறவு பூணவில்லையே? எனக்கு ஆத்மஞானம் கைகூடுமா?' என்ற சந்தேகமே வேண்டாம். எத்தகையவனும் முயற்சி செய்தால் ஆத்ம ஞானத்தைப் பெற முடியும். ஆத்மானந்தம் எல்லோருக்கும் உரிய பொருள். அதை அடையாததற்குக் காரணம் அதன் குறை அல்ல. சிரத்தையோடு நாடினால் அதை யாரும் உணரலாம். இல்வாழ்வின் தொல்லைக்குக் காரணம் வெளியில் இல்லை. உன்னுள்ளேயே இருக்கிறது. அதுதான் அகந்தை. எல்லாத் துன்பங்களுக்கும் அகந்தையே மூல காரணம். மேலும் மேலும் துன்பம் பெருகி வருவதற்கும் அதுவே காரணம். ஆனால் அந்தத் துன்பங்களுக்கு வேறு யாரையேனும், ஏதாவது ஒரு நிகழ்ச்சியையேனும் காரணமாக்க் கூறுவது தவறு. மற்றவற்றினாலே துன்பம் வருகிறதென்றால் இன்பமும் வெளியிலிருந்துதான் வர வேண்டும். அப்படி ஏதேனும் ஒன்றை வெளியிலிருந்து அடைந்தால் அது நீடித்திராது.

அகந்தையை இல்லையாக்கி எரித்தால் நீ பந்தத்திலிருந்து விடுபடுவாய். அதை ஏற்றுக்கொண்டால், அது உனக்குத் தளைகளை ஏற்படுத்தி அவைகளை மீறும் வீண் முயற்சிகளை உண்டாக்கும்.

(வாக்கு)

ஈரான் சூத்திரதாரி

★

ஈரானுக்கும் பிரிட்டனுக்கும் ஏற்பட்டிருக்கும் எண்ணெய்த் தகராறில் ஈரான் மந்திரி மொஸாடெக்தான் மிகவும் பிடிவாதமாயிருக்கிறார் என்று வெளியிலே செய்திகள் வருகின்றன. ஆனால், அவரையும் ஆட்டிவைக்கும் ஒரு சூத்திரதாரி இருக்கிறாராம். அவரைப்பற்றியது இந்த வரலாறு.

இந்த வருஷம் மிகவும் பொல்லாதது. எகிப்து மன்னர் முடிதுறந்து நாட்டை விட்டு வெளியேறினார். ஈரான் மன்னர் தம் அரண்மனையை விட்டு வெளியேற முடியாத நிலையில் இருக்கிறார். அவர் சகோதரி நாடு கடத்தப்பட்டிருக்கிறாள். அங்கே முஸ்லிம் மக்களிடையே செல்வாக்குப் பெற்ற ஓர் ஆசாமி தோன்றியிருக்கிறார். அவர் பெயர் சையத் அயாத்துல்லா அபோல் கசீம் கஷானி.

சில வாரங்களுக்கு முன்பு கஷானி ஈரானியப் பார்லிமெண்டின் தலைவரானார். இதுவரை அவர் தலைமறைவாக இருந்து வந்தார். பொம்மலாட்டத்தில் சூத்திரதாரி போல ஈரான் அரசியல் அரங்கில் இருந்து வந்தார். ஈரான், ஈராக், பாகிஸ்தான், ஸிரியா ஆகிய முஸ்லிம் நாடுகள் ஒவ்வொன்றிலும் கஷானிக்கு மதிப்பும் கௌரவமும் உண்டு. 1949-இல் ஈரான் மன்னரான ஷாவைக் கொல்லச் சதி நடந்தது. அப்போது கஷானியின் சிஷ்யர்கள் சிலர்மேல் அதிகாரிகள் சந்தேகப்பட்டார்கள். உடனே கஷானியை நாடு கடத்திவிட்டார்கள். அவர் ஈராக்கில் தங்கியிருந்தார். அப்படியும் ஈரானில் அவ

கஷானி - மொஸாடெக் சம்பாஷணை

ஆதாரம்: எவ்வரிபடீஸ் வீக்லி (ஆங்கிலம்), லண்டன்.

ருடைய செல்வாக்குக் குறைய வில்லே.

சமீபத்தில் ஈரானில் தேர்தல் நடந்தது. அப்போது அவர் நாட்டில் இல்லே. ஆயினும் பார்லிமெண்டுக்கு மக்கள் அவரைத் தங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தார்கள். 1950 - இல் அவர் டெஹ்ரானுக்குத் திரும்பி வந்தார். 'பதயான் இஸ்லாம்' (இஸ்லாம் போர் வீரர்) என்ற தீவிரக் கட்சியின் தலேவரான கஷானி, மிதவாதக் கொள்கையைக் கடைப்பிடித்த பிரதமர் ரஸ்மாராவைக் கடுமையாக எதிர்த்தார். கடைசியில் சில மாதங்களுக்கு முன்பு பிரதமர் ரஸ்மாரா கொலேயுண்டார். அதுவரை ஈரான் எண்ணெய்ப் பிரச்னே சம்பந்தமாக அதிகச் சிக்கல் இல்லே. ஆனல் அதற்குப் பிறகுதான் நிலேமை திடீரென்று மாறிவிட்டது.

மோஸாடெக் ஈரான் பிரதமர் பதவி ஏற்ருர். எண்ணெய்ப் பிரச்னேயில் கடுமையாகப் பிரிட்டனுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். துணிச்சலான காரியங்களேச் செய்யவும் மோஸாடெக் சிறிதும் தயங்கவில்லே. ஆனல் மூன்று மாதங்களுக்கு முன்பு அவர் பதவியிலிருந்து ராஜீநாமா செய்ய வேண்டியதாயிற்று. அவருக்குப் பதிலாக, கவாம் என்பவர் பிரதம மந்திரியானர். டெஹ்ரான் நகர வீதிகளில், "ரஸாகானின் மகன் (ஈரான் மன்னர் ஷா) ஒழிக!", "பிரதம மந்திரி கவாம் ஒழிக" என்று ஜனங்கள் ஆவேசத்தோடு கூவி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். கடைசியில் கவாம் நான்கு தினங்களுக்குப் பின் தம் பதவியை ராஜீநாமா செய்தார். மீண்டும் மோஸாடெக் பிரதமரானர். கஷானி செய்த முன்னேற்பாடான திட்டங்களே இவைகளுக்கெல்லாம் காரணம் என்கிருர்கள்.

கவாம் ராஜீநாமா செய்தவுடனே கஷானி ரேடியோவில் பேசினர். "கவாம் மந்திரி சபையை அமைக்க விடமாட்டேன் என்று நேற்றிரவு நான் சொன்னது இன்று உண்மையாகிவிட்டது" என்று பெருமிதத்துடன் நிதானமாகப் பேசினர்.

கவாம் இன்று அரசியல் அஞ்ஞாத வாசம் செய்கிருர். என்று தம் உயிர்போகுமோ என்று பயந்துகொண்டிருக்கிருர்.

கஷானி அப்படிப் பலிஷ்டர் என்று சொல்வதற்கில்லே. ஒட்டி உலர்ந்துதான் இருக்கிருர். மோவாய்க்கட்டைக்குக் கீழ்த் தாடி வளர்த்திருக்கிருர். தலேமயிரும் தாடியும் நரை கண்டிருக்கின்றன. பெரிய கருவிழிகள்.

மிகவும் சாதாரண வார்த்தைகளேக்கூட அறவுரைகளாகத் தோன்றும்படி பேசுவதில் கஷானி வல்லவர். இதனலேயே அவர் பிரபல அரசியல்வாதி யாகிவிட்டார். "நிலேயான பொருளாதாரமும் தனி மனிதப் பாதுகாப்பும் ஒவ்வொருவருக்கும் அவசியமானவை" என்பார். மஜ்லிஸ் கட்சியில் பலர் தங்கள் உயிருக்கும் உடைமைக்கும் பயந்தே அவருக்கு வோட்டளித்தார்கள் என்கிருர்கள். அவர் பேச்சில் பொருள் பொதிந்திருக்கும். எதையும் துணிந்து வெளிப்படையாகச் சொல்லிவிடுவார்.

ஒரு சமயம் பிரிட்டிஷ் சர்க்காரின் தூதுக் கோஷ்டி ஒன்று ஈரானுக்கு வந்தது. அதன் தலேவரான ரிச்சார்டு ஸ்டோக்ஸ்

எண்ணெய்ப் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்கக் கஷானியுடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

சம்பாஷணையின் முடிவில் கஷானி நிதானமாக, "ஈரான் எண்ணெய்த் தொழிலைத் தேசத்துக்குச் சொந்தமாக்கும் கொள்கையில் இம்மியளவு மொஸாடெக் விட்டுக்கொடுத்தாலும், ரஸ்மாரா சென்ற இடத்துக்கு அவரையும் மக்கள் அனுப்பி விடுவார்கள் என்பதை உங்கள் சர்க்காரிடம் சொல்லுங்கள்'' என்றாராம்.

இதை உணர்ந்திருப்பதால் தான் மொஸாடெக் தாம் பிடித்த பிடியை விடாமல் இருக்கிறார்.

கஷானிக்கு எவ்வளவு வயது இருக்கும் என்று யாருக்கும் தெரியாது. ஈரானியச் சட்டப்படி பார்லிமெண்டில் 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் அங்கத்தினராக இருக்கக்கூடாது. எனவே, கஷானிக்கு 67 வயது என்று அதிகார பூர்வமாகச் சொன்னாலும், 75 - இலிருந்து 80-க்குள் இருக்கலாம் என்று சிலர் மதிப்பிடுகிறார்கள். பலவீனமான உடல். சிறிது குளிர் அதிகமானாலும் கழுத்துக்கும் தோளுக்கும் கம்பளியைப் போர்த்துக்கொள்வார். தம் வீட்டு வெளி வராந்தாவில் சாய்ந்து கொண்டு தமக்கென்றே தயாரித்த சிகரெட்டை ஊதிக்கொண்டிருப்பார்.

தம்முடைய முதுமையையும் தள்ளாமையையும்பற்றி அவருக்குச் சிறிதும் கவலை இல்லை. மிகுந்த மனோதிடம் உள்ளவர். தம் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு ஊக்க மூட்டி வழிகாட்டி அதிகாரம் செலுத்த அவருக்கு வேண்டிய தெம்பும் வலிவும் உண்டு.

கஷானி ஆவேசம் நிறைந்தவர்; பிடிவாதமாக இருப்பார். காரணமுண்டோ இல்லையோ அவர் பிரிட்டனைக் கட்டோடு வெறுக்கிறார். மதப் பற்று மிகுந்திருந்தவர் அவர் தந்தை. பல வருஷங்களுக்கு முன்பு பிரிட்டனை எதிர்த்து ஈராக்கில் நடந்த புனிதப் போரில் பங்கெடுத்துக் கொண்டவர் அவர். அப்போது குண்டுபட்டு இறந்துபோனார். தந்தையின் குணங்கள் எல்லாம் கஷானியிடமும் அமைந்திருக்கின்றன.

முஸ்லிம் உலகத்தில் பிரிட்டனுக்குப் பெரிய விரோதியாக இருந்த ஜெருசலம் முஃப்தியுடன் கஷானியும் இரண்டாவது உலக யுத்தத்தில் ஜெர்மனிக்கு உதவி செய்தார். சென்ற இரண்டாம் யுத்தத்தின்போது டெஹ்ரானில் அவரைப் பிரிட்டிஷ் ராணுவம் கைது செய்தது. ஜெர்மன் பாரசூட்டின் உதவியால் தெற்கு ஈரானில் அவர் இறங்கியதும் அங்கே உள்ள மலைவாசிகளிடையே கிளர்ச்சி மூண்டது. கஷானியைக் கைது செய்ததும் அவருடைய கட்சியினர் பெரிய ஆர்ப்பாட்டம் செய்ய முயன்றனர். ஆனால் நகரம் முழுவதும் ராணுவம் காவல் புரிந்து வந்ததால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அப்போது இவ்வளவு செல்வாக்கும் அவருக்கு இல்லை.

எல்லோரையும் மயக்கும் ஒரு மோகன சக்தி கஷானியிடம் இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். எதற்காகப் போரிட வேண்டும், எதனிடம் அன்பு செலுத்த வேண்டும் என்று மக்களின் மனத்தில் பதியும்படி பிரசாரம் செய்கிறார். மொஸாடெக்கைப்

போல வெறும் தேசிய மனப் பான்மை கொண்டிராமல் பரந்த இஸ்லாமியச் சமுதாயத்தை நிறுவுவதையே லட்சியமாகக் கொண்டிருக்கிறார். பழைய மொகல் சாம்ராஜ்யப் பெருமைகளைப்பற்றி எண்ணி மகிழ்கிறார்.

மதம், பொருளாதாரம் இந்தத் துறைகளில் ஈரான் மிகவும் தாழ்ந்த நிலையை அடைந்திருக்கிறது. இன்றைய தீமைகளை அவர் காட்டுவதில்லை; எதிர்கால லட்சிய வாழ்வைக் காட்டுகிறார். "பிரிட்டிஷ் சதிகாரர்கள், பிரிட்டிஷ் ரகசிய ஏஜெண்டுகள் போன்றவர்கள் நாட்டை விட்டுத் தொலைந்தால்தான் சுபிட்சம் ஏற்படும்" என்கிறார். பாமர மக்கள் அவர் சொல்வதை அப்படியே நம்பி அவரைப் பின்பற்றுகிறார்கள்.

கஷானி பெரிய பணக்காரர் அல்ல. ஆனால் அவருக்குத் தேவையான எல்லா வசதிகளும் கிடைக்கின்றன. தனியாகத்தான் வசித்து வருகிறார். மற்றவர்கள் வீண் தொந்தரவு கொடுக்காதிருக்க 24 காவலாளிகள் அவர் வீட்டில் இருக்கிறார்கள். தம்மைப் பார்க்க வருபவர்களிடம் ஈரான் பாஷையிலேயே பேசுகிறார். அருகே உள்ள சிலர் அதை வருபவர்களிடம் மொழிபெயர்த்துச் சொல்கிறார்கள்.

அவர்கள், "பூஜ்யர் இப்படிச் சொல்கிறார்", "பூஜ்யருடைய அபிப்பிராயம் இது" என்று மரியாதை வார்த்தை சேர்த்தே மொழி பெயர்க்கிறார்கள். அவர், "புரட்சி செய்யுங்கள்" என்றால் மக்கள் கிளம்பத் தயாராக இருக்கிறார்கள். "அமைதியாக இருங்கள்" என்றாலும் பொறுமையாக இருக்கத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். நல்லது விளையுமோ, கெட்டது விளையுமோ எதுவும் இந்தச் செல்வாக்கை அவர் பயன்படுத்தும் விதத்தையே பொறுத்திருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும்.

ரஸ்தா எச்சரிக்கை

ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த இண்டியானா மாகாணத்தில் பஸ், கார்களுக்கு நட்டிருந்த ரஸ்தா எச்சரிக்கையில், "பள்ளிக்கூடம்—குழந்தைகளைக் கொல்லாதே" என்று முதல் வரியில் எழுதியிருந்தது. அடுத்த வரியில், "வாத்தியாருக்குக் காத்திரு" என்று எழுதியிருந்தது.

'கூரியர்-ஜர்னல் மகஸீன்'

பூச்செருகும் துவாரம்

விக்டோரியா மகாராணியை மணந்துகொண்ட ராஜகுமாரர் ஆல்பர்ட் முதல்முதலில் பிரிட்டனுக்கு வந்து சேர்ந்ததும், அவருக்கு மகாராணி ஒரு பூச்செண்டு கொடுத்தாள். மிகவும் இங்கிதம் தெரிந்த அவர், அதிலிருந்து ஒரு பூவை எடுத்தார். தம் கோட் காலர் மடிப்பில் ஓர் ஓட்டை போட்டு, அந்தப் பூவை அதில் செருகிக்கொண்டார். இதிலிருந்து எல்லாருமே தங்கள் கோட்டில் பூச் செருகும் துவாரம் போட்டுக்கொள்ளத் தொடங்கிவிட்டார்கள்.

—'ஸ்டெர்லிங் ஸ்பார்க்ஸ்'

ஆங்கிலச் சிறுகதை:

அம்மன் அருள்

ஜான் ஹாம்ஸன்

இதை எழுதியவர் பிரபல நாவலாசிரியர்; இலக்கிய விமர்சகர். 1948 பிப்ரவரியில் இந்தியாவுக்கு வந்திருந்தார். அறிவில் மூளியான சிறுவரைப்பற்றி ஆராய்வதற்காகச் சென்னை சர்க்காரின் அழைப்புக்கிணங்கித் தென்னாட்டுக்கு வந்திருந்தார். இவருடைய நண்பர் மஞ்சேரி எஸ். ஈச்வரன் மூலம் இந்த மொழிபெயர்ப்புக்கு அநுமதி கிடைத்தது. கதையின் காப்பிரைட் ஆசிரியருடையது. இதற்குரிய சம்மானத்தைக் கொண்டு ஆசிரியரின் விருப்பப்படி சில இந்தியக் குழந்தைகளுக்குப் பரிசு வழங்கினோம்.

சென்னையிலிருந்து எல்லன் கொண்டு வந்த பணத்தைக் கண்டு அவர்கள் எல்லாரும் பயந்து போனார்கள். எவ்வளவு பணம்! தாய் நடுங்கினாள். நகர எல்லையில் ஒரு குடிசையில் அவர்கள் வசித்தார்கள். குடிசைக்கு அருகே ஏதாவது நிழலாடினால் போதும்; தாயின் மருண்ட கண்கள் தரையை நோக்கிக் கவிழ்ந்து விடும். எவனோ போலீஸ்காரன்தான் வந்து கோபத்தோடு உறுமும் குரலில் தன் மகனை ஜெயிலுக்குக் கூப்பிடப் போகிறான் என்று அவள் எண்ணிவிடுவாள்.

கடன்காரனுக்குப் பணம் கொடுத்துத் தீர்த்தாயிற்று. மீதிப் பணம் வெகு சீக்கிரத்தில் கரைந்து விடும் என்று ராக்கம்மா அறிவாள். அப்புறம் என்ன செய்வது? எல்லன் லட்சியம் செய்யவில்லை. பணமெல்லாம் போனால், திரும்பவும் சென்னைக்குப் போய் இன்னும் பணம் சம்பாதித்து விடுகிறான். ஆனால், இரண்டாவது தடவையும் தெய்வம் இவ்வளவு பணம் கொடுக்கும் என்று ராக்கம்மா நம்பவில்லை. வெள்ளைக்காரரெல்லாந்தான் இந்தியாவை விட்டுப் போய்விடுகிறார்களே. இந்த நாளில் குளக்கரை வழியாகக் கடை வீதிக்குப் போனால், நகரத்தில் ஒரே ஒரு ‘வெள்ளைத் தோல்’ ஆசாமியைக் கூடக் காணவில்லையே! அவள் புருஷனும் வீரனும், ‘ஆமாம்; அது உண்மை’ என்று தலையாட்டினார்கள்.

எல்லனோ சிரித்தான். சென்னையில் நூற்றுக்கணக்கான வெள்ளைக்காரர் இருக்கிறார்கள். பருத்துச் சிவந்த வெள்ளைக்காரிகள் பலர் ஸைக்கிளிலே போவதைக் கூடக் காணலாம். இதைக் கேட்டு அவமானம் தாளாமல், “சூ!” என்று மகனைத் தாய் வாயடக்கினாள். மகன் தன் பிரயாண அநுபவங்களிலிருந்து என்ன கதைகளைச் சேகரித்து வந்தாலும்

அவளுக்குக் கவலை இல்லை. சென்னை மிகப் பொல்லாத ஊர் என்று அவளுக்குத் தோன்றியது. அந்த அதிசயமான ஊருக்கு வீரனும் போகப் புறப்பட்டு விடுவானோ என்றுதான் அவள் பயந்தாள். எத்தனை பையன்களை அந்தப் பெரிய பட்டணம் விழுங்கியிருக்கிறது! போனவனெல்லாம் திரும்பவேயில்லை. இது அவளுக்குத் தெரியாதா?

எல்லன் வாட்ட சாட்டமான வாலிபன். கூடிய சீக்கிரம் அவனுக்குக் கலியாணம் நடக்கப் போகிறது. அவனுடைய சின்னஞ் சிறு மனைவி ரத்தினம் வந்துவிட்டால், அப்புறம் அவன் அங்கே இங்கே ஓட மாட்டான். ஆனால் சின்ன மகன் இளம் பிள்ளை. அவனுடைய பழைய முதலாளி அவனைக் கசக்கிப் பிழிந்துவிட்டார். அவனுக்குச் சோறே பிடிக்காமல் போய்விட்டது.

அண்ணன் சொல்லும் கதைகளையெல்லாம் ஆவலோடு அவன் கேட்கிறான். சில கதைகளை அவன் உருவும் போட்டுவிட்டான். எல்லன் நல்ல குஷியான ஆசாமி. சென்னையிலே தான் கண்டதையும் செய்ததையும் எல்லாம்பற்றிப் பெருமை அடித்துக்கொள்வான். ஆயினும் அவன் சொல்லும் எல்லாக் கதைகளையும் வீட்டார் நம்புவதில்லை. சென்னையில் உள்ள விசித்திரமான வெள்ளைக் காரரைப்பற்றி அவன் சொல்லும் கதைகளை யாருமே நம்ப முடியாது. கை நிறையக் காசுகளை எடுத்துக் குழந்தைகளுக்கு முன்னே வீசி எறிகிறவர்களும் இந்தக் காலத்தில் உண்டோ? ரூபாய் ரூபாயாக எடுத்துப் பிச்சைக்காரர்களின் கப்பறையிலே போடுகிறவரும் உண்டோ?

வீரன் மட்டும் தன் அண்ணனின் கதைகளை நம்பினான். ஒரு ரிக்ஷாக்காரனுக்குச் சில பத்து ரூபாய் நோட்டுகளை இனாம் கொடுத்த ஒரு விநோத வெள்ளைக் காரனைப்பற்றிய கதையைக்கூட அவன் நம்பினான்.

ஒரு ஜட்கா வாங்கியதில் அநேகமாக எல்லாப் பணமும் செலவழிந்துவிட்டது. அதுதான் எவ்வளவு ஜோரான வண்டி! புத்தம் புதிதாக வர்ணம் பூசி, கூண்டின் இரண்டு பக்கமும் பூக் கோலம் போட்டிருக்கிறது. அந்தச் சின்னஞ் சிறு குதிரை நல்ல மிடுக்காக இருக்கிறது. வீரனுக்கு அதைக் கண்டு மிகவும் பெருமை. வண்டியோட்ட அவனை அண்ணன் விட மாட்டான். ஆனால் போது விடியு முன் குதிரையை ஓட்டிச் சென்று புல் மேயவிட்டுத் தண்ணீர் காட்டிக்கொண்டு வருகிறவன் வீரன் தான். அதிலேயே அவனுக்குப் பரமதிருப்தி. வண்டியைத் துடைத்துப் பளபள என்று சுத்தமாக வைத்திருப்பதும் வீரனுடைய வேலையே. அவன் ஒவ்வொரு நாளும் அண்ணனுக்கு உணவு எடுத்துக்கொண்டு ரெயில்வே ஸ்டேஷனுக்குச் செல்வான். அடுத்தபடி விசேஷ ஸம்பவம் குடிசைக்கு எல்லன் மனைவி வந்து சேர்ந்ததுதான்.

ஆனால், மருமகள் வந்து ராக்கம்மாவை உட்கார்த்தி வைத்துவிட்டு வீட்டு வேலையையெல்லாம் செய்யத் தொடங்கிச் சில நாள் ஆகவில்லை. அதற்குள்ளே அவளுடைய மூத்த மகன் இறந்து போனான். செழிப்போடிருந்த குடிசையில் துயரம் நிறைந்தது. சென்னையிலிருந்து எல்லன்

கொண்டு வந்த பணத்தில் கடைசியாக மிஞ்சியிருந்த சில காசுகளும் அவனுடைய சவச் சடங்கிலே செலவழிந்துவிட்டன.

* * *

ஸ்டேஷன் பிளாட்பாரத்தை விட்டு வாசலில் வந்த இங்கிலீஷ்காரர், கையை நெற்றியில் வைத்து வெயிலை மறைத்துக்கொண்டு, சற்று நேரம் தியங்கி நின்றார். இங்கே என்னவெல்லாம் கிடைக்கும் என்பதை ஏற்கனவே அவர் விசாரித்து அறிந்திருந்தார். தின்னலாம்; தூங்கலாம்; இஷ்டப்பட்டால் ஸ்டேஷனிலேயே சாப்பிடலாம். இங்கே ஒரு கிளப்பும்தான் இருக்கிறது. ஆனால், இந்தியாவில் உள்ள கிளப்புகளையெல்லாம் பார்த்த பிறகு, கிளப் என்றாலே அவருக்குப் பிடிக்கவில்லை. அவரைச் சுற்றிலும் அரை வட்ட வளையமாகப் பல ஜட்கா வண்டிக்காரர்கள் சூழ்ந்துகொண்டார்கள். அவர்களுக்குள்ளே எலும்புந் தோலுமாயிருந்த ஒரு வாலிபனைத்தான் அவருக்குப் பிடித்தது. அவன் மங்கிய நீலவர்ண ஜிப்பா அணிந்திருந்தான். சின்னஞ் சிறு கோடித் துணி ஒன்றை இடுப்பில் அணிந்து, மற்றொரு கோடித் துணியைப் பெரிய முண்டாசாகத் தலையில் கட்டியிருந்தான். பையனோடு அவர் பேசினார். பல்லைக் காட்டியபடி வார்த்தைகளை மளமளவென்று கொட்டி அவன் பதில் அளித்தான். இங்கிலீஷ்காரர் தம் தோளைக் குலுக்கினார். என்ன விசித்திரமான இடம் இது! இந்தியர்களிடம் இது எவ்வளவோ பிரசித்தமா யிருக்கிறது; இதைப்பற்றி அவர்கள் பெரிதும் பெருமையும் அடித்துக்கொள்கிறார்கள். ஆனால், இங்கே வழிகாட்டிகள் இல்லையே! வேண்டாத இடத்தில் ஏராளமான வழிகாட்டிகள் வந்து நின்றார்கள். இன்றோ இங்கே ஒரே ஒருவனைக்கூடக் காணவில்லை. போனால் போகிறது. தமக்கு விருப்பமான இடத்துக்கு இந்த ஜட்காப் பையன் இட்டுச் செல்கிறான். இதுவோ ஆயிரக்கணக்கான பக்தர்கள் வரும் க்ஷேத்திரம். இங்கே உள்ள சிற்பங்கள் அற்புதமானவை. இங்கிருக்கும் ஆயிரக் கால் மண்டபத்தைப் பார்க்க இங்கிலீஷ் யாத்திரிகர்கள் சிலரும் வந்திருக்கிறார்கள்.

வண்டிப் படியில் கால் வைத்து, வண்டியில் ஏறினார் இங்கிலீஷ்காரர். கம்பியை எடுத்து மாட்டினான் வண்டிக்காரன். குதிரை தின்றுகொண்டிருந்த புல்லை எடுத்துக் கச்சிதமாக வண்டிக்குக் கீழே தொங்கிய சாக்கில் தள்ளினான். வண்டி சுத்தமாக இருந்தது. இங்கிலீஷ்காரருக்குத் திருப்திதான். குதிரை மெலிந்திருந்தாலும் வாலிப மிடுக்குடன் இருந்தது. தலையில் செருகிய குஞ்சலக் கொண்டையைக் கம்பீரமாய் அசைத்து உறுமிக்கொண்டு நாலு கால் பாய்ச்சலில் அது கிளம்பியது.

பையன் திரும்பித் தன் சவாரியைப் பார்த்து ஒய்யாரமாய்ப் புன் சிரிப்புச் சிரித்தான். எத்தனையோ வார காலமாகத் தினந்தோறும் ஸ்டேஷனுக்கு அவன் வந்துகொண்டிருக்கிறான். இதுவரைக்கும் ஒரு வெள்ளைக்காரச் சவாரி அவனுக்குக் கிடைத்ததேயில்லை. மீனாட்சி அம்மனை வேண்டிக்கொண்டு அவன் காணிக்கை செலுத்தினான். அம்மன் இப்

போது அருள் கூர்ந்து, இந்தப் பணக்கார வெள்ளைக்காரரை அவனிடம் அனுப்பி இருக்கிறாள். இவர்களைப்பற்றித்தான் அவனுடைய அண்ணன் எவ்வளவோ சொல்லியிருக்கிறானே. அவன் களிப்பால் பூரித்தான்.

இங்கிலீஷ்காரர் புன்சிரிப்புப் பூத்தார். அந்தப் பையனிடம் ஏதோ வர்ணிக்க முடியாத ஒரு வசியம் இருந்தது. அது அவர் மனத்தைக் கவர்ந்தது. குதிரை நாலு கால் பாய்ச்சலில் பறந்தது. இரும்புப் பட்டம் அடித்த வண்டிச் சக்கரங்கள் கட கடா குடுகுடு என்று கப்பி ரஸ்தாவில் துள்ளிக் குதித்துக்கொண்டு ஓடின. கொஞ்ச நேரம் சென்றதும் சிறிது தூரத்தில் இரண்டு கோபுரங்கள் நின்றதை இங்கிலீஷ்காரர் கண்டார். திருப்தியோடு அவர் கனைத்துக்கொண்டார். சிவ - பார்வதிகள் அமர்ந்துள்ள மகத்தான இந்த ஆலயத்தின் பிரசித்தமான ஒன்பது வாசல்களைச் சேர்ந்தவையே இந்த இரண்டும் என்று அவர் ஊகித்துவிட்டார்.

வீதிகள் மிகவும் குறுகலாயிருந்தன. கும்பல் கும்பலாக ஜனங்கள் நடமாடிக்கொண்டிருந்தார்கள். ஊருக்குள்ளே வந்தாயிற்று. தாம் இவ்வளவு தூரம் தெற்கே வந்ததுபற்றி இங்கிலீஷ்காரருக்குச் சந்தோஷம் உண்டாயிற்று. இதுவரைக்கும் தம் பிரயாணத்தில் அடையாத ஒரு புதிய அநுபவம் இங்கே தமக்குக் காத்திருப்பதாக அவருக்குத் தோன்றியது.

கோயிலின் வெளி மதிலை அடைந்தார்கள். வண்டியின் பித்தளைக் கம்பியைப் பையன் கழற்றிவிட்டான். இங்கிலீஷ்காரர் கீழே இறங்கிச் சுற்றுமுற்றும் பார்த்தார். பையன் இதற்குள் குதிரையை அவிழ்த்து, கோயில் சுவர் மூலைகளில் கட்டியிருந்த மற்றக் குதிரைகளுக்கு நடுவே கட்டினான். எத்தனை விதமான ஜனங்கள் இந்தக் கூட்டத்தில் இருக்கிறார்கள்! இந்தியாவே திரண்டு வந்துவிட்டது போல்தோன்றுகிறதே! வடக்கே வெகு தூரத்தில் உள்ள வங்காளி உடை தரித்தவர்கள்கூட இங்கே தென்படுகிறார்கள். மலைக்குறவர், பக்தர், பரதேசிகள் இப்படிப் பலர் வந்து இங்கே மொய்த்திருக்கிறார்கள்.

இனி என்ன செய்வது என்று யோசித்தார் இங்கிலீஷ்காரர். அவருக்குப் பக்கத்திலே நின்றான் வண்டிக்காரப் பையன். ஆசாமி தம் நெற்றி வியர்வையைத் துடைத்துக்கொண்டார். தம் விருப்பத்தைப் பையன் உணர்ந்துகொண்டு பொறுமையோடு மௌனமாய்க் காத்திருந்து, தமக்கு அவசியமானபோது உதவுவான் என்று அறிந்து திருப்தியுற்றார். குதிரை புல்லை மெல்லத் தொடங்கிவிட்டது.

கோயிலுக்கு முன்புறம் உள்ள ரஸ்தாவில் சற்று எட்டிப் போய் நின்றுகொண்டு, கோபுரத்தை ஆசாமி வெறித்துப் பார்த்தார். அதன் ஒவ்வோர் அங்குலத்திலும் சிற்பங்கள் செறிந்து, கண்ணைப் பறிக்கும் வர்ணங்களோடு பிரகாசித்தன. சமீபத்தில் நடந்த உற்சவத்துக்காக வர்ணந்தீட்டியிருப்பார்களோ என்னவோ? செல்வம் கொழிக்கும் கோயில் என்பதில் சந்தேகமில்லை என்று எண்ணினார். இந்த மாதிரி வர்ணம் தீட்டிய எத்தனையோ கோயில்களை அவர் கண்டிருக்கிறார். ஆனால்

இதனோடு ஒப்பிடும்போது அவையெல்லாம் சின்னக் கோயில்கள். இது பிரம்மாண்டமானது. சமுத்திரம் போல் பொங்கும் ஜனக்கும்பலைப் பார்த்தார். வெயிலும் நிழலும் பல வர்ணங்களும் கலந்த அற்புதக் காட்சியை அவர் கவனித்தார். வீதிப் புழுதியிலே அங்கப் பிரதட்சிணம் செய்து கொண்டு தம்மை நோக்கி வரும் பரதேசி ஒருவனைக் கண்டார். இது இங்கே சர்வ சகஜமான காட்சிபோல் இருக்கிறது. அதனால்தான் இதை யாரும் லட்சியம் செய்யவில்லை. கந்தலுடுத்துச் சங்கிலிகளைக் கட்டிக்கொண்டு கப்பறையேந்திக் கோலூன்றி வந்தார்கள் பல பிச்சைக்காரர்கள்.

கோயில் வாசலைக் கடந்து உள்ளே போனார் இங்கிலீஷ்காரர். அவரைப் பின் தொடர்ந்தான் வண்டிக்காரப் பையன். உள்ளே கடைகள் இருந்தன; வியாபாரிகள் இருந்தார்கள். இதுவரையில் வந்தது சரி; இனி ஜோட்டைக் கழற்றிவிட வேண்டும் என்று ஆசாமி உணர்ந்துகொண்டார். ஏனென்றால், இங்கே எல்லாரும் வெறுங் காலோடு நடப்பதைக் கண்டார். ஜோட்டை அவர் கழற்றியதும், பையன் அதைத் தூக்கிக்கொண்டான். பித்தளை பாட்ஜ் ஒன்றை மார்பிலே அணிந்துகொண்டு, அரை வேஷ்டி தரித்த நெட்டையான ஓர் ஆளை இங்கே அவர்கள் கண்டார்கள்.

அவர் இவர்களுக்கு வழிகாட்டிக்கொண்டு பெரிய சதுக்கத்துக்கு அழைத்துச் சென்றார். கல் பாவிக் குளிர்ந்திருந்த நீண்ட பிராகாரங்களில் சுற்றிவிட்டு வந்த இங்கிலீஷ்காரருக்குச் சதுக்கத்தின் சூடு தாங்கவில்லை. அங்கே எங்கும் துளிக்கூட நிழலைக் காணவில்லை. இந்தக் கோயிலைப் பார்ப்பதற்கென்றே வந்திருப்பவர் இங்கிலீஷ்காரர். என்னதான் வெயிலடித்தாலும் சரி, கோவிலைப் பார்த்தே தீர்வது என்று அவர் உறுதி பூண்டார். சதுக்கத்துக்குக் குறுக்கே சிறு நிழல் கோடு ஒன்று ஓடியது. அதில் போய்ச் சற்று நின்றுகாலுக்குச் சிரம பரிகாரம் செய்துகொண்டார். கோயிலின் இந்தப் பகுதியில் யாருமே இல்லை. இங்கே சிறிது ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும்போல் இருந்தது அவருக்கு. ஆனால், பின்னால் பையனும் முன்னால் வழிகாட்டியும் பாராக்காரர்களைப் போல் நிற்கிறார்களே, என்ன செய்வது?

முற்றத்துக்கு முற்றம் அவர்கள் நடந்தார்கள். வழிகாட்டிக்குச் சரியாக இங்கிலீஷ் தெரியவில்லை. கிளிப் பிள்ளை போல் என்னவோ உருப்போட்ட நீண்ட பாடங்களைக் கட கட என்று இங்கிலீஷ்காரருக்கு அவன் ஒப்பித்துக் கொண்டிருந்தான். பொற்றாமரைக் குளம், களஞ்சியம், லிங்கம், சுப்பிரமணியர் சந்நிதி, கணேசர் சந்நிதி, ஆயிரக்கால் மண்டபம், சிங்காரச் சிற்பங்கள் இவைகளையெல்லாம் வழிகாட்டி வர்ணித்தான். "இவர்கள் லீலை புரிகிறார்கள்" என்றான். "ஆம்; லீலைதான் புரிகிறார்கள்" என்று தலையசைத்தார் இங்கிலீஷ்காரர். கம்பீரமான இந்த ஸ்தம்பங்கள் நிறையச் செறிந்திருக்கும் விநோத விசித்திரங்களை வெகு நேரம் பார்த்துக் கொண்டிருக்கவேண்டும் போல் அவருக்கு ஆசையாக இருந்தது. இவ்வளவு அருமையான இந்த மகோன்னத மண்டபம் சரியாகத்

துலங்கும்படி விளக்குப் போடவில்லை. இதைச் சுத்தம் செய்யாமல் அலங்கோலமாய் வைத்திருக்கிறார்களே! இதன் சில பகுதிகளை அடைத்தே வைத்துவிட்டார்கள். அவைகளைப் பண்டக சாலைகளும் களஞ்சியங்களுமாகத் தடுத்திருக்கிறார்கள். இங்கிலீஷ்காரர் இதுவரை பார்த்த அத்தனை க்ஷேத்திரங்களுள் எதிலும் இதைப் போல் கம்பீரமான - ரம்மியமான - ஒரு மண்டபத்தைக் காணவேயில்லை. ஆனால் இது எவ்வளவு அவந்தரையாய், குப்பையும் கூளமுமாய், அநாதரவாய்க் கிடக்கிறது! இதைச் சுற்றிலும் இரும்புக் கிராதி போட்டிருக்கிறார்கள். இதற்கு ஒரு காவல்காரன் வேறே நிற்கிறான். இதன் பெருமைகளைக் காண வருவோரிடமெல்லாம் அவன் கட்டணம் வேறு வசூலித்து விடுகிறான். வருஷந்தோறும் வரும் ஆயிரக்கணக்கான ஏழை எளிய யாத்திரிகர்கள் இந்த மாட்சி மிக்க மண்டபத்தைப் பார்க்க இங்கே அநுமதிக்கிறார்களோ? இதற்கும் இது போன்ற இன்னும் பல கேள்விகளுக்கும் வழிகாட்டியால் பதில் சொல்ல முடியவில்லை.

திரும்பவும் பெரிய பிராகாரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே சுவரில் ஒரு சிறிய துவாரம் இருந்தது. அதன் வழியாகக் கர்ப்பக் கிருகத்தின் விமானத்தைப் பார்க்க முடிந்தது. ஜாதி ஹிந்துக்களை மட்டுமே அதற்குள் பிரவேசிக்க விடுவார்கள். விமானம் ஒரே தங்கமயமாய், ஆத்திரங்கொண்டது போல் சூரியனுக்குப் போட்டியாக ஜொலித்துக்கொண்டிருந்தது.

முன்னே வழிகாட்டியைச் சந்தித்த இடத்துக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்கள். தனக்குரிய சம்மானத்தைப் பெற்றுக்கொண்டு அவன் விடை பெற்றான்.

இருண்ட பிராகாரத்தில் வெள்ளைக்காரர் மெல்ல மெல்ல நடந்தார். கைக்கடிகாரத்தைப் பார்த்தார். அவர் எதிர்பார்த்ததை விட அதிக நேரம் ஆகியிருந்தது. ஆயினும் ஸ்டேஷனுக்குச் சென்று உணவு கொண்டு சிரமபரிகாரம் செய்துகொள்ளப் போதிய அவகாசம் இருந்தது.

வெளிப் பிராகாரத்துக்கு வந்து அவர் மறுபடியும் சிறிது தயங்கி நின்றார். வர்ணமும் இயக்கமும் நிறைந்த அந்தக் காட்சி அவர் மனத்தைப் பரவசப் படுத்தியது. அவருக்கு அருகே ஓர் ஏழைக் குடியானவக் குடும்பம் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தது. அவர்களுக்குப் பக்கத்திலே கை இல்லாத முடவன் ஒருவன் உட்கார்ந்திருந்தான். சற்று அப்பால் ஒருத்தி ஒரு சாக்கு நிறையப் பூக்களை வைத்துப் பரபர என்று மாலை கட்டிக்கொண்டிருந்தாள். ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும் போதும் ஒரு புதுமையான காட்சி தென்பட்டது.

இங்கிலீஷ்காரரை யாரும் சட்டை செய்யவில்லை. பிச்சைக்காரர்கூடத் தொல்லை செய்யவில்லை. இந்தியாவுக்கு ஐரோப்பியர் வருவதற்கு வெகு காலத்துக்கு முன்பே இந்தக் கோயில் செழித்திருந்தது; இன்றும் செழிப்பாக இருக்கிறது. இதில் உள்ள தெய்வங்கள் மிக்க சக்திவாய்ந்திருக்கின்றன. எண்ணற்ற பக்தர்கள் இங்கே வருகிறார்கள். கண்ணை அகல விழித்துக்கொண்டுதான் வருகிறார்கள்; ஆனால், இங்குள்ள அற்புதங்களைக் காணும் ஆவல் அவர்களுக்கு

இல்லை. தாம் தன்னந்தனியே இருப்பதாக ஓர் ஏக்கம் இங்கிலீஷ்காரருக்குத் திடீரென்று ஏற்பட்டது. பையனிடமிருந்து ஜோட்டை வாங்கிக் காலிலே அணிந்துகொண்டார்.

அவர்கள் திரும்பவும் ஸ்டேஷனை அடைந்தபோது, இங்கிலீஷ்காரர் மிகவும் களைத்துப் போனார்.

வண்டியிலிருந்து அவர் இறங்கினார். உடனே டிக்கட் ஜன்னலுக்குப் போனார். வண்டிக்காரப் பையனும் பின்தொடர்ந்தான். டிக்கட் விற்கும் குமாஸ்தா ஜோராய் இங்கிலீஷ் பேசினார். பையனுக்கும் பிரயாணிக்கும் இடையே துபாஷியாக உத்தியோகம் புரிய அவர் இசைந்தார்.

பையனிடம் குமாஸ்தா பேசினார். அவன் சொன்ன ஏதோ பதிலைக் கேட்டுக் 'கொல்' என்று சிரித்தார். "ஸார், நீங்கள் இருபது ரூபாய் கொடுப்பீர்கள் என்று அவன் சொல்லுகிறான்" என்று இங்கிலீஷ்காரரிடம் சொன்னார். இதைச் சொல்லிவிட்டு மறுபடியும் சிரித்தார்.

இங்கிலீஷ்காரரின் தாடை தொங்கிப் போயிற்று. "என்ன அநியாயம்!" என்றார்.

குமாஸ்தா தலையை அசைத்தார். "முட்டாள் பயல்! இது ரொம்ப அநியாயம் என்று அவனிடமே நான் சொல்லிவிட்டேன்" என்றார்.

இதற்குள் ஒரு பெரிய கும்பல் கூடிவிட்டது. ஜட்காவாலாக்கள், சோம்பேறிகள் இப்படிப் பலர் கூடி, சத்தம் போட்டு ஏதேதோ பேசிக்கொள்ளத் தொடங்கினார்கள்.

குமாஸ்தா உடம்பைக் குலுக்கிக் கேலியாக முகத்தைச் சுளித்துக்கொண்டே, "இதோ ஒரு போலீஸ்காரனுக்குச் சொல்லி அனுப்பியிருக்கிறேன். வந்துவிடுவான்" என்று இங்கிலீஷ்காரருக்குச் சொன்னார்.

"போலீஸ்காரன் எவனும் வேண்டாம். பையனை ஏமாற்ற எனக்கு இஷ்டம் இல்லை. என்னை அவன் ஏமாற்றவும் நான் இடங்கொடுக்க மாட்டேன். நியாயமான சத்தம் என்ன?"

இங்கிலீஷ்காரருக்கு மிகவும் சங்கடமாய்ப் போயிற்று. இதில் என்னவோ அசட்டுத்தனம் நேர்ந்திருக்கிறது என்று அவர் எண்ணினார். இந்தப் பையன் இருபது ரூபாய் கிடைக்கும் என்று எப்படி எதிர்பார்க்கிறான்? ரொம்ப விபரீதமாயிருக்கிறதே!

பையனையும் பிரயாணியையும் கேள்விகள் கேட்டார் குமாஸ்தா. வண்டியை அமர்த்தின நேரம் என்ன, பிரயாணம் செய்த தூரம் எவ்வளவு என்ற விவரங்களை அறிந்துகொண்டார். பையன் கேட்கும் பணத்தில் மூன்றில் ஒரு பகுதி கொடுத்தால், அதுவே அதிகம் என்று குமாஸ்தா அபிப்பிராயப்பட்டார்.

"ஏழு ரூபாய் கொடுக்கிறேன் என்று அவனிடம் சொல்லுங்கள்" என்றார் இங்கிலீஷ்காரர். ஜேபியிலிருந்து பணத்தையும் எடுத்தார்.

ஆனால் இந்தத் தொகையைக் கேட்டதுமே, சட்டென்று பையன் பின்புறம் திரும்பி, கைகளைப் பிசைந்துகொண்டு, என்னவோ கூச்சலிட்டான்.

"இந்தப் பயல்களெல்லாம் அறிவில்லாதவர்கள்; ரொம்ப முட்டாள்கள், ஸார். ஏழு ரூபாயை வாங்க மாட்டானாம். என்னவோ

முட்டாள்தனமாகப் பேசுகிறான். அம்மன் பெயரையெல்லாம் இழுக்கிறான். போலீஸ்காரனுக்குத்தான் சொல்லியனுப்ப வேண்டும், ஸார்'' என்றார் குமாஸ்தா.

''அம்மனா? பார்வதியா?''

''மீனாட்சி, ஸார்'' என்று திருத்தினார் குமாஸ்தா.

அம்மனா? அம்மனைப்பற்றி என்ன வந்தது? வெயில்கோளாறினால் அவன் புத்தி பேதலித்துவிட்டதோ என்று இங்கிலீஷ்காரர் ஆச்சரியப்பட்டார்.

இந்தச் சமயத்தில் போலீஸ்காரன் வந்து சேர்ந்தான். கும்பலின் இரைச்சல் கொஞ்சம் பலத்துப் பிறகு ஒடுங்கியது.

பையனின் கையைப் பிடித்துக்கொண்டான் போலீஸ்காரன். பையன் அழுதுகொண்டிருந்தான். குமாஸ்தா மறுபடியும் கலகல என்று சிரித்தார்.

''யாரோ ஒரு வெள்ளைக்காரர் வந்து நியாயமான சத்தத்துக்கு மேல் மிக அதிகமாகப் பையனுக்குப் பணம் கொடுப்பார் என்று அம்மன் சொன்னாளாம். இப்படிச் சொல்லுகிறான், ஸார், பையன்.''

இங்கிலீஷ்காரரின் முகம் தெளிவடைந்தது. புத்தம் புதிய ஐந்து ரூபாய் நோட் ஒன்றை எடுத்தார். வேண்டாமென்று பையன் நிராகரித்த எழு ரூபாய்க்குமேல் இந்த நோட்டை வைத்தார். பையனிடம் நீட்டினார். பையனின் முகத்தில் வழிந்த கண்ணீர் முத்துக்களுக்கு இடையிலே ஒரு புன்சிரிப்புத் தோன்றியது. பையன் தலை குனிந்து வெள்ளைக்காரரின் பாதத்தைத் தொட்டான். சுற்றிலும் நின்ற ஜனங்களும் குமாஸ்தாவும் போலீஸ்காரனுங்கூடப் புன்சிரிப்புப் பூத்தார்கள். இங்கிலீஷ்காரருமே புன்சிரிப்புப் பூத்தார். பையன் கைகளைக் குவித்து எந்திப் பணத்தைப் பெற்றுக்கொண்டான். மீண்டும் ஒரு முறை தலை குனிந்து வணங்கிவிட்டு, அதிவேகமாக ஸ்டேஷன் கட்டிடத்தை விட்டு வெளியேறி மறைந்துவிட்டான். கும்பலும் கலைந்தது. போலீஸ்காரன் மட்டும் சற்றுத் தியங்கி நின்றான். அவன் எதிர்பார்த்த இனாம் கிடைத்ததும், அவனுங்கூட நகர்ந்து மறைந்தான்.

''ஒருகால் என்னை ஓர் அமெரிக்கன் என்று அந்தப் பையன் நினைத்துவிட்டானோ?'' என்று வாய்விட்டுச் சொல்லி ஆச்சரியப்பட்டார் இங்கிலீஷ்காரர்.

''ஆமாம், ஸார்'' என்று உடம்பைக் குலுக்கிக்கொண்டே சொன்னார் குமாஸ்தா.

அம்மன் மிகவும் சக்திவாய்ந்தவள்தான்; என்றாலும், வெள்ளைக்காரர் எல்லாருமே பைத்தியக்காரர்கள் என்பது குமாஸ்தாவின் அபிப்பிராயம். ஆகவே, அவர்கள் சொல்லுவதற்கெல்லாம் ஒத்துப் பாடுவதுதான் சரி என்று குமாஸ்தா எண்ணினார். அம்மனை அவர் பிரமாதமாகப் புகழத் தொடங்கினார். ஆனால், இங்கிலீஷ்காரர் மெல்ல நழுவிவிட்டார்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.



நோயால் வாடித் தவிப்போரைக் கபீரின் ஒரு பாட்டைப் பாடிக் குணப்படுத்துவது சாத்தியமில்லை என்று நான் கண்டிருக்கிறேன். பசியால் வாடும் கோடிக்கணக்கான மக்கள் வேண்டுவது ஒரே ஒரு பாட்டைத்தான்—களை தீர்த்துத் தெம்பு கொடுக்கும் சோற்றையே. அதை யாரும் அவர்களுக்குத் தானம் கொடுக்க முடியாது. அவர்களேதான் சம்பாதித்துக்கொள்ளவேண்டும்; நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்தே சம்பாதித்துக்கொள்ளவேண்டும்.

—மகாத்மா காந்தி, ('யங் இந்தியா', 13-10-'21)

October '52 Regd. No. M. 4975

மஞ்சரி

நந்தன - ஐப்பசி

ஊரும் உலகமும்		1
யானை பிடிக்கும் குழி	திருவிதாங்கூர் - கொச்சிச் செய்தி	3
ராமனின் பிரதிக்கினை		6
அமெரிக்கத் தேர்தல்		10
பணக் குண்டு	கனடியன் ஆர்மி	12
கொம்பின் உச்சியில்		15
நாட்டிய சாலை	பாரதி	17
'வலை' விமர்சனம்	சங்கர்ஸ் வீக்லி	22
குருவிக் குடிசை		25
இந்தியக் கார்	பம்பாய்க் கிரானிக்கிள்	30
முத்துமாலை	ஓரியெண்ட்	33
இந்திய ஜனத்தொகை	மாடர்ன் ரெவ்யூ	38
கார்ட்டூன் கதம்பம் (படம்)		40
ராணுவம் பயன்பட வழி	இந்தியன் ரெவ்யூ	42
பார்லிமெண்டில் 'க்யூ'	வக்கீல்	45
பணம் போகிற விதம்		48
ரேடியோ ஒலிப்பதிவு	இந்தியன் லிஸனர்	49
விநோபா யார்?	ஸர்வோதயம்	52
தர்ம உபதேசம்	ஃபோரம்	55
நம் பத்திரிகைகள்	ஃப்ரீ இந்தியா	57
நீஞ்சாமல் மிதக்கலாம்		62
ரமணர் : வாழ்வும் வாக்கும்		66
ஈரானின் சூத்ரதாரி	எவ்வரிபடீஸ் வீக்லி	69
அம்மன் அருள் (கதை)	ஜான் ஹாம்ஸன்	78